


# புரட்சிப் பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | periyardk.org | திருவள்ளுவர் ஆண்டு 2041 | ஜனவரி 06, 2010 | புரட்சி 9 | முழக்கம் 52 | விலை: ரூ.2.50


## திருச்சியில் கூடிய தமிழ் நாடு மாணவர் கழகத்தின் தீர்மானங்கள்

# மாநில கல்வி உரிமை மீட்பு மாநாடு

*மருத்துவக் கல்லூரி பொது நுழைவுத் தேர்வைக் கண்டித்து, கல்வி நிறுவனங்கள் முன் 15 நாள் வாயில் பரப்புரைக் கூட்டங்கள் நடத்தவும், பிப்.15 இல் கோவையில் மாநில கல்வி உரிமை மீட்பு மாநாடு நடத்தவும், பெரியார் திராவிடர் கழகத்தின் முன்னணி அமைப்பான தமிழ்நாடு மாணவர் கழகம் முடிவு செய்துள்ளது. கல்வி, இடஒதுக்கீடு, கல்விக் கட்டணம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகள் பற்றி கூட்டத்தில் விரிவாக ஆலோசிக்கப்பட்டது. பிற்பகல் 3 மணி வரை கூட்டம் நடந்தது. இறுதியாக கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.*

1. 2011 - 2012 கல்வி ஆண்டிலிருந்து எம்.பி.பி.எஸ். மருத்துவக் கல்விக்கு அகில இந்திய அளவில் பொது நுழைவுத்தேர்வு நடத்த இருப்பதைக் கண்டித்தும், கல்வியில் மாநில உரிமைகளை அடியோடு பறிக்கும் நோக்கத்தில் மத்திய அரசு தேசிய உயர்கல்வி ஆராய்ச்சி ஆணையம் அமைக்க உள்ளதைக் கண்டித்தும், அகில இந்திய அளவில் வழக்கறிஞர்களுக்கான தகுதித் தேர்வு நடத்துவதைக் கண்டித்தும் தமிழ்நாடு தழுவிய அளவில் பள்ளி - கல்லூரிகள் முன்பு 15 நாட்களுக்கு வாயிற்கூட்டப் பரப்புரைப் பயணம் நடத்துவது என முடிவு செய்யப்படுகிறது.

2. ஜனவரி 31 ஆம் நாள் சென்னை மருத்துவக்கல்லூரி (MMC) முன்பு பயணத்தைத் தொடங்கி பிப்ரவரி 14 கோவை அரசு மருத்துவக்கல்லூரியில் (CMC) நிறைவு செய்வது என்றும், நிறைவு நாளான பிப்ரவரி 15 அன்று கோவையில் “மாநில கல்வி உரிமை மீட்பு மாநாடு” நடத்துவது என்றும், மார்ச்சு மாத இறுதிக்குள் ஆந்திர மாநிலத் தலைநகரான ஹைதராபாத்தில் அகில இந்திய அளவிலான “மாநிலங்களின் கல்வி உரிமை மீட்புக் கருத்தரங்கம்” நடத்துவது என்றும் முடிவு செய்யப்படுகிறது.

3. அகில இந்திய அளவிலான பொது நுழைவுத் தேர்வுகளை எதிர்த்து தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பில் துண்டறிக்கை, சிறு நூல், குறும்படம் ஆகியவைகளைத் தயாரித்து விநியோகிப்பது என முடிவு செய்யப்படுகிறது.

4. 1976 ஆம் ஆண்டு மிசா காலத்தில் 42 ஆவது திருத்தச் சட்டத்தின்படி பொதுப்பட்டியலில் மத்திய அரசின் பிடியில் கல்வித்துறை சிக்கியது. அதன்பிறகு கல்வித் துறையை பொதுப்பட்டியலில் இருந்து மாநிலப் பட்டியலுக்கு மீட்பதற்கு இன்றுவரை எந்த முயற்சியும் செய்யாமல் இருக்கும் தமிழ்நாட்டு அரசாங்கங்களை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிப்பதோடு. பொது நுழைவுத் தேர்வு என்ற வகையில் மருத்துவக் கல்வியிலும், தேசிய உயர்கல்வி ஆராய்ச்சி ஆணையம் அமைப்பதன் மூலமாக அனைத்து வகையான கல்விப் பிரிவுகளிலும் தமிழ்நாட்டு தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமையான 69 % இடஒதுக்கீட்டு உரிமை பறிபோக இருப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதையும் கண்டித்து தமிழ்நாட்டு அரசின் தலைமைச் செயலகத்தை முற்றுகையிடும் போராட்டத்தை நடத்துவது என்று முடிவு செய்யப்படுகிறது. பிப்பிரவரி 15 அன்று கோவையில் நடைபெற உள்ள மாநில கல்வி உரிமை மீட்பு மாநாட்டில் போராட்ட நாள் அறிவிக்கப்படும்.

5. அண்ணா பல்கலைக்கழகங்கள், தமிழ்நாடு அரசுப் பல்கலைக்கழகங்கள், தனியார் நிகர்நிலைப் பல்கலைக் கழகங்கள், அரசு மற்றும் தனியார் மேனிலைப் பள்ளிகளில் ஆசிரியர், பேராசிரியர், பணியாளர் தேர்வு - மாணவர் சேர்க்கை ஆகியவற்றில் 69% இடஒதுக்கீடு பின்பற்றப்படுவதில்லை. ஆகவே, இடஒதுக்கீடு - பள்ளி, கல்லூரிகளின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஆய்வு செய்தல் - பள்ளி, கல்லூரிகளுக்கு அங்கீகாரம் வழங்குதல் ஆகிய நிலைகளில் நடைபெறும் அத்து மீறல்கள் - விதிமீறல்கள் - மனித உரிமை மீறல்கள் - சமூகநீதி மீறல்கள் ஆகியவை தொடர்பாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் வழியாக புள்ளி விபரங்களைச் சேகரிப்பது என்றும், அந்தப் புள்ளி விபரங்களின் அடிப்படையில் அடுத்தகட்டமாக நீதிமன்ற நடவடிக்கைகளையும் மாணவர் - இளைஞர் போராட்டங்களையும் நடத்தி சீரழிந்து கிடக்கும் கல்வித்துறையைச் சீராக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்படுகிறது.

6. கல்வித்துறையைச் சீராக்கும் நடவடிக்கைகளுக்காக புள்ளி விபரங்கள் தயாரிக்கவும், கல்வி நிறுவனங்களை நேரடியாக ஆய்வு செய்யவும் ஒரு கல்வியாளர் குழுவை உருவாக்கவேண்டும் என்றும், நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக வழக்கறிஞர் குழு ஒன்றை உருவாக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்படுகிறது.

## மேற்கு மாவட்ட சாதிக் கொடுமைகளுக்கு எதிராக ‘கூட்டியக்கம்’ களமிறங்குகிறது

23.12.2010 வியாழன் அன்று மாலை 5 மணிக்கு ஈரோட்டில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் பல்வேறு அமைப்புகள் கலந்து கொண்ட கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. மேற்கு மாவட்டங்களில் தொடர்ச்சியாக நடந்து வருகிற தீண்டாமை கொடுமைகளை தடுத்து நிறுத்துவதற்காக “சாதி ஆதிக்க எதிர்ப்புக் கூட்டியக்கம்” என்ற பெயரில் அனைத்து அமைப்புகளையும் ஒருங்கிணைத்து திருப்பூர் மாவட்டம் காங்கேயம் அருகே உள்ள முத்தூரில் போராட்டம் நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

நம் நாட்டில் நாள்தோறும் சாதி தீண்டாமைக் கொடுமைகள் நடந்த வண்ணம் இருக்கிறது. குறிப்பாக மேற்கு மாவட்டங்களில் தீண்டாமைக் கொடுமைகள் மிக மோசமாக தலை விரித்தாடுகிறது. திருப்பூர் மாவட்டம் காங்கேயம் அருகே உள்ள கல்லேரி என்ற ஊரைச் சார்ந்தவர் சாமிதுரை. இவர் முத்தூரில் உள்ள தமிழ்நாடு மின்சார வாரியத்தில் “இள மின் பொறியாளராக” பணியாற்றி வருகிறார். சாமிதுரை ஒரு தாழ்த்தப்பட்டவர் என்பதாலும், நேர்மையானவர் என்பதாலும் அப்பகுதியைச் சார்ந்த ஆதிக்கசாதி வெறியர்களாலும், அரசியல்வாதிகளாலும், சில மின் வாரிய ஊழியர்களாலும் சாமிதுரை மீது திட்டமிட்டு பல பொய்க் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. உயர் சாதிக்காரர்களை மதிப்பதில்லை என்பதில் தொடங்கி, மன நோயாளி, தடைசெய்யப்பட்ட இயக்கத்தைச் சார்ந்தவர் என்று அரசியல் ரீதியாகவும், துறை ரீதியாகவும் பல்வேறு தாக்குதல்களை தாங்கி வந்த சாமிதுரை, கடந்த அம்பேத்கர் பிறந்த நாளான 6.12.2010 அன்று, ஆதிக்க சாதி வெறியர்கள், அலுவலகத்திற்குள்ளேயே நுழைந்து, சாதியின் பெயரால், தகாத வார்த்தைகளாலும் திட்டியும், தாக்கியும் உள்ளனர். காவல் நிலையத்தில் முறையிட்ட சாமிதுரைக்கு நியாயம் கிடைக்கவில்லை. காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு கூட செய்யப்படாத நிலையில் இவை அனைத்தையும் வெளிக் கொண்டு வர வேண்டும் என்ற நோக்கத்தோடு, கூட்டப்பட்ட இக் கலந்துரையாடல் கூட்டத்தில், விடுதலை சிறுத்தைகள், ஆதித் தமிழர் பேரவை, ஆதித் தமிழர் விடுதலை முன்னணி, புதிய தமிழகம், நாம் தமிழர், தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம், சாதி ஒழிப்பு விடுதலை முன்னணி, தமிழ் தேசிய விடுதலை இயக்கம், மக்கள் கலை இலக்கிய கழகம் ஆகிய அமைப்புகளை சார்ந்தவர்கள் கலந்து கொண்டனர்.

இதுபோன்ற கொடுமைகளுக்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க, அரசின் கவனத்துக்கு கொண்டு செல்லவும், ஆதிக்க சாதியினர் தொடர்ந்து வன்கொடுமை நடத்தி வருவதை தடுக்கவும், ஆதிக்க சாதியினருக்கு ஒரு அச்சத்தை உண்டாக்குகிற வகையிலும், பெரும்பாலான அமைப்புகளின் மாநில தலைவர்களை வரவழைத்தும், அதிக எண்ணிக்கையில் பொது மக்களை திரட்டி மிகப் பெரிய போராட்டத்தை நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

## ‘தேச விரோதம்’ என்ற சட்டப் பிரிவு நீக்கம்: அமெரிக்க தேசியக் கொடியை எரிப்பதை அந்நாட்டு சட்டம் அனுமதிக்கிறது

இந்தியாவின் தேசப் பற்றை அமெரிக்காவிடம் அடகு வைத்தால் அது குப்பர் தேசபக்தி. பார்ப்பன நாயகம் அந்த தேசபக்தியை தலையில் தூக்கி வைத்துக் கூத்தாடுகிறது. இந்தியாவின் அரசியலை, பொருளாதாரத்தை அமெரிக்காவிடம் அடகு வைப்பதில் ஆர்வமும், ஆவேசமும் காட்டும் தேச பக்தியாளர்களைக் கேட்கிறோம், அதே அமெரிக்காவில் தேச விரோதம் (Sedition) எப்படிப் பார்க்கப்படுகிறது ?

அமெரிக்காவிலே தேச விரோதக் குற்றச்சாட்டை ஒருவர் மீது எந்த சூழ்நிலையில் பயன்படுத்த முடியும் தெரியுமா ? நாட்டில் யுத்தப் பிரகடனம் அமுலில் உள்ள காலத்தில் மட்டும் தான். அமெரிக்க உச்சநீதிமன்றம் ‘தேசவிரோத’ப் பேச்சுகளையும், பேச்சுரிமையாகவே அங்கீகரித்திருக்கிறது. அமெரிக்காவின் அரசியல் சட்டத்தில் கொண்டு வரப்பட்ட முதல் திருத்தமே ‘தேச விரோதம்’ என்பதற்கான கடுமையான வரையறைகளைத் தகர்த்தது தான்.

அமெரிக்காவின் தேசியக் கொடியை எரிப்பது கூட அந்நாட்டுச் சட்டத்தின் படி ‘தேச விரோத’ நடவடிக்கையாகாது. ஆனால் தமிழ்நாட்டில் அமெரிக்கக் கொடியை எரித்தால், உடனே இங்கே ‘தேச விரோத’ சட்டங்கள் பாய்ந்து விடும். அமெரிக்க உச்சநீதிமன்றம் 1969 ஆம் ஆண்டு அளித்த தீர்ப்பில் (Brandenberg vs Ohio) தேசத் துரோக சட்டப் பிரிவுகளை முழுமையாக செயலற்றதாக்கி விட்டது. அமெரிக்க தேசியக் கொடியை எரிப்பது குற்றம் என்ற சட்டத்தையாவது கொண்டு வரவேண்டும் என்று பலமுறை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன, அந்த முயற்சிகள் முறியடிக்கப்பட்டே வந்துள்ளன.

அமெரிக்காவின் சட்டப்படி சுயநிர்ணய உரிமை கோருவதும் பிரிந்து செல்ல விரும்புவதற்கு குரல் கொடுப்பதும் சட்டப்படி குற்றம் அல்ல. அமைதியாக ஜனநாயக வழியில் தேசியக் கொடியை எரிக்கவும், அரசு அங்கீகரித்துள்ள சின்னங்களை அவமதிப்பதும் குற்றமாகாது. கனடா, எத்தியோப்பியா, ஆஸ்திரியா, பிரான்சு போன்ற நாடுகளில் அமைதியாக ஜனநாயக வழிமுறையில் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்திப் பேச சட்டம் அனுமதிக்கிறது.

எதற்கெடுத்தாலும் அமெரிக்காவின் பாதையில் ஓட விரும்பும் போலி தேச பக்தர்கள் பார்ப்பனர்கள், அங்கே வழங்கப்பட்டிருக்கும், இந்த உரிமைகள், இந்தியாவிலும் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்த மறுப்பது ஏன் ? பதில் சொல்வார்களா ?

**பினாயக் சென்னுக்கு ஆதரவு தெரிவித்து நடந்த கூட்டத்தில் விடுதலை இராசேந்திரன் உரையிலிருந்து**

**(முழு உரை உள்ளே)**

# மக்கள் சேவை புரிந்த மருத்துவருக்கு ஆயுள் தண்டனை: பினாயக் சென்னுக்கு எதிரான சூழ்ச்சி வலை

*தமிழக மக்கள் உரிமைக் கழக சார்பில் ஜனவரி 1 ஆம் தேதி சென்னை தியாகராயர் நகர் சி.டி.நாயகம் மேல்நிலைப் பள்ளியில் பினாயக் சென்னுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டதைக் கண்டித்து வழக்கறிஞர் பா. புகழேந்தி தலைமையில் நடந்த கூட்டத்தில் பங்கேற்று கழக பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆற்றிய உரையின் தொகுப்பு.*

பினாயக் சென் என்ற மனித உரிமைப் போராளிக்கு சத்திஸ்கரில் உள்ள ராய்ப்பூர் கூடுதல் அமர்வு நீதிமன்றம் டிசம்பர் 24 இல் ஆயுள் சிறைத் தண்டனை வழங்கியுள்ளது. இந்திய குற்றவியல் சட்டப் பிரிவு 120(அ), 124(ஆ) மற்றும் சத்தீஸ்கர் மாநில மக்கள் பாதுகாப்புச் சட்டம் என்ற காட்டுமிராண்டி சட்டத்தின் பிரிவுகள் 8(1), 8(2), 8(3), 8(5) சட்ட விரோதச் செயல்கள் தடுப்புச் சட்டம் 39(2) ஆகிய பிரிவுகளின் கீழ், அவர் தண்டிக்கப்பட்டுள்ளார்.

பினாயக்சென் அடிப்படையில் குழந்தைகள் நல மருத்துவர்; தமிழ்நாட்டில் வேலூரில் உள்ள கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரியில் தான் 1972 இல் படிப்பை முடித்தார். குழந்தைகள் நல மருத்துவத்தில் மேல் பட்டப் படிப்பும், அதே கல்லூரியில் 1976 இல் முடித்தவர். நேர்மையில்லாத இந்த உலகில், மருத்துவருக்கான தொண்டுக்கு புதிய இலக்கணம் வகுத்து செயல்பட்டார் என்பதற்காக வேலூர் கிறிஸ்துவ மருத்துவக் கல்லூரி பால் ஹார்ரிசன் என்ற மனித சேவை விருதை 2004 ஆம் ஆண்டு வழங்கி பெருமைப்படுத்தியது. படிப்பை முடித்தவுடன், புதுடில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் இயங்கும், சமூக மருத்துவம் மற்றும் சுகாதார மேம்பாடு மய்யத்தில் இணைந்து இரண்டு ஆண்டுகள் பணி புரிந்தார். தொடர்ந்து மத்திய பிரதேசத்தில் ஹோஷன்பாட் மாவட்டத்தில் ரசூலியா என்ற பகுதியில் மக்களிடம் நேரடியாகச் சென்று சேவை செய்யும் நண்பர்கள் கிராம மய்யத்தில் இணைந்து பணியாற்றினார். மக்களின் வியாதிகளைக் கண்டறிவதும், காச நோய்க்கு சிகிச்சை செய்வதும், இந்த அமைப்பின் பணிகளாகும்.

உழைக்கும் ஏழை மக்கள் காச நோயில் பெருமளவு பாதிக்கப்படுவதற்குக் காரணம். அவர்களது சமூக பொருளாதார பின்னணியே என்பதை அனுபவத்தில் கண்டறிந்த சென், உருக்காலை அமைந்துள்ள பிலாய் நகரில், சுரங்கத் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்கள், காச நோயால் பெருமளவு பாதிக்கப்பட்ட நிலையில், அவர்களுக்கு மருத்துவ சேவை செய்ய முன்வந்தார். தள்ளி - ராஜ்ஹரா என்ற பகுதியில் மருத்துவ நண்பர்களுடன் இணைந்து, சிறிய மருத்துவமனை ஒன்றை அமைத்தார். அப்போது சத்திஸ்கர் பகுதி ம.பி. மாநிலத்திலே இருந்தது. அப்பகுதியில் சுரங்கத் தொழிலில் ஈடுபட்டு வந்த ஒப்பந்த தொழிலாளர்கள் தொழிற்சங்கம் ஒன்றை நடத்தி வந்தனர். இந்தத் தொழிற்சங்கத்தில் தொழிலாளர்கள் உரிமைக் காகப் போராடிய தொழிற் சங்கத் தலைவர் சங்கர் குகா நியோகி, தொழிலதிபர்களின் சதியால் 1991 இல் படுகொலை செய்யப்பட்டார். நியோகியுடன் இணைந்து தொழிலாளர்களுக்கு மருத்துவ சேவை வழங்கிய பெருமையும் சென்னுக்கு உண்டு.

பிறகு, தொழிலாளர்களே தங்களுக்கான மருத்துவமனை ஒன்றை உருவாக்கிக் கொள்ள (ஷாஹீத் மருத்துவமனை) சென் உதவினார். மிகவும் குறைந்த கட்டணத்தில் தொழிலாளர்களுக்கு, இந்த மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. சென்னின் இந்த மருத்துவ சேவை மக்களிடையே அவருக்கு பெரும் புகழைக் கொண்டு வந்து சேர்த்து, மக்கள் மருத்துவர் என்று பெயர் பெற்றார். தொழிலாளர்கள் சேவையைத் தொடர்ந்து, பழங்குடியின மக்களின் மருத்துவ சேவையிலும், சென் இறங்கினார். சத்திஸ்கரில் தாம்த்தரி (Dhamtari) மாவட்டத்தில் உள்ள பக்ரும்நாலா கிராமத்தில் பழங்குடி மக்கள் மேம்பாட்டுக்கான சுகாதார சேவைகளில் இறங்கினார்.

பினாயக் சென் மக்கள் சிவில் உரிமைக் கழகம் (பி.யு.சி.எஸ்.) என்ற மனித உரிமை அமைப்பின் தேசிய துணைத் தலைவராகவும் உள்ளார். இந்த அமைப்பு 1976 ஆம் ஆண்டு அன்றைய இந்திராகாந்தி தலைமையிலான காங்கிரஸ் ஆட்சி, கட்டவிழ்த்துவிட்ட ‘அவசரகால’ அடக்குமுறைக்கு எதிராக மறைந்த ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்களால் தொடங்கப்பட்டதாகும். மருத்துவத்தோடு நின்று விடாது, மனித உரிமைக்கும் மருத்துவ சேவையை பழங்குடி உழைக்கும் மக்களுக்கு கொண்டு செல்வதிலும் அர்ப்பணித்துக் கொண்ட மனித உரிமைப் போராளியை, ‘இந்தியாவின் பார்ப்பன முதலாளித்துவ ஆளும் வர்க்கம் வழமைபோல் ‘தீவிரவாதி’,



‘தீவிரவாதிகளுக்கு உதவுகிறவர்’ என்ற முத்திரையை குத்தியது. சென் மீது அரசு அடக்குமுறை எந்திரமான காவல்துறை குற்றச்சாட்டுகளைத் தேடத் தொடங்கியது. சென் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் என்ன ?

சிறையில் அடைக்கப்பட்டுள்ள நாராயன்சன்யால் என்ற நக்சலைட் தலைவரிடமிருந்து 3 கடிதங்களைப் பெற்று கல்கத்தாவில் உள்ள சிலரிடம் கொடுக்கும் ‘கூரியர்’ வேலை செய்தார் என்பதும், இது தேசத் துரோக நடவடிக்கை என்பதும் தான். சென் மீது காவல்துறை ‘புனைந்த’ ‘பயங்கர’ குற்றச்சாட்டு; சிறையில் உள்ள நாராயன் சன்யால், வயது முதிர்ந்தவர்; பி.யு.சி.எல். அமைப்பின் பொறுப்பாளர் என்ற முறையில் மனித உரிமைக் கடமைகளை செயலாற்ற முன் வந்த சென், அவரை சிறைச்சாலைக்கு சென்று அடிக்கடி சந்தித்து, சன்யால் அடிப்படைத் தேவைகளுக்கு உதவிசெய்து வந்தார். ஒவ்வொரு சந்திப்பின் போதும் சென், மனித உரிமை அமைப்பு செயலாளர் என்ற முறையிலேயே சிறை அதிகாரிகளிடம் அனுமதி பெற்று சந்தித்தார். அவரது சந்திப்பு அதிகாரிகளால், கண்காணிக்கப்பட்டு வந்தது. சந்திப்புக்குப் பிறகு, சோதனைகளுக்கு உட்பட்டே சென் வெளியே வருவார். ஒவ்வொரு சந்திப்பும் சிறை ஆவணங்களில் பதிவு செய்யப்பட்டது. இந்த நிலையில், சிறை அதிகாரிகளின் பார்வையோடு நிகழ்ந்த சந்திப்பில் அதிகாரிகளுக்கு தெரியாமல் ரகசியமாக, கடிதங்களை கையளிக்கும் வாய்ப்புகள் இல்லை. ஆனால் பழியை எப்படிப் போடலாம் என்று காவல்துறை திட்டமிட்டது.

கல்கத்தாவில் உள்ள தொழிலதிபர் பியுஷ்குகா என்பவரிடம் சிறையிலுள்ள நாராயண் சன்யால் என்ற நக்சலைட் தலைவர் எழுதிய கடிதங்கள் கைப்பட்டதாகவும் அந்தக் கடிதத்தை சிறையிலிருந்து ரகசியமாகக் கொண்டு வந்து, பியுஷ்குகாவிடம் சேர்க்கும் ‘தேசத் துரோகத்தை’ செய்தவர் - பினாயக் சென் என்றும், சட்டீஸ்கர் காவல்துறை குற்றம் சாட்டியது.

2007 ஆம் ஆண்டு மே 14 ஆம் தேதி விசாரணைக்கு வருமாறு அழைத்து காவல்துறை டாக்டர் சென்னுக்கு ‘சம்மன்’ அனுப்பியது. காவல்துறை ‘சம்மனை’ ஏற்று டாக்டர் சென் காவல்நிலையம் சென்றார். அங்கே சட்டீஸ்காரின் சட்டவிரோத தடுப்பு நடவடிக்கைகள் சட்டம் (1967), சத்தீஸ்கர், சிறப்பு மக்கள் பாதுகாப்பு சட்டம் (2005) ஆகியவற்றின் கீழ் - பினாயக் சென், கைது செய்யப்பட்டார். சட்டீஸ்கரில் அமுலில் உள்ள இந்தச் சட்டங்கள் மனித உரிமைகளுக்கு எதிரான காட்டுமிராண்டி சட்டங்களாகும். ‘தடா’, ‘பொடா’ சட்டங்கள் நாடாளுமன்றத்தில் நீடிக்கப் படாமல் செயலலிழந்து போன நிலையில் அந்த சட்டத்தின் பிரிவுகளை உள்ளடக்கி சத்திகர் மாநில அரசு இந்த சட்டத்தைக் கொண்டு வந்தது. அத்துடன் தேச விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்கான இந்திய தண்டனைச் சட்டப் பிரிவும் (124ஏ) சேர்க்கப்பட்டு விசாரணைக் கைதியாக, சென் சிறையில் அடைக்கப்பட்டார். இரண்டு ஆண்டு காலம் தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த சென், மாவட்ட நீதிமன்றங்கள் பிணை மறுத்ததைத் தொடர்ந்து உச்சநீதி மன்றம் போனார். 2004 ஆம் ஆண்டு மே 25 ஆம் தேதி உச்சநீதிமன்றம் அவருக்கு பிணை வழங்கியது. சென் கைதைக் கண்டித்து நாடு முழுதும் கண்டனங்கள் எழுந்தன. இவர் சிறையிலிருந்த காலத்தில் சுகாதார சேவை மற்றும் மனித உரிமைகளுக்காக வழங்கப்படும் ஜோனாத்தன் மான் என்ற சர்வதேச விருது வழங்கப் பட்டது. குழந்தைகள் மரண வீதம்; வயிற்றுப் போக்கு நோயால் ஏற்படும் மரண வீதத்தைக் குறைத்தவர்களுக்கு வழங்கப்படும் இந்த சர்வதேச விருதை வாஷிங்டன் நகரில் போய் பெற வேண்டும். இந்த உயரிய விருதைப் பெற பினாயக் சென்னை சிறையிலிருந்து விடுவிக்க வேண்டும் என்று நோபல் பரிசு பெற்ற 27 அறிஞர்கள் கூட்டாக வலியுறுத்தியும், இந்திய பார்ப்பன ஆட்சி கோரிக்கையை மறுத்து விட்டது. கைதைக் கண்டிக்கும் வகையில் இந்தியா முழுதும் மருத்துவர்கள் ஏழை எளிய மக்களுக்கான இலவச மருத்துவ முகாம்களை நடத்தி தங்களது எதிர்ப்பைத் தெரிவித்தனர். நாடு முழுவதுமிருந்தும் கண்டனங்கள் வெடித்தன.

அமெரிக்க மனித உரிமை சிந்தனையாளர் நோம் கோம்ஸ்கி, நோபல் பரிசு பெற்ற பொருளியல் அறிஞர் அமர்த்யா சென், மகசேசே விருது பெற்ற அருணாராய், புக்கர் விருது பெற்ற அருந்ததி ராய், ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி ராஜேந்திர சச்சார் மற்றும் இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் சென்னின் கைதுக்கு கண்டனம் தெரிவித்தனர்.

இப்போது நக்சல் தலைவர் கடிதத்தைப் பெற்று வெளியே ஒருவரிடம் தந்த குற்றம் ‘ராஜ துரோக’ குற்றமாக்கப்பட்டு, ஆயுள் தண்டனை வழங்கப்பட்டு விட்டது. வழக்கில் முதன்மையான குற்றச்சாட்டே கடிதப் பரிமாற்றம் தான். ஆனால், ஆயுள் தண்டனை வழங்கிய ராய்ப்பூர் அமர்வு நீதிமன்றம் இந்தக் குற்றச்சாட்டை சந்தேகத்துக்கு அப்பாற்பட்டு உறுதி செய்துள்ளதா ?

கடிதங்கள் கைப்பற்றப்பட்ட முறையிலேயே காவல்துறை முன்னுக்குப் பின் முரணான தகவல்களையே முன் வைத்தது.

**(அடுத்த இதழில் முடியும்)**

## ‘அய்.எஸ்.எய்.’ என்றால்....

*பினாயக்சென் மனைவி இலினாவும் ஒரு மருத்துவர். அவர் மீதும் தேச விரோதக் குற்றச்சாட்டுகளை சட்டிஸ்கர் காவல்துறை போட்டு வழக்குத் தொடர்ந்துள்ளது. அந்தக் குற்றச்சாட்டுகள் தான் வேடிக்கையானவை.*

*இலினா. தனது மின்னஞ்சல் வழியாக டெல்லியிலுள்ள சமூக ஆய்வு நிறுவனமான இந்திய சமூக நிறுவனத்துக்கு ஒரு கடிதம் அனுப்பினார். ஆங்கிலத்தில்* Indian Social Institute *என்பது அந்நிறுவனத்தின் பெயர். சுருக்கமாக* ‘ISI’ *என்று அழைக்கப்படுகிறது. சட்டிஸ்கர் காவல்துறையோ, பாகிஸ்தான் உளவு நிறுவனமான* Indian Service Intelligence (ISI) *என்ற நிறுவனத்துக்குத் தான் கடிதம் எழுதினார் என்று வழக்குப் பதிவு செய்துள்ளது.*

*மற்றொரு மின்னஞ்சல் கடிதத்தில் அமெரிக்காவின் வெள்ளை மாளிகையை ‘சிம்பன்சி’ (ஆப்பிரிக்காவில் வால் இல்லாத குரங்கு) என்று இலினா குறிப்பிட்டுள்ளார். இந்த ‘சிம்பன்சி’ என்ற வார்த்தை நக்சலைட்டுகளால் பயன்படுத்தும் ரகசிய மொழி* (Code language) *என்று கூறி, காவல்துறை வழக்குப் பதிவு செய்துள்ளது.*

*அந்த வால் இல்லாத குரங்குகளே கூட இந்தக் குற்றச்சாட்டுகளைக் கேட்டு, வாய்விட்டுச் சிரிக்கும். இப்படித்தான் நடக்கிறது, இந்த பார்ப்பன நாயகத்தின் அரசும் காவல்துறையும்!*

## பினாயக் சென் விடுதலை கோரி ஆர்ப்பாட்டம்

*பினாயக் சென்னை விடுதலை செய்யக் கோரி பெரியார் திராவிடர் கழகம் மற்றும் காஞ்சி மக்கள் மன்றம் தோழர்கள் இணைந்து டிசம்பர் 31 ஆம் தேதி காலை 11 மணியளவில் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அருகே எழுச்சியான ஆர்ப்பாட்டம் நடத்தினர். மக்கள் மன்ற ஒருங்கிணைப்பாளர் மகேஷ் தலைமை தாங்கினார். பேராசிரியர் சரசுவதி, கழகத் தோழர்கள் தமிழ்ச் செல்வன், டேவிட் பெரியார், கேசவன், பார்வேந்தன் (விடுதலை சிறுத்தைகள்), டாக்டர் ராக்காய், பேரறிவாளன், டாக்டர் விமுனா மூர்த்தி, மகேந்திரவர்மா உள்ளிட்ட தோழர்கள் உரையாற்றினர்.*

# மண்ணுக்கு பிரிவினை கூடாது என்போர், மனிதர்களைப் பிரிவினை செய்யலாமா?

## பெரியார் கருத்தை சுட்டிக்காட்டி கொளத்தூர் மணி உரை

*பல்லடத்தில் நடந்த நாத்திகர் விழாவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆற்றிய உரை தொடர்ச்சி:*

சாதி ஆச்சாரம் என்பவை மதம் என்னும் மரத்தை சுத்திக் கொண்டிருக்கின்றன. சாதியை மதத்திலிருந்து பிரித்து எடுக்க வேண்டும். அப்படி பிரிப்பதற்கு முடியாத வகையில் சாதியும் மதமும் ஒன்றோடு ஒன்று இறுகி பிணைந்திருக்குமேயானால் இந்த இரண்டையும் வீழ்த்தியாக வேண்டும். சாதி மட்டும் ஒழிக்கனும் என்றுதான் நான் சொல்கிறேன். முடிஞ்சா சாதியை தனியா எடுத்து ஒழிச்சுட்டு போய்விடலாம். அதெப்டீங்க முடியும். இந்து மதத்தோடு பிணைந்துதான் இருக்கிறது. இந்து மதத்தை விட்டு சாதியை பிரிக்க முடியாது. அம்பேத்கர் அவர்கள் தன்னுடைய 25வது வயதில் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் உரையாற்றுகிறபோது சொன்னார், சாதி ஒற்றையாக இயங்காது பன்மையில் தான் இயங்கும். ஏன்னா தனியா ஒரு சாதி மட்டும் இருக்க முடியாது. பத்து சாதி இருந்தாத்தான் அது மேலே இது கீழ இருக்க முடியும். அம்பேத்கர் சொன்னார், “இந்து மதம் என்பது பல அடுக்குகள் கொண்ட மாளிகை; ஒரு அடுக்குக்கும் இன்னொரு அடுக்குக்கும் படிக்கட்டும் இல்லை வாசலும் இல்லை ஒரு அடுக்கில் பிறந்தவன் அதிலே சாக வேண்டும். வேற அடுக்குக்கு போகவும் முடியாது வெளியே வரவும் முடியாது” இப்படித்தான் இந்துமதம் நம்மை வைத்திருக்கிறது என்று அன்றும் பேசினார், இறுதி வரையும் அதைத்தான் பேசினார். அப்ப மதத்திலிருந்து சாதியைப் பிரிக்க வேண்டும் முடிஞ்சா உன் மதம் நல்லதென்றால் பிரிச்சு எடுத்துட்டு போயிடுப்பா. நான் இந்து மதத்தை பற்றி ஒன்னும் சொல்லிக்கலே. ராமகோபாலனுக்கும் சொல்லிக்கலாம். இந்து மதத்தில் நமக்கு கோபம் இல்லை. சாதி மட்டும் வேண்டாமென்று சொல்லிக்கிறோம். இல்லை சாதியை இந்து மதத்தைவிட்டு பிரிக்க முடியாது.

அம்பேத்கர் அவரது சட்ட வரைவு குழுவில் அரசியல் நிர்ணய சபையில் பேசுகிறபோது ஒன்றைச் சொன்னார், யாராக இருந்தாலும் இந்து சட்டத்தை எடுத்துப் படியுங்கள். இந்து தத்துவத்தின் முதல் வரியில், முல்லா எடிசன் என்று ஒன்று இருக்கிறது. அதுதான் இந்து சட்டத்தைப் பற்றி ஆழமாக எழுதி வைத்திருக்கிற ஒரு நூல். அதில் தான் பல நூறு பதிப்புகள் வந்து விட்டன. அந்த முல்லா எடிசனின் முதல் பக்கத்தில் சாதி இல்லாத இந்து என்பவன் இருக்க முடியாது என்று சொல்கிறது. இந்து மதம்னா சாதி இருக்கும். இப்ப மதம் மாறாதேனு சொல்கிறான். திருப்பிக் கொண்டு வருவதற்கு மதமாற்ற இயக்கம் நடத்தப் போகிறோம் என்கிறான். இஸ்லாமியனும் கிறிஸ்துவனும் பண்ணினா மதம் மாற்றம். இவன் பண்ணினா சுத்தி இயக்கம்; தாய் மதத்திற்கு கொண்டு வருகிறார்களாம். சரி, பத்து தலைமுறைக்கு முன்னால் வந்த கிறிஸ்துவனை கொண்டு வா உன் மதத்திற்கு, எந்த சாதியில் சேர்த்துக் கொள்கிறாய், அதை மட்டும் சொல்லு. உன் மதத்திற்கு வேண்டுமென்றால் கொண்டு வந்து விடலாம்.

மதமாற்றம் ஒன்றும் புதிதல்ல. அது பழசு. அந்தக் காலத்தில் நடந்துதான் சமணனாக நின்ற சேர்நெடுமாறனை கூண்பான்டியனை சைவ மதத்திற்கு திருப்பிக் கொண்டு வருவதற்கு திருஞானசம்பந்தர் ஏற்பாடு செய்தார்,. தர்மசேனர் (எ) திருநாவுக்கரசர் சமணராக இருந்தவரை திருநாவுக்கரசராக சைவ மதத்திற்கு கொண்டு வந்திருக்கிறார்கள். நீ தான் மத மாற்றத்தை முதலில் செய்துள்ளாய். இப்ப பண்ணுவதெல்லாம் புது மதமாற்றம். இப்ப கொஞ்ச நாளாதான் செஞ்சுட்டுருக்கிறான் அவன். நீ ஆயிரம் ஆண்டுகளாய் செய்திருக்கிறாய். அடுத்த மதத்துக்காரனை மிரட்டி மிரட்டி கொண்டு வந்திருக்கிறாய். சமணனை, பவுத்தனை எல்லாம் பண்ணியிருக்கிறாய். இந்த மதமாற்றத்தை நீ தடுக்கிற போது சாதி இல்லாம மதமில்லை என்ற போதுதான் நான் அதையும் சேர்த்துதான் எரிக்கிறேன் என்று பெரியார் சொல்கிறார்.

“அப்படி பிரிப்பதற்கு முடியாத வகையில் சாதியும் மதமும் ஒன்றோடு ஒன்று இறுகப் பிணைந்து கொண்டிருக்குமேயானால் இந்த இரண்டையும் வீழ்த்தியாக வேண்டும். முன்னிருந்த உயர்சாதி கபடர்கள் அவ்வளவு தந்திரமாக அப்படி பிரிக்க முடியாத வகையில் சாதியையும் மதத்தையும் பிணைந்து பின்னிக் கொண்டிருக்கும்படி இறுகக் கட்டி வைத்திருக்கிறார்கள். ஆகையால் சாதியை ஒழிக்க தலைப்படுகையில் மதமும் வெட்டப்படுகிறது என்று பயப்படாமல் சாதி மரத்தையும் மத மரத்தையும் சேர்த்து நெருப்பு வைத்து சாம்பலாக்க வேண்டுமென்பது தடுக்க முடியாத அவசியமாகும். இதிலும் ஒரு சங்கடமிருக்கிறது. அதாவது மதமானது வேதம், புராணம் ஆகியவைகளோடு கட்டிப் பிணைந்து கொண்டிருக்கிறது. ஆகையால் இந்த வேதம் புராணங்களிலிருந்து மதத்தைப் பிரிக்க வேண்டும். இதிலும் பிரிக்க முடியாதபடி கட்டு பலமாக இருந்தால் இங்கும் இரண்டையும் சேர்த்து நெருப்பு வைக்க வேண்டியதுதான் வேற வழியில்லை. ஆனால் இந்த வேதம் கடவுளோடு சேர்த்துக் கட்டப்பட்டிருக்கிறது. இதிலும் பிரிக்க முடியாத பிணைப்பு இருந்தால் அந்த கடவுள் என்பதன் தலையிலும் கை வைத்துதான் ஆக வேண்டி இருக்கிறது” என்று சொல்கிறார். வேறு வழியில்லாமல் தான் கடவுளுக்கு போனார்கள்.

ஒரு வேளை மற்ற நாட்டில் இருப்பதைப்போல மனிதனை மனிதன் உயர் தாழ்வு கற்பிக்க கடவுள் காரணமில்லை என்றால் பெரியார் நாத்திகம் பேசியிருக்க மாட்டார் என நினைக்கிறேன். ஒரு வேளை பேசாமல்கூட இருந்திருக்கலாம். வேண்டுமென்றால் அறையில் உட்கார்ந்து ஆராய்ச்சி கட்டுரை எழுதலாம். வீதியில் வந்து பேச வேண்டிய அவசியமும் பெரியாருக்கும், அம்பேத்கருக்கும் இருந்திருக்காது. இந்த கடவுள் தத்துவத்தின் பெயரால் கற்பிக்கப்பட்டிருக்கிற இழிவுகளை, செய்யப்பட்டிருக்கிற பிரிவினைகளை நியாயப்படுத்திக் கொண்டு, நம்மை பிரிவினைவாதிகள் என பேசுகிறார்கள். ஏன்னா தமிழ்நாடு தனியா வர வேண்டும் என நாம் சொல்கிறோம். ஒன்று பட்ட இந்தியாவில் எங்களுக்கு விடுதலை இல்லை என நாம் நம்புகிறோம்.

நம் தலைவர் நமக்குச் சொல்லி சென்றிருக்கிறார். அவன் நம்மை பிரிவினைவாதி என்கிறான். பெரியார் கேட்டார், மண்ணுக்கு பிரிவினை கூடாது என்கிறாயே, மனிதனுக்குள் பிரிவினை இருக்கலாமா ? நீ அதைச் சொல்லவில்லை என்றால் நான் ஏன் இதை சொல்லுகிறேன். எனக்கு அவசியமே இல்லை. ஒன்றுபட்ட இந்தியாவில் எங்களுக்கு விடுதலை இல்லை. எங்கள் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு விடுதலை இல்லை என்று கருதினார். அவர்களுடைய இழிவுகளிலிருந்து விடுபட முடியாது என்று கருதினார். இந்த சாதி இந்து மதம் எங்களை விடாது என்று கருதினார். எனவே தனியா வந்திடலாம் என சொன்னார். நீ அதை ஒழி என்று சொன்னார்.

ஒரு வேளை ஒன்றுபட்ட இந்தியாவில் சாதி ஒழிந்தாலும் நிலைத்திருக்காது என்று சொன்னார் பெரியார். கொஞ்ச நாளில் திருப்பி வந்திடும் என்றார். பொதுவுடமை பற்றி நாம் பேசுகிறோம். நாம் அதற்கு ஆதரவானவர்கள். ஆனால் வழக்கமான பொதுவுடமை வேறு பெரியார் பேசிய பொதுவுடமை வேறு. பெரியார் தான் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை முதன்முதலில் தமிழில் மொழி பெயர்த்தார். இந்திய மொழிகளில் முதலில் தமிழில்தான் ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது. அதை செய்தவர் பெரியார்.

1925 ஆம் ஆண்டில் கம்யூனிஸ்ட் கட்சி அமைப்பு ரீதியாக இந்தியாவில் வந்துவிட்டது. ஆனால் 1931 ஆம் ஆண்டு வரை அவர்கள் மொழி பெயர்க்கவில்லை. பெரியார் தான் மொழி பெயர்த்து வெளியிட்டார். அதை புத்தகமாகவும் போட்டார். ஏழெட்டு வாரம் எடுத்து குடிஅரசில் போட்டு விட்டு பிறகு புத்தகமாகவும் போட்டார் முன்னுரையில் பெரியார் எழுதினார். அதை எழுதும் போதே சொன்னார், இல்லையில்லை இந்த நாட்டில் பொதுவுடமை அப்படியே வந்து விடாது. இங்கே மக்களை பிரிப்பதற்கு பாட்டாளிகளை பிரிப்பதற்கு சாதிமுறை இருக்கிறது. அதை எடுத்துவிட்டு அதற்கு அடிப்படையான இந்து மதத்தை ஒழித்து விட்டுதான் இங்கு பொதுவுடமை வரும் என சொல்லிவிட்டுதான் இந்த அறிக்கையை வெளியிட்டார்.

அவர் வெளிநாட்டுக்கு போனார். ரஷியா புரட்சியைப் பார்த்து மகிழ்ந்து போய், ரஷிய நாட்டை பார்க்க விரும்பினார். 1931 ஆம் ஆண்டிலேயே ரஷியாவிற்கு போனார். 1932 ஆம் ஆண்டில் மூன்று மாத காலம் ரஷியாவில் இருந்தார். அந்த நாட்டில் 1932-ல் மே தின விழாவிற்கு பெரியார் தான் சிறப்பு விருந்தினர். இந்தியாவிலிருந்து வந்திருக்கிற நாத்திக தலைவர் என பிரதமரால் அறிமுகப்படுத்தப்பட்டு பேரணியில் கலந்து கொண்டார். அங்கிருந்து திரும்பி வரும்போது இலங்கையில் வந்து பேசினார். முதலில் இலங்கை பிரசங்கங்கள் என்றும், இப்போது இலங்கை பேருரை என்றும் நூலாக வந்திருக்கிறது படித்துப் பாருங்கள். ரஷ்யாவை பார்த்தார், மகிழ்ந்தார், வரவேற்றார். ஆனால் இந்தியாவிற்கு பொருந்தாது என்று சொன்னார். ரஷ்யாவில் மூன்று மாதம் இருந்துட்டு வந்து இந்தியாவிற்கு அந்த முறை அப்படியே பொருந்தாது. சதி செய்வதற்கு என்றே ஒரு சாதி இல்லாத நாட்டில் லெனின் வெற்றிப் பெற்று விட்டார் என்று சொன்னார். இங்க முடியாது என்றார். சதி செய்வதற்கென்று ஒரு சாதி அதற்கென்று ஒரு அமைப்பு இங்கிருக்கிறது. அதை தடுக்க பொது உரிமையோடு கூடிய பொதுவுடமை வேண்டும் என்று பெரியார் சொன்னார்.

வங்கிகளெல்லாம் தேசியமயமாக்கினோம். நாட்டுடமை என்றால் பொதுவுடமை என்றுதான் பொருள். ஆனால், வங்கியில் நம்ம ஆளு இருக்கிறார்களா ? அவர்களிடம் தான் இருக்கிறது. அதனால் தான் நம்ம வந்து செருப்புக்கடை வைக்க ஐந்தாயிரம் ரூபாய் வாங்கினாலும், மின் மோட்டார் வாங்க பத்தாயிரம் ரூபாய் வாங்கினாலும், மாடு வாங்க பதினைந்து ஆயிரம் ரூபாய் வாங்கினாலும், ஒரு மாதம் தவணை கட்டவில்லைனா மாட்டை பிடித்துக் கொண்டு போய் விடுகிறான். கடையை காலி செய்கிறான். வட்டிக்காக வீட்டிலுள்ளதையும் சேர்த்துக் கொண்டு போகிறான். ஆனால், பி.ஜே.பி. ஆட்சியில் கடைசி ஆண்டில் தள்ளுபடி செய்த கடன் மட்டும் 86000 கோடி ரூபாய். ஏன்னா வங்கி அதிகாரிகளாக அவர்கள் இருக்கிறார்கள். நம்மாளா வாங்கியிருப்பான் 86000 கோடி, 5000 அல்லது 10000 வாங்கியிருப்பான். அதிகபட்சம் அவ்வளவுதான். வங்கிகள் அவர்களிடம் தான் இன்றும் இருக்கிறது. பேருக்கு வேண்டுமென்றால் நாட்டுடமை ஆக்கியிருக்கலாம் என்று பெரியார் சொன்னார்.

பொது உரிமை வராத நாட்டில் பொதுவுடமை வந்தால் மீண்டும் ஆதிக்கக்காரன் கைக்கே பொதுவுடமை போய் விடும் என்று சொன்னார். அதை மாற்றுவதற்காகத்தான் இந்து மதத்தை ஒழிக்க வேண்டும். சாதியம் ஒழிய வேண்டும். அதைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிற வேதங்கள் ஒழிய வேண்டும். அதற்கு அடிப்படையாக உள்ள கடவுள் ஒழிய வேண்டுமென்று சொன்னார் என்பதை நாம் புரிந்து கொண்டு கடவுள் மறுப்பை பேச வேண்டும்.

பெரியார் பேசிய கடவுள் மறுப்பு பார்ப்பன எதிர்ப்போடு கூடிய கடவுள் மறுப்பு. சாதி ஒழிப்பை இலக்காகக்கொண்ட பார்ப்பன எதிர்ப்பு. வெறும் பார்ப்பன எதிர்ப்பாக இருந்தால் திருநெல்வேலியில் அதிகம் இருக்கும் சைவப் பிள்ளைகள் நம்மைவிட அதிகமாக பார்ப்பனர்களை எதிர்ப்பார்கள். அவன் நான் தான் பெரிய சாதி. நீ என்ன பெரிய சாதி என்று பார்ப்பானை எதிர்க்கிறான். அண்ணா சொல்வார் பார்ப்பன எதிர்ப்பு மட்டுமே எங்கள் இலக்காக இருக்குமானால் எங்கள் தலைமையிடம் ஈரோட்டில் இருக்காது. திருநெல்வேலியில் இருந்திருக்கும். அவன் பார்ப்பானை எதிர்ப்பதன் நோக்கம் வேறு. நம் நோக்கம் வேறு. சாதி ஒழிப்பை இலக்காகக் கொண்ட பார்ப்பன எதிர்ப்பு. பார்ப்பன எதிர்ப்பை அடிப்படையாகக் கொண்ட கடவுள் மறுப்பு. அதைத்தான் பெரியார் செய்தார். அதைத் தான் பெரியார் சொன்னார். அதைத்தான் நம்மிடம் எதிர்பார்த்தார்.

மக்களிடம் கொண்டு சேர்ப்பது கடவுள் மறுப்பை மட்டுமல்ல. பெரியார் கடவுள் மறுப்பை சொன்னதன் நோக்கத்தையும் கொண்டு சேர்க்க வேண்டும். நமக்கு மேலான ஒருவனைப் பார்த்து நமக்கு வருகிற கோபம் கீழானவனை உயர்த்த வேண்டும் என்கிற பரிவாகவும் இருக்க வேண்டும். பெரியாரை கேட்டார்கள் நீ ஏன் பார்ப்பானை எதிர்க்கிறாய், ஏன் Anti-Brahmin ? பெரியார் சொன்னார், ஆம் நான் Anti-Brahmin ஏனென்றால் நான் Pro-Human என ஆங்கிலத்திலேயே திருப்பிச் சொன்னார். நான் மனிதாபிமானத்துக்கு ஆதரவாக இருப்பதால் பார்ப்பானை எதிர்க்க வேண்டியிருக்கிறது.

அதை நாம் புரிந்து கொண்டு பெரியாரை உள்வாங்கிக் கொள்வது என்பது கடவுள் மறுப்பை மட்டுமல்ல, ஏன்னா அவன் புதுப்பிச்சுக்குவான். ஆண்டாண்டுக்கு புதுப்பிக்கிறான். காலையில்கூட கருத்தரங்கில் பேசினார்கள். ஆண்டுதோறும் திருமணம் பண்ணுகிறான். பெரியார் தான் கேட்பார், ராமனுக்கும் சீதைக்கும் போன வருடம் கல்யாணம் பண்ணினயே திரும்பி ஏன் கல்யாணம் ? சீதை ஓடிப் போயிட்டாளா ? இல்லை செத்துப் போயிட்டாளா ? யாரையாவது கேட்டாயா ? என பெரியார் கேட்டார். வள்ளி திருமணம் ஏன் ஆண்டுதோறும் நடக்குது, என்ன ஆச்சு ? முருகனுக்கு ஏற்கனவே கல்யாணம் பண்ணிய வள்ளி என்ன ஆச்சு ? அது வேற வள்ளியா ? அது எஸ்.

(4 ஆம் பக்கம்)

# குடும்பத்தை மட்டுமே பார்க்காதீர்; சமூகத்தைப் பாருங்கள்: விஜய் தொலைக்காட்சியில் பெண்ணியவாதிகளின் வாதங்கள்

*பெண்ணியம் பேசும் பெண்களும், அதை எதிர்க்கும் குடும்பத்துக்கு 'ஒடுங்கிய' பெண்களும் பங்கேற்ற விவாதம் ஒன்றை விஜய் தொலைக் காட்சி 'நீயா? நானா?' (டிசம்.19) நிகழ்ச்சியில் ஒளிபரப்பியது.*

மத்திய நடுத்தர வர்க்க 'பொது புத்தியில்' படியச் செய்யப்பட்டுள்ள பெண்ணடிமைக் கருத்துகளை மறுக்கும் ஆரோக்கியமான விவாதங்கள் நிகழ்ச்சிக்கு பெருமை சேர்த்தன. பெண்ணியம் பேசும் குழுவில் இடம் பெற்ற தோழியர்கள் ஓவியா, சல்மா, கவின்மலர், லூசி, ரஜினி உள்ளிட்ட அனைவருமே கருத்துகளை ஆழமாகவும் தெளிவாகவும் முன் வைத்தனர். பெண்ணியவாதிகள் என்றாலே அவர்கள் ''ஒழுங்கு'' மீறி நடப்பவர்கள் என்று தனி மனித பழக்கங்களை 'ஒழுக்கங்களாக்கி' பெண்ணுரிமையின் நியாயங்களையே புறந்தள்ளி விடும் பார்ப்பனிய கருத்துக்களை தோழர்கள் சரியாகவே அம்பலப்படுத்தினர்.

பெண்ணியம் என்பதற்கான வரையறை - பெண், ஆண், திருநங்கை என்ற மூன்று பாலினத்தவரும் சம உரிமை கிடைத்திட வேண்டும். ஆண்களுக்கு உள்ள உரிமைகள் அனைத்தும் பெண்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று பெண்ணியவாதிகள் விளக்கமளித்தனர். பெண்களுக்கான உரிமைகளாக அவர்களுக்கான கல்வி, திருமணம் செய்து கொள்வதா வேண்டாமா என்று முடிவு எடுக்கும் உரிமை, வாழ்க்கைத் துணையைத் தேர்வு செய்யும் உரிமை, குழந்தை பேற்றில் இறுதி முடிவு எடுக்கும் உரிமை,பொருளாதார உரிமை போன்ற உரிமைகள் அடங்கும் என்று பெண்ணியவாதிகள் முன் வைத்த கருத்தை சீரணிக்க முடியாத எதிர் அணிப் பெண்கள், இத்தகைய உரிமைகளோடு குடும்பம் நடத்தவே முடியாது என்று கூறினார்.

''எங்கள் குடும்பத்தில் தங்களுக்கு உரிய மரியாதையும், கவுரவமும் தரப்படுகிறது. விட்டுக் கொடுத்து வாழும் வாழ்க்கையில் நிறைவு ஏற்படுகிறது. அன்பு என்ற பிணைப்புதான் குடும்பத்தில் முக்கியம். பெண்ணியம் என்று பேசிக் கொண்டு, குடும்ப உறவுகளை சீர்குலைத்து விட்டால், குழந்தைகளின் எதிர்காலம் பாதித்து விடும். கணவன், சில நேரங்களில் கோபத்தில் அடிப்பது வழக்கம் தான். அதற்காக அந்த நேரத்தில் நாமும் ஆத்திரப்படக் கூடாது. கோபம் தணிந்த பிறகு, பக்குவமாக கணவருக்கு எடுத்துக் கூறினால், அவர்களின் தவற்றை உணர்த்த முடியும். நாங்கள் எல்லாம் அத்தகைய நடைமுறைகளையே பின்பற்றுகிறோம். திருமணம் செய்து கொண்ட பிறகு, குழந்தை பெற்றுத் தருவது பெண்ணின் கடமையாகி விடுகிறது. வரதட்சணைக் கொடுமைகள் எல்லாம் இப்போது அவ்வளவாகக் கிடையாது. பெற்றோர்களே, தங்கள் பெண்களுக்கு விரும்பி வழங்குகிறார்கள்'' என்பது போன்ற வாதங்களையே பெண்ணியத்தை எதிர்க்கும் அணியினர் முன் வைத்தனர்.

பெண்ணியவாதிகள் இதற்கு விரிவான தங்கள் விளக்கங்களை முன் வைத்தனர்.

''உங்கள் குடும்பங்களில் உங்களுக்கு உரிய மரியாதையும், அங்கீகாரமும் தரப்படுவதாக நீங்கள் கருதிக் கொண்டிருப்பது, ஒரு கற்பிதம் தான். நீங்கள் குடும்பத்தைக் கவனிக்கும் பொறுப்பை ஏற்று நாள் முழுதும் உழைத்தால்கூட அந்த உழைப்புக்கு உரிய 'மதிப்பு' கிடைப்பதில்லை. மனைவி 'சும்மா' தான் இருக்கிறார் என்றுதான் கணவர்கள் கூறுகிறார்கள். ஒரு காலத்தில் பண்ணையார்களிடம் கூலிகளாக வேலை பார்த்தவர்களை, பண்ணை யார்கள் அடித்தால்கூட, அதற்காக, அந்தத் தொழிலாளர்கள், பண்ணையாரை திருப்பி அடிக்க மாட்டார்கள், மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வார்கள். அதே மன நிலைக்குத்தான் பெண்கள் உள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த உலகத்தில் ஆண்கள் மட்டுமே பிறக்கிறார்கள். பெண்கள் உருவாக்கப்படு கிறார்கள் என்று பிரஞ்சு நாட்டின் பெண்ணியவாதி கூறினார். பொருளாதார சுதந்திரத்தை ஒரு பெண் பெற்றிருந்தாலும்கூட, சமுதாய, கலாச்சார சுதந்திரம் கிடைக்கும்போதுதான் உண்மையான பொரளாதார சுதந்திரத்தைப் பெற முடியும். இன்றைய சமூகத்தில் பொருளாதார சுதந்திரம் சார்ந்த பெண், தனக்கான பொருளாதார முதலீடுகளை தானே முடிவெடுக்கக்கூடிய உரிமை வழங்கப்பட்டிருக்கிறதா ? படித்த, ஆங்கிலம் பேசும் வசதி வாய்ப்புகள் உள்ள பெண்கள் தங்களுக்கு குடும்பத்தில் உரிய மரியாதை கிடைப்பதாகக் கூறுகிறார்கள். இந்த நிலையை பெறுவதற்கேகூட நீண்டகாலமாக பெண்ணியவாதிகள் குரல் கொடுத்ததுதான், காரணம் என்பதை மறந்து விடக் கூடாது.

வதட்சணைக் கொடுமைகளும் அதற்காக கொல்லப்படும் பெண்களும் பற்றிய செய்திகள், ஒவ்வொரு நாளும் வந்து கொண்டிருக்கின்றன. ஒரு கோடி பெண் சிசுக்கள் வயிற்றிலேயே அழிக்கப்பட்டிருக்கிறார்கள். இங்கே, தங்களுக்கு, குடும்பத்தில் 'உரிமைகள்' கிடைத்து விட்டதாகக் கூறும் பெண்கள், தங்களின் குடும்பத்தை மட்டுமே பார்க்கிறார்கள். குடும்பத்தோடு எல்லாமே முடிந்து விட்டதாகக் கருதுகிறார்கள். ஆனால், சமுதாயத்தை அவர்கள் பார்க்க மறுக்கிறார்களே ! அத்தகைய சமூக சிந்தனை அவர்களுக்கு தடைபடுத்தப்பட்டுள்ளதே. பெண்களுக்கான கருத்துகளை ஆண்களே ஊடகங்கள் வழியாக உருவாக்குகிறார்கள். பெண்கள் உரிமைகளுக்கான கருத்துகள், பெண்களே முன் வைக்கும் சிந்தனைகள், அவர்களுக்கு எட்டுவதில்லை. வணிக ஊடகங்களில் மூழ்கிக் கிடக்கும் பெண்கள், தங்கள் உரிமைகளுக்கான எழுத்துகளைப் படிக்கிறார்களா ? தங்களுக்கான அரசியல் பார்வைகளை ஆண்களைப் போல் உருவாக்கிக் கொள்கிறார்களா ? 'அறிவு' அதிகாரத்தை உருவாக்கும் காலத்தில் 'அறிவு ' ஆணாதிக்க உடமையாகவே நீடிக்கிறது; அதை ஆண்கள் தங்களிடம் மட்டுமே வைத்துக் கொண்டுள்ளார்கள்.

இங்கே விவாதங்களுக்காக நீங்கள் பேசாமல், உங்கள் உள்ளத்தைத் திறந்து, நீங்களே, ஒரு கேள்வியை கேட்டுக் கொள்ளுங்கள். உண்மையிலேயே பெண்களுக்கு சம உரிமை கிடைத்து விட்டதா ? கொடுத்துப் பெறுவது அல்ல உரிமை; அதை நாமே எடுத்துக் கொள்ள வேண்டும். இன்றைக்கும் கிராமங்களில் பெண்கள் ஆண்களின் கொடுங்கரங்களில் சிக்கி சந்திக்கும் அவலங்கள் நீடிக்கின்றனவே !

பெண்ணியம் பேசும் பெண்கள் என்றாலே, அவர்கள், புகைபிடிப்பவாகள், குடிப் பழக்கம் உள்ளவர்கள் என்ற தவறான கருத்து உருவாக்கப்படுகிறது. வேண்டுமானால் பெண்ணியம் பேசும் பெண்களில் சிலர் அப்படி இருக்கலாம்; ஆனால் பெண்ணியம் என்றாலே பெண்கள் குடிப்பது, புகைப்பது என்று அர்த்தமல்ல. குடிப்பதும், புகைப்பதும் ஆண்களுக்கும் கேடு; பெண்களுக்கும் கேடுதான். இருபாலாருக்கும் அதை முன் வைக்காமல், பெண்கள் குடிப்பது, புகைப்பது என்ற பார்வையில் மட்டுமே அணுகுவதே, சரியான அணுகுமுறையாக இருக்குமா ?

ஆண்கள் கோபப்படும்போது உணர்ச்சிவயப்பட்டு சில நேரங்களில் மனைவியை அடிப்பது இயல்புதான் என்று கூறினால், அதேபோல் பெண்களும் கோபப்படும்போது, உணர்ச்சி வயப்பட்டு செயல்படும் வாய்ப்புகளை இந்த சமூகம் வழங்கியிருக்கிறதா ? பெண்களுக்கான சொத்துரிமை தத்தெடுக்கும் உரிமை உள்ளிட்ட உரிமைகளை வழங்கும் - இந்து சட்டத் திருத்த மசோதாவை நாடாளுமன்றத்தில் அம்பேத்கர் கொண்டு வர முயன்றபோது, அந்த முயற்சி பிற்போக்குவாதிகளால் முறியடிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து தனது சட்ட அமைச்சர் பதவியையே அம்பேத்கர் தூக்கி எறிந்தார். அப்போது இந்த மசோதாவுக்கு ஆதரவாக இரண்டு பெண்களிடமிருந்து குரல் வந்திருந்தால்கூட என்னால் நிறைவேற்ற முடிந்திருக்கும். ஒரு குரல்கூட வரவில்லையே என்று உள்ளம் வருந்தினார், டாக்டர் அம்பேத்கர்.

இதுவே அன்றைக்கு பெண்களின் நிலை. இன்று இந்த அரங்கில் கருத்துகளை கூறுவதற்கு நீங்கள் முன் வந்திருப்பதுகூட எங்களுக்கு மகிழ்ச்சிதான். ஆனால், நீங்கள் வெளிப்படுத்துகிற கருத்து, ஆண் ஆதிக்க சமூகமும், ஊடகங்களும், பழமைவாதமும் உங்கள் மீது திணித்துள்ள கருத்துகள் என்பதை நீங்கள் சிந்திக்க வேண்டும்'' என்ற வாதங்களை முன் வைத்தனர்.

நிகழ்வை ஒருங்கிணைத்து நடத்திய கோபிநாத், பெண்ணியம் பேசிய பெண்களின் வாதங்களில் உள்ள நியாயங்களை சுட்டிக்காட்டினார். இத்தகைய விவாதங்கள்கூட தமிழ்நாட்டில்தான் சாத்தியமே தவிர, பீகாரிலோ, உ.பி.யிலோ, ம.பி.யிலோ, ராஜஸ்தானிலோ பேசவே முடியாது. அதற்காக தமிழகத்தில் எத்தனையோ சிந்தனையாளர்கள், எழுத்தாளர்கள், தங்கள் பங்களிப்பை வழங்கியிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்.

பெண்ணிய எதிர்ப்பு அணியில் பேசிய பெண்களில் பலர், பெண்களுக்கு பாகுபாடுகள் காட்டப்படுவதை தாங்கள் ஒப்புக் கொள்வதாகவே கூறினார்கள். நிகழ்ச்சியில் சிறப்பாக கருத்துகளை முன் வைத்ததற்கான பரிசு, தோழர் ஓவியாவுக்கு வழங்கப்பட்டது. – **இரா.**

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வள்ளியா ? இது பி. வள்ளியா ? அப்படி ஏதாவது இன்ஷியல் மாறிய பெண்ணா அதே வள்ளியை திரும்பத் திரும்ப ஏன் கல்யாணம் பண்ணுகிறாய் ? என பெரியார் கேட்டார். யாரும் பதில் சொல்லவில்லை. ஏன்னா பதில் இல்லை.

பெரியார் புராண கதைகளுக்கெல்லாம் கேள்வி கேட்டப்போ அறிவியல் பூர்வமாக யாரும் பதில் சொல்லவில்லை. தீபாவளி கதை சொன்னார்கள். பூமியை சுருட்டினான். டேய் பூமி தட்டையா ? இல்லை பாயா ? சுருட்டறதுக்குனு கேட்டார். யாரும் பதில் சொல்லவில்லை. பூமியை சுருட்ட முடியாது. உருட்டத்தான் முடியும். சரி சுருட்டினாய் என்றே வைத்துக் கொள். எங்க நின்னுட்டு சுருட்டினாய் எனக் கேட்டார். சரி சுருட்டினான் கொண்டு போய் கடலில் வைச்சா கடல் எங்க தனியாவா இருக்குதுனு கேட்டார். இதையெல்லாம் நாம் சிந்தித்து பார்க்கவில்லை என்பதுதான் இருக்கிற இழிநிலையே.

வேடிக்கையா கேட்டார், முருகன் மயில்மேல் போனானாம். ஏண்டா இரண்டு பக்கமும் கால் போட்டா எப்படீடா மயிலால பறக்க முடியும்னு கேட்டார். இது சின்ன செய்தி. நாம் சிந்தித்துப் பார்க்கவில்லை. இதுவரைக்கும் பார்க்கல. முருகனை பார்த்து கும்பிட்டுதான் இருந்தோம். இரண்டு பக்கம் கால் போட்டா இறக்கையை விரிக்க முடியாதுனு யாரும் நினைச்சு பார்க்கல. பெரியார் கேட்டார்.

நாம் நினைக்காத பல செய்திகளைப் பெரியார் கேட்டார். கடவுள் இல்லை என்று சொல்லுவதற்கு மட்டுமில்லை. இந்த கடவுள் பெயரால் கற்பிக்கப்பட்டிருக்கிற வேதங்கள், அதனால் நிலைத்திருக்கின்ற மதம், அதன்பெயரால் இருக்கிற சாதி, எல்லாவற்றையும் ஒழிப்பதாக சொன்னார். இந்த நாத்திகர் விழாவில். அதுதான் செய்தி.

கடவுள் மறுப்பு என்பது சாதி மறுப்பே என்பதை நம் தோழர்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். நான் திருமணங்களில் எல்லாம் அடிக்கடி சொல்வேன், அவன் மார்க்சிஸ்ட்டாக இருப்பான், பெரியாரிஸ்ட்டாக இருப்பான், அம்பேத்கரிஸ்ட்டாக இருப்பான், ஆனால் ஆணாகத்தான் குடும்பத்தில் இருப்பான். அதில் பெரிய மாற்றம் இருக்காது என்று. நம்மில் பலர் அப்படித்தான் நாத்திகராக இருப்பார்கள். ஆனால், சாதிக்காரர்களாக இருப்பார்கள். அதை நாம் மனதில் கொண்டு உண்மையான கடவுள் மறுப்பும், உண்மையான நாத்திகமும் சாதி ஒழிப்பில்தான் இருக்கிறது என்பதை மீண்டும் மீண்டும் நினைவூட்டி வந்திருந்த உங்களுக்கு நன்றி சொல்லி இந்நிகழ்ச்சியை அழகாக முறையாக சிறப்பாக ஏற்பாடு செய்த தோழர்களை பாராட்டி விடை பெறுகிறேன்.

**(நிறைவு)**

## ஆ.பாலமுருகன் – மு. பாத்திமாகனி மணவிழா

மேட்டூர் கழகத் தோழர் ஆ.பால முருகன் - மு. பாத்திமாகனி ஆகியோரது வாழ்க்கைத் துணைநல ஒப்பந்த விழா 2.12.2010 வியாழன் காலை 11 மணிக்கு மேட்டூர் சிவகாமசுந்தரி திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

சேலம் மாவட்ட அமைப்பாளர் கி. முல்லை வேந்தன் தலைமையில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி வாழ்க்கை துணை ஏற்பு நிகழ்வை நடத்தி வைத்தார்.




மணமக்கள் சார்பாக புரட்சிப் பெரியார் முழக்கத்திற்கு ரூ.10,000/- வழங்கினார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 06th January 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



# புரட்சிப் பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | periyardk.org | திருவள்ளுவர் ஆண்டு 2041 | ஜனவரி 13, 2011 | புரட்சி 9 | முழக்கம் 53 | விலை: ரூ.2.50


### சென்னையில் வீடு வீடாகச் சென்றார்: மகிழ்ச்சியான வரவேற்பு

# கழகக் குடும்பத்தினருடன் கழகத் தலைவர் மூன்று நாள் சந்திப்பு

கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி, கழகத் தோழர்களின் இல்லங்களுக்குச் சென்று குடும்பத்தினரை சந்திக்கும் நிகழ்ச்சி ஜன.3, 4, 5 தேதிகளில் சென்னை மாவட்டத்தில் சிறப்புடன் நடந்தது. இந்நிகழ்வில் 4, 5 தேதிகளில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் 5-ம் தேதி கழகத் துணைத் தலைவர் ஆனூர் செகதீசன் மற்றும் வழக்கறிஞர் குமாரதேவன் கலந்து கொண்டனர்.

ஒவ்வொரு நாளும் காலையில் 8.30 மணியளவில் தொடங்கிய பயணம் இரவு 11 மணி வரை நீடித்தது. காலை - மதியம் - இரவு உணவு கழகத் தோழர்களின் இல்லங்களிலேயே கழகப் பொறுப்பாளர்களுக்கும், உடன் வந்த தோழர்களுக்கும் வழங்கப்பட்டன. கழகக் குடும்பத்தினர், கழகத்தின் தலைவர்களே தங்களது இல்லத்துக்கு வருகை புரிந்ததில் மட்டற்ற மகிழ்ச்சியுற்றனர். ஒவ்வொரு கழகக் குடும்பத்தினர் வீட்டிலும் அன்பான வரவேற்புகள் காத்திருந்தன. குடும்பத்தினர் கழகத் தலைவர், பொறுப்பாளர்களோடு படம் எடுத்துக் கொண்டனர்.

பகுதி கழகத் தோழர்கள், கழகத் தலைவருடன் இரு சக்கர வாகனங்களில் அணி வகுத்து வந்தனர். கழகத் தோழர்களின் ஒவ்வொரு இல்லமும் கருஞ்சட்டைத் தோழர்களின் வருகையால் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கியது. அன்பான உபசரிப்புகளும், உளம் திறந்த உரையாடல்களும், ஒருவருக்கொருவர் வெளிப்படுத்திய பாசப் பிணைப்புகளும் கழகத் தோழர்களுக்கிடையே குடும்ப உறவுகளுக்கு மேலும் வலிமையூட்டின என்றே கூறலாம்.

இந் நிகழ்வுகளை நேரில் கண்டு இதுவரை கழக ஆதரவாளர்களாக மட்டுமே செயல்பட்ட தோழர்கள் பலர், தோழமை மிக்க பாசறையாக பெரியார் திராவிடர் கழகம் செயல்படுவதைக் கண்டு தங்களை, கழகத்தில் இணைத்துக் கொள்ள முன் வந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். பல புதிய இளைஞர்கள் கழகப் பொறுப்பாளர்களுடன் தொடர்பு கொண்டு கழகத்தில் இணைந்து செயல்பட விருப்பம் தெரிவித்து வருகிறார்கள்.

கட்சி அமைப்புகளைக் கடந்தும், பெரியார் திராவிடர் கழகத்தின் செயல்பாடுகளைப் போற்றி மகிழும் தோழர்களும், தங்கள் இல்லங்களுக்கு அழைத்து அன்பாக உபசரித்தனர்.

3 ஆம் தேதி சென்னை மயிலாப்பூர் பகுதியில் சாரதாபுரம், சத்தியவாணிமுத்து நகர், விசாலாட்சி தோட்டம், நாராயணசாமி தோட்டம் பகுதிகளில் வாழும் கழகத் தோழர்களின் இல்லங்களுக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி வருகை புரிந்தார். இவர்கள் கழகத்தில் புதிதாக வந்த இளைஞர்கள். மாவட்ட தலைவர் தபசி குமரன், செயலாளர் உமாபதி, அன்பு தனசேகர், சுகுமார் மற்றும் பகுதி தோழர்கள் உடன் வந்தனர். பிற்பகல் காஞ்சிபுரம் மாவட்டத்தில் சோழிங்கநல்லூர், சிறுசேரி, கூடுவாஞ்சேரி, பொட்டேரி, மறைமலைநகர் பகுதியிலுள்ள தோழர்களின் இல்லங்களுக்கு கழகத் தலைவர் சென்றார். இரவு 11 மணி வரை இந்த சந்திப்பு நடந்தது.

ஜனவரி 4 ஆம் தேதி இராயப்பேட்டையிலிருந்து பயணம் தொடங்கியது. அனுமந்தபுரம், அவ்வை சண்முகம் சாலை, பி.எம்.தர்கா, மாவடி விநாயகர் தெரு, சைவ முத்தையா தெரு, சைதாப்பேட்டை, இராமாபுரம், அம்பாள் நகர், நுங்கம்பாக்கம், சேத்துப்பட்டு, அண்ணா நகர் ஆகிய பகுதிகளில் கழகத் தோழர்களின் இல்லங்களுக்குச் சென்று குடும்பங்களை சந்தித்தார்.

ஜன.5 ஆம் தேதி முழுதும் வடசென்னைப் பகுதி கழகக் குடும்பத்தினரை கழகத் தலைவர் சந்தித்தார். திருவொற்றியூரிலிருந்து காலை 8.30 மணிக்கு பயணம் தொடங்கியது. புதுவண்ணாரப்பேட்டை, எருக்கஞ்சேரி, கன்னிகாபுரம், புரசைவாக்கம், கொளத்தூர், திரு.வி.க. நகர், கே.எம். காலனி, அண்ணா நகர், ஒட்டேரி, நம்மாழ்வார்பேட்டை, அயனாவரம் பகுதிகளிலுள்ள கழகத் தோழர்களின் இல்லங்களுக்கு சென்று அவர்களுடன் கழகத் தலைவர் கலந்துரையாடினார்.

கழகத் தோழர்களின் குடும்பத்து உறுப்பினர்களான பெண்கள் இந்த சந்திப்புகளால் மிகவும் மகிழ்ச்சியும் அடைந்தனர். இது போன்ற சந்திப்புகள் கழகத்தின் தோழமை உணர்வை வளர்த்தெடுக்கும் என்று பலரும் கருத்து தெரிவித்தனர்.

குழந்தைகள் மிகவும் ஆர்வத்துடன் கழகத் தலைவர், பொறுப்பாளர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டனர். சென்னை மாவட்டக் கழகச் செயல்வீரர்களிடையே இந்த சந்திப்பு நிகழ்ச்சி புத்துணர்வையும், தோழமையையும் மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது.

– கோகுல கண்ணன்

### திருப்பூரில் சொந்த இல்லத்தை கழகப் பயன்பாட்டுக்கு வழங்கிய தோழரின் தொண்டுள்ளம்

# இல்லத்தில் பெரியார் படிப்பகம் – உடற்பயிற்சிக் கூடம் திறக்கப்பட்டது





பெரியார் திராவிடர் கழகத்தின் செயல்பாடுகளால் ஈர்க்கப்பட்டு கழகத்தில் தாமாகவே முன் வந்து தம்மை இணைத்துக் கொண்ட திருப்பூர் தோழர் குணசேகரன், திருப்பூர் அருகே அன்னையம் பாளையத்திலுள்ள தனது சொந்த வீட்டை இயக்கப் பயன்பாட்டுக்கு ஒப்படைத்துள்ளார். அந்த இல்லத்தில் பெரியார் படிப்பகம் மற்றும் உடற்பயிற்சிக் கூடம், கழக சார்பில் திறக்கப்பட்டுள்ளது. பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டினன் படிப்பகத்தையும், கணினி செயல்பாட்டையும், ஜனவரி 2 ஆம் தேதி தொடங்கி வைத்தார்.

கழக செயற்குழு உறுப்பினர் வெ. ஆறுச்சாமி, உடற்பயிற்சிக் கூடத்தினைத் திறந்து வைத்தார். கழகக் கொடியை ஏற்றி சிந்தனைப் பலகையை மாவட்டத் தலைவர் சு. துரைசாமி திறந்து வைத்தார். கழகத்தின் செயல்பாடுகளைத் தொடர்ந்து உன்னிப்பாகக் கவனித்து வந்த தோழர் குணசேகர், இயக்கத்தில் தம்மை இணைத்துக் கொண்டு, பல்வேறு உதவிகளை கழகத்துக்கு தன்னை விளம்பரப்படுத்திக் கொள்ளாமல் வழங்கி வருகிறார்.

“நான் எந்த அரசியல் கட்சியையும் சாராதவன்; தமிழ்நாட்டில் இயங்கி வரும் பல்வேறு அமைப்புகள் பற்றி நான் கவனித்து வருகிறேன். அதில் பெரியார் திராவிடர் கழகம் என்னை மிகவும் ஈர்த்து விட்டது” - என்று அவர் கூறினார்.

இப்போது இயக்கத்தின் பயன்பாட்டுக்காக அவர் வழங்கியுள்ள வீடு 5.5 சென்ட் அளவுள்ளதாகும். அப்பகுதி வாழ் மக்களுக்குப் பயன்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு அங்கே பெரியார் படிப்பகம் தொடங்கப்பட்டுள்ளது. மாவட்ட தலைவர் சு. துரைசாமி அவர்களும், திருப்பூரில் இதேபோல் தமக்கு சொந்தமான இடத்தில் பெரியார் படிப்பகத்தை தாமே உருவாக்கி தந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தோழர் குணசேகர் அவர்களின் தொண்டுள்ளத்தை, விழாவில் பேசிய அனைவருமே பாராட்டினர். விழா நிகழ்வில் சிற்பி ராசன், மாவட்ட செயலாளர் கா.சு. நாகராசன், கோவை மாநகர செயலாளர் கோபால், பொருளாளர் இரஞ்சித் பிரபு, திருப்பூர் மாநகர செயலாளர் முகில்ராசு, க. அகிலன், இரா. குமார், பாடகர் தியாகு, ஆசிரியர் சிவகாமி, சம்பூகன், அவிநாசி, செந்தில், சன்.பாண்டியநாதன், இரவி, மணிகண்டன் உள்ளிட்ட பல தோழர்கள் பங்கேற்றனர்.

# தமிழ்நாடு மாணவர் கழகம் வேண்டுகோள்!

**உங்கள் பல்கலைக்கழகத்தில்... உங்கள் கல்லூரியில்...**

- உங்கள் கல்லூரியில் மாணவர் சேர்க்கையில் 69 சதவீத இடஒதுக்கீடு நிரப்பப்பட்டதா ?
- தாழ்த்தப்பட்ட அருந்ததியினர் மற்றும் சிறுபான்மையினரின் உள் ஒதுக்கீடு நிரப்பப்பட்டதா ?
- உங்கள் கல்லூரியில் நிரந்தரப்பேராசிரியர் தேர்வு செய்வதில் 69 சதவீத இட ஒதுக்கீடு நிரப்பப்பட்டதா ?
- உங்கள் கல்லூரியில் அலுவலகப் பணியாளர் தேர்வு செய்வதில் 69 சதவீத இடஒதுக்கீடு நிரப்பப்பட்டதா ?
- உங்கள் கல்லூரியில் தற்காலிகப் பேராசிரியர், வருகைப் பேராசிரியர், தற்காலிகப் பணியாளர் தேர்வுகளில் 69 சதவீத இட ஒதுக்கீடு நிரப்பப்பட்டதா ?
- உங்கள் கல்லூரியில் முக்கியப் பதவிகளில் சாதிவாரி சுழற்சிமுறை நடைமுறைப்படுத்தப்படுகிறதா ?
- உங்கள் கல்லூரியில் SC/ST Cell செயல்படுகிறதா ?
- உங்கள் கல்லூரியில் பெண்களுக்கு எதிரான குற்றங்களைக் கண்காணிக்கும் Women cell செயல்படுகிறதா ?
- அரசு நிர்ணயித்த கட்டணத்தைவிட அதிகமாக எந்தெந்த வகையில் கட்டணம் வசூலிக்கின்றனர் ?
- உங்கள் கல்லூரியில் Complaints cum Redressal Committee உள்ளதா ?அதில் 50 சதம் பெண் உறுப்பினர்கள் உள்ளனரா ?
- உங்கள் கல்லூரி வளாகம் 10 ஏக்கர் அளவு உள்ளதா ? அதில் கட்டிடங்களின் பரப்பளவு 2.5 ஏக்கர் உள்ளதா ?
- 30 மாணவர்களுக்கு 250 சதுர மீட்டர் என்ற அளவில் ( Lab ) ஆய்வுக்கூடங்கள் உள்ளதா ?
- 30 மாணவர்களுக்கு 900 சதுர மீட்டரில் ( Work shop) பணிமனை உள்ளதா ?
- எம்.சி.ஏ மாணவர்களின் ஆடீநுவுக்கூடம் 30 மாணவர்களுக்கு 150 சதுரமீட்டர் என்ற அளவில் உள்ளதா ?
- 240 மாணவர்களுக்கு 400 சதுரமீட்டர் என்ற அளவில் நூலகம் உள்ளதா ?
- வகுப்பு அறைகள் ( Class Rooms ) ஒவ்வொன்றம் 66 சதுரமீட்டர் உள்ளதா ?
- 175 சதுர மீட்டர் அளவுகொண்ட னுசயறபைே ழயடட எத்தனை உள்ளது ?
- விடுதி அறைகள் 3 மாணவர்கள் தங்கும் அறை (Triple seated room) 20 சதுர மீட்டர் உள்ளதா ? ஒரு மாணவர் தங்கும் அறை (Single room) 9 சதுரமீட்டர் உள்ளதா ?
- 120 மாணவர்களுக்கு ஒரு விடுதி என்ற அளவில், ஒவ்வொரு 120 மாணவர்களுக்கும் தனித்தனியே விடுதிகள் உள்ளனவா ?
- உங்கள் கல்லூரியின் மொத்த விடுதி மாணவர் எண்ணிக்கை எவ்வளவு ?‘‘விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

எ120 மாணவர்களுக்கு 200 சதுர மீட்டரில் சமையல் அறை மற்றும் டைனிங் ஹால் உள்ளதா ?

- ஒரு மாணவருக்கு 0.25 சதுரமீட்டர் என் அளவில் Students activity centre உள்ளதா ?
- 100 மாணவர்களுக்கு 10 கழிவறைகள் உள்ளதா ?
- கல்லூரிகளுக்கு அங்கீகாரம் வழங்கும் அண்ணா பல்கலைக்கழகங்கள் முதலில் தங்கள் வளாகத்தில் உள்ள கல்லூரிகளில் இந்த வசதிகளைச் செய்துள்ளனவா ?

அனைத்து பொறியியல் கல்லூரிகளிலும் மேற்கண்ட வசதிகள் அடிப்படை அவசியமாக இருக்கவேண்டுமென AICTE தரநிர்ணயக்குழு அறிவித்துள்ளது. இந்த அடிப்படை வசதிகள் தங்கள் பகுதிக் கல்லூரிகளில் இருக்கிறதா என்பதை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் வழியாகக் கேள்விகளை அனுப்பி பதிலைப் பெறுங்கள். அனைத்துக் கல்லூரிகளுக்கும் பல்கலைக்கழகங்களுக்கும் பதிவு அஞ்சலில் கேள்விகளை அனுப்புங்கள். இவைபோன்ற அடிப்படை வசதிகளே இல்லாத கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கிய பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள், பதிவாளர்கள், சிண்டிகேட் உறுப்பினர்கள் மீது நீதிமன்ற நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கும், கல்லூரிகளின் அங்கீகாரத்தை நிறுத்துவதற்கும் முதற்கட்டமாக புள்ளி விபரங்கள் சேகரிப்பு மிகவும் அவசியம்.

# கொட்டும் மழையில் ஓட்டேரியில் நடந்த கழகப் பொதுக் கூட்டம்

16.12.2010 வியாழன் மாலை 6 மணியளவில் வட சென்னை, ஓட்டேரி, வெங்கட்டம்மா சமாதி தெருவில் புரட்சியாளர் டாக்டர் அம்பேத்கர் நினைவு நாள் பொதுக் கூட்டம் சி. பாசுகர் தலைமையில் வி. ஜனார்தனன் முன்னிலை வகிக்க, ந. தட்சிணாமூர்த்தி வரவேற்க கழகத் தோழர்கள் சி. அருள்தாசு, ந. நாத்திகன், பாவலர் கீர்த்தி ஆகியோர் இன உணர்வு பாடல்கள் பாடினர். தொடர்ந்து மந்திரமல்ல தந்திரமே எனும் அறிவியல் விளக்க நிகழ்ச்சியை சிற்பி இராசன் சுமார் ஒரு மணி நேரம் நடத்தினார். மழைக் குறுக்கிட அரை மணி நேரம் நிகழ்ச்சி நிறுத்தப்பட்டது. மழை விடாமல் தூறிக் கொண்டே இருந்தது. கூட்டத்தை கேட்க கூடி இருந்த பொது மக்கள் கலைந்து செல்லாமல் ஆங்காங்கே ஒதுங்கி இருந்தனர். பொது மக்களின் வற்புறுத்தலின் பேரில் தொடர்ந்து கொட்டும் மழையில் வழக்கறிஞர் சு. குமாரதேவன் உரயாற்றினார். அதனைத் தொடர்ந்து கழகத் துணைத் தலைவர் ஆனூர் செகதீசன் சிறப்புரையாற்றினார். மீண்டும் சிற்பி இராசன் நிகழ்ச்சியைத் தொடர்ந்து நடத்தினார். தோழர் கே. திலீபன் நன்றி கூற கூட்டம் இரவு 10 மணியளவில் முடிவுற்றது.

# “குப்பை”களைக் கிளற வேண்டுமா?

பெரியார் அடிக்கடி சொல்வார், “மனிதனை வெட்டாத பாட்டுக்கு மலத்தை வெட்டினானாம்”. அந்த கதை தான் வீரமணியின் கதையும். வீராவேசமாக உயர்நீதி மன்றம் சென்றார் “பெரிய பெரிய” வழக்கறிஞர் பட்டாளத்தோடு “விட்டேனா பார் பெரியார் திராவிடர் கழகத்தை. குடிஅரசு வெளியிடுவதை தடை செய்வேன். நஷ்டஈடு ரூபாய் 15 லட்சம் வாங்குவேன், பெரியார் சொத்து எனக்குத்தான், என் குடும்பத்துக்குத்தான் சொந்தம். பெரியார் எழுத்துக்களை யாரும் பதிப்பிக்க விடமாட்டேன்” என வீர முழக்கமிட்டார். ஓங்கி அடித்தார் நீதிபதி கே.சந்துரு, “உனக்கேதையா தகுதி பெரியார் எழுத்துக்களுக்கு உரிமை கொண்டாட” என்று! “பெரியார் திராவிடர் கழகம் வெளியிட எந்த தடையும் கிடையாது” என தெளிவான தீர்ப்பு கூறி, பெரியார் எழுத்துக்கு உரிமை கொண்டாடிட போட்டி போடுவதை விட்டுவிட்டு அவர் கொள்கைகளை பரப்புவதில் போட்டி போடுங்கள் என நல்ல புத்தியும் சொன்னார்.

“ஆகா எனக்கு யார் நல்லபுத்தி கூறுவது, மேல்முறையீட்டில் வெல்வேன்” என்று சபதம் மேற்கொண்டு வழக்கும் தொடர்ந்தார். மேல்முறையீடு செய்யாமல் இருந்திருந்தால் புத்திமதியை கேட்டுக் கொண்டதுடன் போயிருக்கும், மேல்முறையீட்டில் கிடைத்த தீர்ப்போ அற்புதமானது. “பெரியாரின் எழுத்துக்களும் கருத்துக்களும் எந்த தனிமனிதனுக்கோ அமைப்புக்கோ சொந்தமானதல்ல அது பொது மக்களின் சொத்து (Public Domain) ஆகவே வீரமணிக்கு எந்த உரிமையும் கிடையாது என நெத்தியடி கொடுத்து தீர்ப்பு கூறியது. சொந்த புத்தி இல்லாத இரவல் புத்திக்காரர்கள், உச்சநீதிமன்றத்துக்கு ஓடினார்கள். செல்வு எவ்வளவு தெரியுமா? வக்கீல் கே.கே.வேணுகோபாலுக்கு மட்டும் 4.50 லட்சம். மற்ற செலவுகள் சுமார் பல லட்சம். அங்கேயும் கிடைத்தது தோல்வி.

இதற்கிடையில் தான் தொடர்ந்த வழக்கின் அசல் மனுவில் சில திருத்தங்கள் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையோடு சென்னை உயர்நீதி மன்றத்தில் வேறு ஒரு மனுவும் தொடர்ந்தார். அய்யோ பாவம் அதிலும் தோல்வி. விளைவு அசல் வழக்கு விசாரணைக்கே உரியதல்ல என்ற நிலை. பாவம் எத்தனை தோல்விகள். யாரை அடிப்பது. அதனால் தான் “மனிதனை வெட்டாத பாட்டுக்கு மலத்தை வெட்டினானாம்” என்று சொல்வதைப் போல் இந்த தோல்விக்கு எல்லாம் இந்த வக்கீல் துரைசாமிதான் என்று கருதி விட்டார் போலும்! பெரியார் திராவிடர் கழகத்தாருடன்தான் மோத முடியவில்லை, இவனையாவது ஒருகை பார்ப்போம் என வக்கீல் துரைசாமி மீது நடவடிக்கை எடுத்து “சன்னத்தை” ரத்து செய்யுபடி சொல்லி “தமிழ்நாடு பார் கவுன்சலில்” மனு கொடுத்துள்ளாராம் வீரமணி. ஒரு காலத்தில் திராவிடர் கழகத்திற்கும் பெரியார் டிரஸ்டுக்கும் ஆஜராகிக் கொண்டிருந்தவர் இன்று எங்களுக்கு எதிராக ஆஜர் ஆவது சட்டவிரோதமானது. ஆதலால் வக்கீல் துரைசாமியை வக்கீல் தொழிலிருந்து நீக்கம் செய்ய வேண்டும் என மனு செய்துள்ளார். வக்கீல் துரைசாமியை ஒழித்து விட்டால் அப்புறம் எல்லாமே வெற்றிதான்.

வீரமணியாரே, சம்மந்தமில்லாமல் அவரிடம் மோதவேண்டாம். சம்பந்தா சம்பந்த மில்லாமல் பல சம்பந்தங்கள் வெளிவரவும் வேண்டாம். காரில் இருக்க வேண்டிய “பெட்ரோல்” முதல் மாடிக்கு வந்த கதை என்ற நினைப்பில்! 1971 ஆம் ஆண்டு ஜனவரி, சேலம் மாநாட்டில் கலந்து கொள்ளாமல் ஓடி வந்தது.... பெரியார் கொடுத்து வைத்திருந்த ரூ.10,000 திருட்டுப் போன மர்மம்..... திருட்டுப் போன பணம் பாண்டிச்சேரி போலீசில் சிக்கியது..... **இந்தக் கதைகளைத் தெரிந்தவர்கள் இருக்கவே செய்கிறார்கள். அந்தக் குப்பைகளைக் கிளற வைத்து விடாதீர்கள் !**

**- தெரிந்தவன்**

# அரசு மருத்துவனை வசதிகள் கோரி பொள்ளாச்சியில் கழகம் ஆர்ப்பாட்டம்

2011 இல் நடைபெறுகிற மக்கள் தொகை கணக்கெடுப்பின்போது சாதிவாரி கணக் கெடுப்பையும் நடத்தி, இடஒதுக்கீடு கொள்கையை காப்பாற்ற வலியுறுத்தியும், பொள்ளாச்சி அரசு மருத்துவமனை மாவட்ட தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டு ஓராண்டாகியும் அதற்குரிய உள் கட்டமைப்புப் பணிகள் நடைபெறாம லிருப்பதைக் கண்டித்தும், மருத்துவமனை விரிவாக்கத்திற்கு வசதியாக மருத்துவமனையை ஒட்டியுள்ள பழைய பள்ளிக்கூட நிலங்கள் சுமார் 3 ஏக்கர் நகராட்சி இடத்தை மருத்துவ மனைக்கு வழங்க வேண்டும் என வலியுறுத்தியும், பொள்ளாச்சியில் 23.12.2010 அன்று மாலை நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு நகர செயலாளர் வே. வெள்ளிங்கிரி தலைமை தாங்கினார். ஆர்ப்பாட்டத்தில் ஆதித் தமிழர் பேரவை தி.செ. கோபால், தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் சங்கம் தட்சிணாமூர்த்தி, சவரத் தொழிலாளர் சங்கம் கிளாமர் இராசேந்திரன், தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேரவை ஆர். வேலு ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினர்.

ஆதித் தமிழர் விடுதலை முன்னணி, தமிழ்நாடு மண்பாண்ட தொழிலாளர் சங்கம், கட்டுமானத் தொழிலாளர் சங்கம், தமிழ் இளைஞர் பொதுநல மன்றம் ஆகியன பங்கேற்ற இந்நிகழ்வில், பொள்ளாச்சி நகர கழகப் பொறுப்பாளர்கள் த. இராசேந்திரன், கலை இராசேந்திரன், ஆனைமலை அரிதாசு, யாழ்மணி, ஒன்றிய கிளை பொருப்பாளர்கள் சோ. மணிமொழி, த. கண்ணன், ஆனந்த், செந்தில், கார்த்தி, த. மணி, பழ. மாரிமுத்து, உதயகிரி, மாணவர் கழகம் சார்பில் நாட்டுதுரை, வெற்றி, மணி சங்கர் மற்றும் பகுத்தறிவாளர் பேரவை அமைப்பாளர் சி. விசயராகவன், கழக மாவட்ட செயலாளர் கா.சு. நாகராசன் உள்ளிட்ட சுமார் 100 பேர் பங்கேற்றனர்.

## கழக இணையர் தினகரன் – ஜெயந்தி நன்கொடை

அயன்புரம் பி.கே. நாராயணன் - வசந்தா ஆகியோர் மகன் கழகத்தோழர் தினகரனுக்கும், இராஜேந்திரன்-அலர்மேலு மகன் ஜெயந்திக்கும் 7.1.2007 அன்று பெரம்பூர் இரயில் மண்டபத்தில் திருமணம் நடைபெற்றது. கடந்த ஓராண்டாக அங்கோலா நாட்டில் பணிபுரியும் தினகரன் விடுப்பில் அயன்புரம் திரும்பியிருக்கிறார். தங்களுடைய திருமண நாளை முன்னிட்டு 7.1.2011 முற்பகல் 11 மணிக்கு கழகத் துணைத் தலைவர் ஆனூர் செகதீசன் இல்லத்தில் சந்தித்து உரையாடி மகிழ்ந்தனர். தங்கள் திருமண நாளை முன்னிட்டு கழக வளர்ச்சி நிதியாக ரூ.5000/- வழங்கினர். ஜெயந்தி - தினகரன் - குழந்தை பண்பாளர் என்கிற பாலசிங்கம் ஆகியோரை பாராட்டி வாழ்த்துகிறோம். (ஆர்)

கழகத் தலைவர், தோழர்களை இல்லங்களில் சந்தித்தபோது தோழர் நீதிராசன் ரூ.1000-மும், ஓட்டேரி சிட்டிபாபு ரூ.500-ம், கொளத்தூர் மு. சுதாகர் ரூ.500-ம் கழகத் தலைவரிடம் கழக ஏட்டுக்கு நன்கொடை வழங்கினர்.

## பினாயக் சென் கைது: கண்டனக் கூட்டத்தில் விடுதலை இராசேந்திரன் கேள்வி

# மனித உரிமையிலும் - மனுநீதிப் பார்வை ஏன்?

*தமிழக மக்கள் உரிமைக் கழக சார்பில் ஜனவரி 1 ஆம் தேதி சென்னை தியாகராயர் நகர் சி.டி.நாயகம் மேல்நிலைப் பள்ளியில் பினாயக் சென்னுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டதைக் கண்டித்து வழக்கறிஞர் பா. புகழேந்தி தலைமையில் நடந்த கூட்டத்தில் பங்கேற்று கழக பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆற்றிய உரையின் தொகுப்பு. (சென்ற இதழ் தொடர்ச்சி)*

பினாயக் சென், உச்சநீதிமன்றத்தில் பிணை மனு தாக்கல் செய்த போது, பிணை வழங்கக் கூடாது என்று சத்தீஸ்கர் காவல்துறை எதிர்ப்பு தெரிவித்து தாக்கல் செய்த மனுவில், கல்கத்தா தொழிலதிபர் பியுஷ்குகாவை (அவரிடமிருந்து தான் கடிதங்கள் கைப்பற்றப்பட்டதாக வழக்கு) மகேந்திரா என்ற ஓட்டலில்தான் கைது செய்ததாக காவல்துறை உண்மையைக் கூறியது. குகா தந்த வாக்குமூலமும்கூட அதுதான். "2007 மே ஒன்றாம் தேதி மகேந்திரா எனும் ஓட்டலில் என்னைக் கைது செய்து, கண்களைக் கட்டி, 6 நாள் சட்ட விரோதக் காவலில் வைத்து மே 7 ஆம் தேதி நீதிபதி முன் கொண்டு போய் நிறுத்தினர்" என்பதே குகா தந்த வாக்கு மூலம். குகா தன்னை சட்ட விரோதக் காவலில் வைத்திருந்தார்கள் என்று கூறிய வாக்கு மூலத்தின் அடிப் படையில் அது குறித்து விசாரணை நடத்தியிருக்க வேண் டும். ஆனால், அப்படி காவல் துறை விசாரணை எதும் நடத்தவில்லை.

அதே சத்தீஸ்கர் காவல்துறை ரெய்ப்பூர் அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், குகாவை மகேந்திரா ஓட்டலில் கைது செய்ததாகக் கூறவில்லை. மாறாக 'ஸ்டேஷன் ரோடு' என்ற சாலையில் சென்றபோது வழியில் மடக்கி கைது செய்ததாகவும், அப்போது அவர் வைத்திருந்த பையை சோதனையிட்டபோது கடிதங்கள் கிடைத்தன என்றும் கூறியது. இந்த முரண்பாட்டுக்கு 'டைப்' செய்வதில் பிழை ஏற்பட்டுவிட்டதாக காவல்துறை சமாதானம் கூறி விட்டது. சாலையில் குகா கைது செய்யப்பட்டார் என்பதற்கு ஒரே ஒருவர் மட்டும் சாட்சியாகக் கொண்டு வந்து நிறுத்தப்பட்டார். அவர், அனில்குமார் சிங் என்ற துணி வியாபாரி. பினாயக்சென் சிறையில் நக்சலைட் தலைவர் நாரயண் சன்யாலை அடிக்கடி சந்திப்பார் என்றும், அவரிடமிருந்து கடிதங்களைப் பெற்று குகாவிடம் கொடுத்தார் என்றும் சாட்சியமளித்தார்.

மற்றொரு கடிதத்தை பினாயக் சென் வீட்டில் கைப்பற்றப் பட்டதாகக் காவல்துறை கூறியது. கைப்பட எழுதிய கடிதமாக இருந்திருந்தால் சோதனைக்கு உட்படுத்தி விசாரணை நடத்தியிருக்க முடியும். அத்தகைய சோதனைகள் ஏதும் நடப்பதை காவல்துறை விரும்ப வில்லை. எனவே 'டைப்' செய்த கடிதமாக "உருவாக்கி" விட்டார்கள். கீழே கையெழுத்தும் இல்லை. அது மட்டுமல்ல, கைப்பற்றப்பட்ட ஆவணங்களில் காவல்துறை ஆய்வாளர் கையெழுத்திட்டு பட்டியலிட வேண்டும் என்பது சட்ட நடைமுறை. அப்படி கைப்பற்றப்பட்டதாக பட்டியலிடப்பட்டு காவல்துறை சாட்சிக்கு வைத்த ஆவணங்களில் இந்த கடிதம் இடம் பெறவில்லை. எனவே இது மோசடியாக பிறகு வழக்கில் இணைக்கப்பட்டிருக்கிறது என்பது தெளிவா கிறது. நியாயமாக நீதிமன்றம் இந்தக் கடிதத்தை ஏற்காமல், நிராகரித்திருக்க வேண்டும். ஆனால் நீதிமன்றம், கடிதத்தை சாட்சியாக ஏற்றுக் கொண்டு விட்டது.

சாட்சியங்களின் சட்டத்தின்படி, காதில் கேட்டதாக கூறு வதை மட்டும் சாட்சியமாக நீதிமன்றம் ஏற்க முடியாது. உதாரணமாக, ராமன் என்பவன், முருகனிடம், "நான் கிருஷ்ணன் தலையை வெட்டிய கத்தியை பக்கத்திலுள்ள கிணற்றில் புதைத்துள்ளேன்" என்று கூறினால், கிணற்றைத் தோண்டி, கத்தியை எடுத்து அதை வழக்குக்கு சாட்சியமாக பயன்படுத்தலாம். ராமன் முருகனிடம் கூறிய 'வாய் மொழி'யை சாட்சியாக நீதிமன்றம் ஏற்க முடியாது. ஆனால், அனில்குமார் என்ற ஒருவர் தந்த வாய்மொழி சாட்சியத்தை மட்டுமே ஏற்று, நீதிமன்றம் சென்னுக்கு ஆயுள் தண்டனை வழங்கிவிட்டது.

அப்படியே கடிதத்தை பினாயக் சென்தான் கொண்டு வந்து கொடுத்தார் என்று ஒப்புக் கொண்டாலும்கூட கடிதத்தின் உள்ளடக்கம் என்ன என்பதைப் பார்க்க வேண்டும். ஏதேனும் வன்முறைகளை நடத்துவதற்கான கருத்து அதில் இடம் பெற்றிருந்தால்தான் குற்றம். இல்லையேல் அதை சட்ட விரோத சதிச் செயலாகக் கருத முடியாது. இதை உச்சநீதிமன்றமே தீர்ப்புகளில் தெளிவு படுத்தியுள்ளது. பொது அமைதிக்கு பாதிப்பு ஏற்பட்டு சமூக ஒழுங்கை சீர்குலைத்தால் மட்டுமே தேச விரோத



செயலாகக் கருத வேண்டும் என்று உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்தியிருக்கிறது.

உதாரணமாக 1984 ஆம் ஆண்டு, இந்திரா துப்பாக்கி யால் சுடப்பட்ட சில மணி நேரங்களில் சண்டிகரில் திரையரங்குக்கு வெளியே இரண்டு மாநில கல்வித்துறை அதிகாரிகள் காலிஸ்தான் தனிநாட்டுக்கு ஆதரவாகவும் இந்துத் தீவிரவாதத்துக்கு எதிராகவும் முழக்கமிட்டனர். பல்வந்த் சிங், பிபுந்தர்சிங் என்ற அந்த இரண்டு கல்வி அதிகாரிகளையும் கைது செய்து அவர்கள் மீது தேசவிரோதம் மற்றும் (124ஏ), இரு குழுக்களிடையே பகைமையை உருவாக்குதல் (153ஏ) என்ற குற்றச்சாட்டு களை சுமத்தி கைது செய்தார்கள். நீதிமன்றம் ஓராண்டு சிறைத் தண்டனையும் வழங்கியது. இந்திரா கொலை சம்பவம் உருவாக்கிய பதட்டம்; பஞ்சாபில் ஆயுதப் போராட்டம் மேலோங்கியிருந்த அந்த சூழலில் கூட இந்தக் "குற்றத் துக்கு" ஓராண்டு தண்டனை மட்டுமே வழங்கப் பட்டது குறிப்பிடத்தக்கது. உச்சநீதிமன்றத்தில் இந்த வழக்கு மேல் முறையீட்டுக்கு வந்தபோது, இந்த வழக்கு 'தேசத் துரோக' குற்றச்சாட்டின் கீழ் வராது என்று உச்சநீதிமன்றம் 1995 ஆம் ஆண்டில் தள்ளுபடி செய்து விட்டது. "பிரிவினை முழக்கங்கள் எழுப்பப்பட்டாலும் அதன் காரணமாக எந்த வன்முறையும் நிகழ்ந்து விடவில்லை. அப்படி, எந்த நிகழ்வு களும் நடத்திடாமல், முழக்கங்கள் மட்டுமே எழுப்பும்போது அதை தேசத் துரோகத்தின் கீழ் குற்றமாகக் கருதிட முடியாது" என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. *(1995(3)* SCC *214)*

*2009* ஆம் ஆண்டு, ஏப்ரல் *9* ஆம் தேதி உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஆர்.வி.ரவீந்திரன் மற்றும் மார்க்கண்டே கட்ஜி ஆகியோர் அடங்கிய அமர்வு வழங்கிய ஒரு தீர்ப்பில், தேசத் துரோகக் குற்றச்சாட்டை நிபந்தனைக்குட்பட்டுத்தான் பயன்படுத்தவேண்டும். கருத்துச் சுதந்திர உரிமையின் கழுத்தை நெறிப்பதற்காக, அதைப் பயன்படுத்தக் கூடாது என்று சுட்டிக் காட்டியது. *1962* ஆம் ஆண்டு பீகார் அரசுக்கும் கேதார் நாத்துக்கும் இடையே நடந்த வழக்கில் இதே கருத்தை உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்தி யிருப்பதையும், நீதிபதிகள் மேலே சுட்டிக்காட்டிய தங்கள் தீர்ப்பில் எடுத்துக் காட்டியிருந்தனர்.

ஆக, குற்றச்சாட்டுக்கு ஆதாரமாக சமர்ப்பிக்கப்பட்ட கடிதங்களும் முறையான ஏற்கத்தக்க ஆதாரங்களாக இல்லை. கடிதங்கள் கைப்பற்றப்பட்டதற்கு முன் வைத்த தகவல்களிலும் முரண்பாடுகள். சாட்சியாக நிறுத்தப்பட்ட வரின் வாய்மொழி சாட்சியும் சட்டப்படி ஏற்கவியலாத ஒன்று. இவ்வளவுக்கும் மேலாக கடிதங்கள் உண்மை என்று ஒப்புக் கொண்டாலும் அதை பினாயக் சென் தான். வெளியே கொண்டு வந்தார், கொடுத்தார் என்ற ஒப்புக் கொண்டாலும், கடிதத்தின் உள்ளடக்கம் - தேசத் துரோகக் குற்றச்சாட்டின் கீழ் வர முடியாது என்ற நிலையில், சென்னுக்கு ஆயுள் சிறை வழங்கப்பட்டுள்ளது. சில ஆபத்தான நக்சலைட் தலைவர்களுக்கு சென் வாடகைக்கு வீடு பார்த்து தந்தார் என்றும், நக்சலைட்டுகளின் மத்திய குழு கூட்டத்தில் சென், சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொள்வது வழக்கம் என்றும், எந்த ஆவணைச் சான்று மில்லாமல் காவல்துறை ஆய்வாளர் ஒருவர் அளித்த சாட்சி யத்தையும் நீதிமன்றம் சென்னுக்கு எதிராகப் பயன்படுத்தியுள்ளது.

காவல்துறை அடிக்கடி பயன்படுத்தும் 'ஆபத்தான நக்சலைட்டுகள்' (Hardcore Naxelites) என்ற சொற் றொடர் சட்டப் புத்தகத்திலே இடம் பெறாத ஒரு புதிராகவே இருக்கிறது. தனி மனிதர்கள் மீது வழக்குகள் தொடர்ந்து அந்த வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டு தண்டிக்கப்படும் வரை, எவருமே குற்றமற்றவர்தான். ஆனால், குற்றங்களோ, வழக்குகளோ ஏதுமின்றி தண்டனை பெறாத ஒருவரை 'ஆபத்தான நக்சலைட்டுகள்' என்ற பெயரை சூட்டி குற்றப் பத்திரிகைகளில் காவல்துறை அப்படி எழுதிக் கொண் டிருப்பதுதான் வியப்பானது. நீதிபதிகளும் இந்த சொற் றொடரைப் படித்தவுடனேயே அவர்கள் வழக்கில் நடுநிலைப் பார்வையைத் தவறி ஆபத்தான மனிதர்கள் பற்றிய வழக்கு என்ற மனநிலைக்கு வந்து விடுகிறார்கள்.

'தேச பக்தி' என்ற சொற்றொடர் மக்களை அச்சுறுத்து வதற்காகவே பயன்படுத்தி மாற்றுக் குரல்களை ஊமை யாக்கி விடுகிறார்கள். ஜனநாயகத்தின் அளவுகோல் தேர்தல்களை நடத்துவது மட்டுமல்ல, மாற்றுக் கருத்து களுக்கு உரிய கவுரவம் வழங்கப்படுகிறதா என்பதும், ஜனநாயகத்தின் முக்கிய அம்சமாகும். இந்தியாவின் ஜனநாயகம் பார்ப்பன நாயகமாகவே இருப்பதால், ஜன நாயகத்தின் உண்மையான உள்ளடக்கம் சாகடிக்கப்பட்டு, மேல் பூச்சு மட்டுமே வெளிப்பட்டு நிற்கிறது. பெரும்பான்மை யினரின் கருத்துகள் என்ற பெயரில் மாற்றுக் குரலை நசுக்கி விட்டால், அரசு என்ற அமைப்பு மேலும் எதேச்சாதி காரமாகவே மாறி நிற்கும்! இந்திரா காந்தி, 1975-77 இல் பிறப்பித்த அவசர நிலை பிரகடன காலம், அப்படித்தான் இருந்தது. மாற்றுக் கருத்துகளே முடக்கப்பட்டன. அப்படி அடக்கப்பட்ட, முடக்கப்பட்ட கருத்துகளே மக்களுக்கு "அவசர நிலை" அடக்குமுறையிலிருந்து விடியலைத் தேடித் தந்ததை மறந்துவிடக் கூடாது அரசிடமிருந்து மாறுபட்ட வர்களும், அதனடிப்படை யில் நிகழும் செயல்பாடுகளுமே ஜனநாயகத்தை இயக்கிக் கொண்டிருக்கின்றன. இந்த ஜனநாயக நாட்டில் ஒரு குடிமகனாக இருப்பவர், அத்தகைய குடிமகனாக நான் இருக்க விரும்பவில்லை என்று கருத்தைக் கூறும் உரிமை வழங்கப்படும் போதுதான் அது ஜன நாயகம்; அப்படிப் பேசுவதே தேசத் துரோகக் குற்றம் என்றால் அதற்குப் பெயர் பார்ப்பன நாயகம். மாற்றுக் குரல்களுக்குத்தான் கூடுதலான பாதுகாப்புகள் வழங்கப் பட வேண்டும். ஆனால் பார்ப்பன நாயகம் - அதை அனுமதிப்பதில்லை.

பார்ப்பனர்களின் வேத மதத்தை - ஒட்டு மொத்த சமூகத்தின் இந்து மதம் என்ற பெயரால் பார்ப்பனர்கள் திணித்தார்கள்; எதிர்த்தால் 'மத வேஷம்' தேச விரோதம் என்கிறார்கள். இதே அணுகுமுறைதான் ஜனநாயகத்திலும் தேசபக்தி என்ற பெயரில் பின்பற்றப்படுகிறது.

பினாயக் சென் தனது செயலாலும், பேச்சாலும், மாறுபாடுகளை வெளிப்படுத்தினார். திணிக்கப்பட்ட பொதுப் புத்தியிலிருந்து விலகி நின்றார். அவர் தான் உண்மை ஜனநாயகத்தின் அடையாளம். பார்ப்பன நாயகத்தின் எதிரி. பினாயக் சென்னைக் காப்பாற்ற வேண்டும் என்பது, ஜனநாயகத்தைக் காப்பது ஆகும். 'மவுனப்படுத்தி', 'முடக்கி' சிறையிலடைப்பது பார்ப்பனி யத்தின் செயல் வடிவமாகும்.

பசுமை வேட்டை என்ற பெயரில் பழங்குடி மக்கள் வேட்டையாடப்பட்டபோது, 'சல்வா ஜுடும்' என்ற பெயரில் அரசின் கூலிப் படை ராணுவத்தோடு சேர்ந்து கொண்டு, மக்கள் மீது கட்டவிழ்த்துவிட்ட அடக்குமுறைகளை நேரில் சென்று அறிந்து, அசைக்க முடியாத ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தி வந்தார். அதுவே அவர் மீது பார்ப்பனிய அரசு வெறுப்பைக் கக்குவதற்கு முக்கிய காரணமாக அமைந்து விட்டது.

பினாயக் சென் இப்படி எல்லாம் எதிர்ப்பை வெளிப் படுத்தாமல் இருந்தால் அவர் பாதுகாப்பாக இருந்திருக் கலாம். தேச பக்தியுள்ள டாக்டராக அவர் கருதப்பட்டிருப் பார். நமது நாட்டில் தேச பக்திக்கான அடையாளங்களும் வெளிப்பாடுகளும் எப்படி தீர்மானிக்கப்படுகின்றன ?

காஷ்மீர் மக்களின் தன்னாட்சி உரிமையை அங்கீ கரிக்க வேண்டும் என்றால், அவர்கள் தேச விரோதிகள். காஷ்மீர், இந்தியாவின் ஒரு பகுதி தான் என்று பொய் பேசினால், அவன் தேச பக்தன் !

இந்து மதம் என்றாலே அது பார்ப்பன மதம். இந்துக்களின் தேசம் என்ற பெயரில் பார்ப்பனர்களின் தேசமாக்குகிறார்கள் என்றால் அது தேச விரோதம். இந்தியா புண்ணிய பூமி; வேதங்களைக் கொண்ட பெருமைக்குரிய தேசம். நாம் அதன் புதல்வர் என்று பேசினால் அது தேச பக்தி.

இராணுவத்தாலும், சட்டங்களாலும் ஒற்றுமையை செயற்கையாகத் திணிக்க முடியாது. மக்களிடமிருந்து ஒற்றுமை உணர்வு அரும்ப வேண்டும் என்று கூறினால், அது தேச விரோதம். எந்த விலை கொடுத்தாவது ஒருமைப் பாட்டைக் காப்போம் என்று முழங்கினால், அது தேச பக்தி.

விவசாயத் துறையில் வளர்ந்திருக்கிறோம் என்று கூறிக் கொண்டு, பல்லாயிரக் கணக்கான விவசாயிகளின் தற்கொலையை மறைத்தால் அது தேச பக்தி.

*22000* மக்கள் போபாலில் பலியான பிறகும், *26* ஆண்டுகளாக அதற்குக் காரணமான யூனியன் கார்பைடு அதிகாரி ஆண்டர்சன், தண்டிக்கப்படாததை சுட்டிக் காட்டினால் அவன் தேச விரோதி! ஆசியாவிலேயே மக்கள் நலன் பேணும் ஜனநாயக ஆட்சி, இந்தியாவில் தான் நடக்கிறது என்று பொய் பேசினால் அது தேச பக்தி !

*(4 ஆம் பக்கம்)*

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# பெரியார் நினைவு நாள் — நிகழ்வுகள்

### வட சென்னையில் பெரியார் நினைவு நாள் பொதுக் கூட்டம்

*24.12.2010 வெள்ளிக் கிழமை மாலை 6.30 மணியளவில் சென்னை பெரம்பூர், பெரவள்ளூர் சதுக்கம், காமராசர் சிலை அருகில் வடசென்னை மாவட்ட கழகம் சார்பில் பெரியார்*




*நினைவு நாள் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கழக வழக்கறிஞர் சு. குமாரதேவன், தலைமை வகிக்க வி. ஜனார்த்தனன் வரவேற்க மு. சுதாகர், தே. ஜெயவேலு, இரா. பரத் முன்னிலை வகிக்க கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரை ஆற்றினார். கழகத் துணைத் தலைவர் ஆனூர் செகதீசன், கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆகியோர் உரையாற்றிய இக்கூட்டத்தில் எ. கேசவன், மு. வேலவன், பி.சி.ஆர். மனோகரன் (தி.மு.க.) ஆகியோரும் உரையாற்றினர். டிஜி. அரசு நன்றி கூறினார். இக்கூட்டத்தில் பாபா நகர் ஜெ.க. ஆதவன், தி.க.விலிருந்து விலகி தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டார். அவருக்கு கழகத் தலைவர் கருப்பு சட்டைத் துணியை அணிவித்து மகிழ்ச்சி தெரிவித்தார். இக்கூட்டத்தில் கழகத் தோழர்கள், பொது மக்கள் நூற்றுக்கணக்கில் கூடியிருந்து கூட்டம் துவங்கியதிலிருந்து முடியும் வரை செவிமடுத்தனர். நிகழ்ச்சித் துவக்கத்தில் தமிழின எழுச்சிப் பாடல்களை சமர்பா குமரன் பாடினார்.*

### வடசேரியில்....

*தந்தை பெரியார் 132 வது பிறந்த தினத்தை முன்னிட்டு கழகத்தின் சார்பாக வடசேரி பேருந்து நிலையத்திலும், வடசேரி குஞ்சிதபாதம் சதுக்கத்திலும், வடசேரி வடக்குத் தெருவிலும் கழகத் தோழர் சிவசுப்பிரமணியன் கடை அருகிலும் பெரியார் படம் வைத்து அலங்கரித்து மாலை அணிவிக்கப்பட்டது.*

### அன்னதானப்பட்டியில்

*18.12.2010 அன்று மாலை 6.30 மணிக்கு சேலம் அன்னதானப்பட்டி வள்ளுவர் நகரில், கழகம் சார்பாக பெரியார் நினைவு நாள் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அசோகன் தலைமையில் நடைபெற்ற இப்பொதுக் கூட்டத்தில், முதல் நிகழ்வாக 'மந்திரமா தந்திரமா' நிகழ்ச்சியினை, கோகுலகண்ணன் நடத்தினார். தோழர்கள் காமராஜ், இளமாறன் (த.ஒ.வி.இ.), தமிழ்மதி ஆகியோர் உரைகளை தொடர்ந்து, கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார்.*

### கோவை ஆவாரம்பாளையத்தில்

*கோவை ஆவாரம்பாளையத்தில் பெரியார் நினைவு நாளன்று பெரியார் படத்துக்கு மாலை அணிவித்து தோழர்கள் சாதி எதிர்ப்பு உறுதி ஏற்றனர். இந்நிகழ்வில் கழகத் தோழர் களுடன் தி.மு.க., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, தே.மு.தி.க. தோழர்களும் பங்கேற்றனர்.*

### தஞ்சையில்

*24.12.2010 அன்று தஞ்சாவூர் கொடி மரத்து மூளை பகுதியில் பெரியார் நினைவு நாள் நிகழ்ச்சி நடைபெற்றது. பெரியார் படத்திற்கு மாலை அணிவித்து வீரவணக்கம் செலுத்தப் பட்டது. தோழர்கள் அனைவரும் நினைவு நாள் உறுதிமொழி ஏற்றனர். தோழர் இராமர் தலைமை தாங்கினார். 30க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர். தோழர்கள் இராவணன், புதியவன் ஆகியோர் கலந்து கொண்டனர். தஞ்சை நகரம் முழுவதும் நினைவு நாள் சுவரொட்டி ஒட்டப்பட்டது.*

### பெரம்பலூரில்

*பெரியாரின் 37 ஆவது நினைவு நாளில் பெரம்பலூர் பழைய பேருந்து நிலையத்திலுள்ள பெரியார் சிலைக்கு பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பில் மாவட்டத் தலைவர் துரை. தாமோதரன் தலைமையில் மாலை அணிவிக்கப்பட்டது. இதில் கழகத் தோழர்கள் எல்.ஐ.சி. கார்த்தியேன், பேராசிரியர் அம்மணி, ஜெ. ஜெயவர்த்தனா, பெரியார் நேசன், பெரம்பலூர் இராஜேஷ், ரமேஷ், பாடலூர் சுதாகர், அனுக்கூர் மணிவண்ணன், கற்பனை பித்தன் இரவிச்சந்திரன், பூபாலன், திருப்பெயர் பிரபாகரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.*

### தூத்துக்குடியில்

*தூத்துக்குடி மாவட்ட கழகம் சார்பில் 24.12.2010 அன்று தூத்துக்குடியில் உள்ள தந்தை பெரியாரின் சிலைக்கு சாதி ஒழிப்பு முழக்கத்துடன் மாலை அணிவிக்கப்பட்டது. மாவட்டத் தலைவர் பொறிஞர் சி. அம்புரோசு பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தார். நிகழ்வில் கழக மாவட்டச் செயலாளர் கோ. அ. குமார், மாவட்ட இணைச் செயலாளர் க. மதன், மாநகரத் துணைத் தலைவர் ச. இரவி சங்கர், மாநகரச் செயலாளர் பால். அறிவழகன், சி. அமிர்தராசு, அ. அறிவுப் பித்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.*

### திருப்பூரில்

*24.12.2010 அன்று தந்தை பெரியார், டாக்டர் அம்பேத்கர் நினைவு நாள் பொதுக் கூட்டம், திருப்பூர் பூலுவபட்டி, கீதா நகர் பகுதியில் இரா. குமார் தலைமையில் நடந்தது. பிரசாத் வரவேற்புரையாற்றினார். கோபி பேலுச்சாமி, கா.சு. நாகராசு சிறப்புரையாற்றினார். சிற்பி ராசன் மந்திரமா, தந்திரமா நிகழ்ச்சிகளை நடத்தினார். மணிகண்டன் நன்றி கூறினார்.*

### கோபியில்

*24.12.2010 அன்று பெரியார் நினைவு நாள் அன்று மாவட்ட கழகத்தின் சார்பாக கோபி பெரியார் திடலில் அமைந்துள்ள அய்யா சிலைக்கு மாவட்ட செயலாளர் இளங்கோவன் தலைமையில் மாலை அணிவிக்கப்பட்டது. இந்நிகழ்வில் தோழர்கள் செயராமன், குணசேகரன், அர்ச்சுனன், விஜயசங்கர், சுப்பிரமணியம், ஆனந்தராஜ், செகநாதன், நிவாசு உட்பட பலர் கலந்து கொண்டனர்.*

***கோபி நகர கழக கலந்துரையாடல் :** 24.12.2010 அன்று பெரியார் நினைவு நாள் அன்று கோபி நகர கழகத்தின் கலந்துரையாடல் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு மாவட்ட செயலாளர் இராம. இளங்கோவன் தலைமையேற்க, நகர தலைவர் நாகப்பன் முன்னிலை வகிக்க, நகர தலைவர் இல்லத்தில் கூட்டம் நடைபெற்றது.*

*சனவரி இறுதியில் கோபி நகரத்தின் சார்பாக குடிஅரசு நூல் விளக்க பொதுக் கூட்டம் நடத்துவது. பெரியார் முழக்கம் ஓர் ஆண்டு சந்தா தற்பொழுது நடைமுறையில் உள்ளது. அதனை இரண்டாண்டு, மூன்றாண்டு, அய்ந்தாண்டு சந்தாவும் நடைமுறைபடுத்த தலைமையை கேட்டுக் கொள்வது. 'புரட்சிப் பெரியார் முழக்கம்' அரசு வாயிலாக அனைத்து நூலகங்களுக்கும் செல்ல தலைமை நடவடிக்கை எடுக்க விழ செய்ய வேண்டும் என்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்நிகழ்வில் குணசேசரன், செயராமன், நிவாசு, செகநாதன், ரகுநாதன், விசயசங்கர், சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்டம் முடிந்த பின்பு நகர தலைவர் இல்லத்தில் உணவு வழங்கப்பட்டது.*

*(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

*இறுதியாக ஒரு கருத்தை சுட்டிக் காட்ட வேண்டும். பினாயக் சென்னுக்கு ஆதரவாக 'இந்து' பார்ப்பன ஏடு தலையங்கம் தீட்டுகிறது. டைம்ஸ் ஆப் இந்தியா தீர்ப்பைக் கண்டிக்கிறது. உச்சநீதிமன்ற நீதிபதிகளும், நோபல் பரிசு பெற்றவர்களும் சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் குரல் கொடுக்கின்றன. வரவேற்க வேண்டியதுதான். மகிழ்ச்சி தான். ஆனால், இதே அடக்குமுறை சட்டங்களுக்கு உள்ளாக்கப்பட்டு, ஆண்டுக்கணக்கில் சிறையில் அடைக்கப்பட்ட கொளத்தூர் மணி, பழ. நெடுமாறன், வை.கோ. போன்றவர்களுக்கு ஆதரவாக, ஏன், இந்தக் கண்டனக் குரல் எழவில்லை ?*

*தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்பட்டால், தமிழ்நாட்டில் வாழும் சிங்கள மாணவர்கள் கதி என்னவாகும் என்று, ஒரு எச்சரிக்கைக்காகவே கருத்தை வெளியிட்ட சீமான், 5 மாத காலம் சிறையில் அடைக்கப்பட்டிருந்தாரே; அதை எதிர்த்து ஏன், இந்த 'இந்து' பார்ப்பனர்கள், மனித உரிமை அமைப்புகள் கண்டனம் தெரிவிக்கவில்லை ? அவர் பேசியதற்குப் பிறகு எந்த ஒரு சிங்களவருக்காவது எந்த ஒரு சிறு ஆபத்தாவது தமிழ்நாட்டில் நடந்ததா ? ஆனால், தமிழக மீனவர்கள் மீதான சிங்களர் தாக்குதல் மட்டும் தொடருகிறதே ! விடுதலைப் புலிகளை என்றும் ஆதரிப்போம் என்று நாடாளுமன்றத்தில் வைகோ பேசியதற்கு எந்தத் தண்டனையும் இல்லை. அதே கருத்தை மதுரை திருமங்கலத்தில் மக்கள் மன்றத்தில் பேசியதற்காக ஜெயலலிதா பார்ப்பன ஆட்சி ஒன்றரை ஆண்டுகாலம் அவரை சிறையில் தள்ளியது. அந்தக் கூட்டத்தில் 5 நிமிடம் - அய்ந்தே அய்ந்து நிமிடம் நன்றி கூறியவரைக் கூட ஜெயலலிதா பார்ப்பன ஆட்சி ஒன்றரை ஆண்டுகாலம் சிறையில் தள்ளியது.*

*தமிழ்நாட்டில் சென்னையில் பினாயக் சென்னுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம் நடத்த பெரியார் திராவிடர் கழகமும் காஞ்சி மக்கள் மன்றமும் அனுமதி கேட்டபோது அது 'நீதித் துறையில் குறுக்கிடும் நடவடிக்கை' என்று காவல்துறை அனுமதி மறுத்திருக்கிறது.*

*2ஜி ஸ்பெக்ட்ரம் வழக்கு உச்சநீதிமன்றத்தில் இருக்கும் போதே தி.மு.க. தாங்கள் குற்றமற்றவர்கள் என்று கூட்டங்கள் போட்டு பேசுகிறார்களே; அதை மட்டும் எப்படி அனுமதித்தீர்கள் ? மருத்துவக் கல்லூரிகளில் நுழைவுத் தேர்வை நடத்த வேண்டும் என்று உச்சநீதிமன்றம் கூறியதற்காக அதை எதிர்க்காமல் இருந்து விட முடியுமா ? தமிழக அரசே எதிர்ப்பு தெரிவித்துள்ளதே ? காவல் துறையின் பார்வையில் இவை எல்லாம் நீதித் துறையில் குறுக்கிடும் நடவடிக்கை தானா ?*

*'இந்து' போன்ற பார்ப்பன ஊடகங்கள் மனித உரிமைப் பிரச்சினையை குறியீடாக மாற்றி, பினாயக் சென்னுக்கு மட்டும் ஆதரவு தெரிவித்து, முற்போக்கான முகத்தைக் காட்டிக் கொள்ளும் அதே நேரத்தில், ஈழத் தமிழினப் படுகொலை உட்பட பல்வேறு மனித உரிமை மீறல்களை நியாயப்படுத்தி எழுதுகின்றன; மனித உரிமையிலும் இவர்களின் மனுநீதிப் பார்வையைத் தானே காட்டுகிறது. இந்த பார்ப்பன வஞ்சகத்தையும் நாம் அம்பலப்படுத்த வேண்டும். நம்முடைய மனித உரிமைக்கான குரல் குறியீடுகளோடு முடங்கி விட்டால் அது ஜனநாயகக் குரல் அல்ல; பார்ப்பன நாயகக் குரல். இந்த மனித உரிமைக் குரல் கொளத்தூர் மணிக்கும், சீமானுக்கும், லோகு அய்யப்பனுக்கும் விரிவாகும் போதுதான் அது ஜனநாயகத்துக்கான குரல்.*

**(நிறைவு)**

### திருத்தம்


*பினாயக் சென் மனைவி - ஆய்வுப் படிப்பில் முனைவர் பட்டம் பெற்றவர். மருத்துவர் என்று கடந்த இதழில் தவறாக வெளிவந்துள்ளது. அதேபோல் பாகிஸ்தான் உளவு நிறுவனம்* "Inter States Service Intellegence" (ISI) *என்பதற்கு பதில்* "Indian Service Intellegence" *என்று தவறாக வந்துள்ளது. தவறுக்கு வருந்துகிறோம்.* - ஆர்

**தோழர்களுக்கு இனிய பொங்கல் புத்தாண்டு வாழ்த்துகள்!**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 13th January 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | periyardk.org | திருவள்ளுவர் ஆண்டு 2042 | ஜனவரி 20, 2011 | புரட்சி 10 | முழக்கம் 1 | விலை: ரூ.2.50

## குழப்பவாதிகளுக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி பதில்


# பெரியார் பேசியது தமிழ் தேசியமல்ல; அவர் வலியுறுத்தியது தனித் தமிழ் நாடு

*மீண்டும் மீண்டும் பெரியாரை கொச்சைப்படுத்தும் சில தமிழ்த் தேசியவாதிகளுக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி விரிவாக பதிலளித்தார். டிசம்பர் 24 அன்று வடசென்னை பெரம்பூரில் நடந்த கூட்டத்தில் கழகத் தலைவர் ஆற்றிய உரை:*

இன்று பெரியாரின் நினைவு நாளில் நாம் கூடியிருக்கிறோம். வழக்கமாக பெரிய அளவில் எடுக்கப்படும் பிறந்த நாள் விழாக்களைவிட, நினைவு நாள் விழாக்கள்தான் மிகவும் தேவையானதும், பொருத்தமானதும் என்று நாம் கருதுகிறோம். பிறந்த நாள் விழாக்களை அந்தந்த தலைவர்கள் வாழுகின்ற காலம் வரை எடுப்பார்கள். அவர்களிடமிருந்து ஏதாவது பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு இப்பொழுதெல்லாம் பார்க்கிறோம். அவர்களுக்கெல்லாம் கூச்சமாக இருக்கிறதோ இல்லையோ, அவர்களுக்கு கொடுக்கும் அடைமொழிகளை பார்த்து நமக்கு கூச்சமாக இருக்கிற அளவுக்கு, பல்வேறு அடைமொழிகளை கொடுத்து சுவரொட்டிகளிலும், பதாகைகளிலும் விளம்பரம் செய்கிறார்கள். ஆனால் மறைந்துவிட்ட தலைவர்களுக்கு நினைவு நாள் எடுப்பது என்பதுதான், அவர்களுடைய கொள்கைகளை, அவர்கள் ஆற்றிய தொண்டினை, அவற்றை நாம் தொடர்ந்து எடுத்துச் செல்ல வேண்டிய தேவையை, இவை எல்லாவற்றையும் எண்ணி பார்க்கிற நிகழ்ச்சியாகவும் இருக்கும். நினைவு நாள் கூட்டம் என்பதுதான் ஒரு இயக்கத்திற்கு மிகவும் தேவையானது என்ற அடிப்படையில், இன்று நாம் பெரியார் நினைவு நாள் எடுக்கிறோம்.

நம் நாட்டில் பல தலைவர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். மிகப் பெரிய தலைவராக கருதப்பட்ட மனிதர்களுக்கும் மேலாக கருதப்பட்ட 'மகாத்மா'க்களெல்லாம் வாழ்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நினைவு நாள் என்பது, அவருடைய படத்திற்கு மாலை அணிவித்து வணங்குவதை படம் பிடிக்க, செய்தியாளர்களை ஏற்பாடு செய்வது என்ற அளவோடு முடிந்து விடுகிறது. நினைவு நாள் கூட்டங்களில் அவருடைய கொள்கைகளைப் பற்றிப் பேசுவதில்லை. அவர் நம்மிடம் என்ன எதிர்பார்த்தார் என்பதையோ, நாம் அவருடைய வழியில் ஏன் செல்ல வேண்டும் என்ற தேவையை விளக்குவதற்கோ எந்த முயற்சியும் செய்வதில்லை. தமிழ்நாட்டிலும் பெரியாருக்கு இணையாக (வயதில்) வாழ்ந்த தலைவர் ஒருவர் இருந்தார். இந்த நாட்டின் பொறுப்பில் இருந்தார். குடிஅரசு தலைவருக்கு இணையான, கவர்னர் ஜெனரலாக இருந்தார். பிறகு உள்துறை அமைச்சர், இலாகா இல்லாத அமைச்சர், முதலமைச்சர் என இருந்து ஊராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடுவதற்குள் இறந்து போன இராஜாஜி, அவர் உயிரோடு இருந்த காலத்தில் திராவிட முன்னேற்ற கழகத்தினர், அவரை மூதறிஞர் என்றெல்லாம்கூட பாராட்டினர். இன்று அவரைப் பற்றிப் பேச ஆள் இல்லை. சேலம் மாநகராட்சி அலுவலகம் அருகில் இராஜாஜி சிலை இருக்கிறது. அவரின் பிறந்த நாளிலும், நினைவு நாளிலும், நகராட்சி ஊழியர்கள் சலிப்போடு ஒரு மாலை அணிவிக்கிறார்கள். வேறு யாரும் மாலைகூட அணிவிப்பதில்லை.

ஆனால், பெரியார் மறைந்து இவ்வளவு காலங்களுக்குப் பின்னால், முப்பத்தி ஏழு ஆண்டுகள் கடந்த பின்னாலும், அவருடைய கொள்கைகளைப் பேச, செயலாற்ற பல இயக்கங்கள், பெரியாரை இன்றும் பேசியாக வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தில் பல இயக்கங்கள் இருப்பதை பார்க்கிறோம். பெரியார் வாழ்ந்த காலத்தில், அவரை விமர்சித்தவர்கள் கூட, இன்று பாராட்டி போற்றுவதை பார்க்கிறோம். பொதுவுடமை இயக்கங்கள் எல்லாம் அவரைப் பற்றி பேசினர். முதலாளித்துவ சிந்தனையாளர் என்று சொன்னார்கள். "அடிக் கட்டுமானத்தில்" இல்லாத சமயத்தை, சாதியைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார் என்று எகத்தாளம் செய்தவர்களெல்லாம், இன்று அவர்



கொள்கைகளைத் தான் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அதை செயல் திட்டமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். உலகத்தில் தங்களைவிட அறிவாளிகள் யாரும் இல்லை என்று கருதிக் கொண்டிருக்கிற ஒரு இயக்கம் சி.பி.எம். கட்சி. அவர்கள் பெரியாரைப் பற்றி செய்கிற விமர்சனங்கள் (பெரியாரை மட்டும் அல்லாமல், தமிழர், தமிழீழம் பற்றியும்) எதிராகத்தான் இருக்கும். இன்று தீண்டாமை ஒழிப்பு முன்னணி என்று வைத்துக் கொண்டு, சாதி ஒழிப்பை ஒரு செயல் திட்டமாக வைத்திருக்கிறார்கள். அதை நாம் விமர்சிக்கவில்லை; வரவேற்கிறோம். பெரியார் இறுதியாக கருவறை நுழைவு போராட்டத்தை அறிவித்திருந்தார். அனைத்து சாதியினருக்கும் அர்ச்சகர் ஆகும் உரிமை வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்த மன்னார்குடி ராஜகோபாலசாமி கோவிலின் கருவறையில் தொண்டர்களோடு நுழையப் போவதாக அறிவித்தார். அப்போது வரவேற்றார்களோ இல்லையோ, இப்பொழுது வருகிற ஜனவரி 30-ம் நாளில், இந்திய பொதுவுடமைக் கட்சி அதே மன்னார்குடி ராஜகோபாலசாமி கோவிலில் கருவறை நுழைவு போராட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். இன்னொரு பக்கம் மக்கள் கலை இலக்கிய கழகம், பெரியார் சொன்ன, சமய வழிபாட்டு இடங்களிலும் சமத்துவம், தமிழ் மொழிக்கு முன்னுரிமை வேண்டும் என்பதைப் பற்றியே பேசுகிறார்கள்.

பெரியார் 1925-க்கு முன்னால் பேசியவற்றை, சுமார் எண்பது, எண்பத்தைந்து ஆண்டுகளுக்குப் பின்னால் இப்பொழுது எல்லோரும் பேச தொடங்கியிருக்கிறார்கள். ஒரு நல்ல மருத்துவர் என்பவர் நோயை துல்லியமாக தெரிந்து கொள்வார். அதுவே பாதி மருத்துவம் முடிந்தது போல என்று சொல்வார்கள். அதேபோல பெரியார், இந்த சமுதாயத்தின் நோயை மிகத் துல்லியமாக அறிந்திருந்தார். அதற்கான மருந்தை மிகச் சரியாக மக்களிடத்தில் கொண்டு போய் கொடுத்தார் என்பதை பெரியார் தொண்டர்களைவிட அவர்கள் சரியாக புரிந்து கொண்டிருக்கிறார்கள். இது ஒரு பக்கம். இன்னொரு பக்கம், பழுத்த மரத்தின் மீது தான் கல்லடி படும் என்று சொல்வார்கள். இப்பொழுது அரசியல்வாதிகளுக்கு தமிழ்நாடு முழுவதும் ஒரே ஒரு பழுத்த மரமாக கண்ணுக்கு தெரிவது பெரியார் தான். பெரிய தத்துவங்களை பேசுகிறவர்கள் எல்லாம், பெரியார் மீது தங்கள் விமர்சனங்களை பேச துடிக்கிறார்கள். முயற்சிக்கிறார்கள். அவர் மீது குற்றச்சாட்டுக்களை வைத்து தங்களை அறிவாளிகளாக காட்டிக் கொள்ள நினைக்கிறார்கள். தமிழ் தேச பொதுவுடமை கட்சியின் பொதுச் செயலாளர் மணியரசன் கூட, பெரியாரை தமிழ் தேசத்தின் தந்தையாக ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொல்லியிருக்கிறார். (அவரிடம் நாம் சான்றிதழ் கேட்டு நிற்கவில்லை) பெரியார் குழப்பமாக பேசினார் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

பெரியார், தமிழ் தேசியமே பேசவில்லை. தனி தமிழ்நாடு வேண்டும் என்று தான் பேசினார் என்பதை இவர்கள் முதலில் அறிந்து கொள்ள வேண்டும். தமிழ் தேசியம் என்றால், ஸ்டாலினும், லெனினும் ஒரு கொள்கையை உண்டாக்கி வைத்து விட்டார்கள் என்பதற்காக பெரியார் இங்கு தனி தமிழ்நாடு கேட்கவில்லை. ரஷ்யாவில் தைத்து விட்ட செருப்பை எடுத்துக் கொண்டு இங்குள்ள காலை வெட்டியவர் அல்ல பெரியார். இங்குள்ள காலை அளந்து பார்த்து செருப்பு தைத்தார் - அதுதான் தனி தமிழ்நாடு போராட்டம். பிரிந்து செல்லும் உரிமையோடு இணைந்து வாழ விரும்புகிற சிந்தனை அவருக்கு இருக்கவே இல்லை. நாம் இணைந்து வாழ முடியாது, பிரிந்தே சென்றாக வேண்டும் என்பதை அழுத்தமாக சொன்னவர். "அருகோ" எனும் தோழர் அரு.கோபாலன் சொல்லிக் கொண்டிருக்கிறார் "திராவிடர் கழகம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்ட சேலம் மாநாட்டு நாள் அன்று காலை வரை, தமிழர் கழகம் என்று பெயர் வைப்பதாக இருந்ததாம். நீங்கள் கன்னடராயிற்றே, தமிழர் கழகம் என பெயர் வைப்பதா என்று, சத்யமூர்த்தி அய்யர் பெரியாரிடம் தொலைபேசியில் கேட்டாராம். உடனே திராவிடர் கழகம் என பெரியார் மாற்றிக் கொண்டாராம்". சத்யமூர்த்தி அய்யர் இறந்து மூன்று ஆண்டுகளுக்கு பிறகு தான், அந்த மாநாடே நடைபெற்றது. இறந்து போனவர் எப்படி தொலைபேசியில் பேச முடியும் என நமது பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் எழுதினார். பிறகு இராஜாஜி பேசியதாக மாற்றி பேசிக் கொண்டிருக்கிறார்கள். எப்படியும் நுணுக்கமான கேள்விகளைப் பார்ப்பனர்கள்தான் கேட்க முடியும் என்பதில் அவர்கள் உறுதியாக இருக்கிறார்கள் போலும். 1939 முதல் தமிழர், திராவிடர் என்பதை பற்றி பேசி விவாதிக்கப்பட்டு, பெரியார் தெளிவான விளக்கத்தையும் சொல்லியிருக்கிறார். தமிழர் கழகம் என்பது மொழி போராட்டத்திற்கு தான் பயன்படும். சமூக விடுதலை போராட்டத்தின் ஒரு பகுதி தான் மொழி போராட்டமே யொழிய, அதுவே முழு போராட்டமாகி விடாது. இந்தி எதிர்ப்பு என்பது மொழி போராட்டம் அல்ல, தமிழரின் கலை, இலக்கியம், பண்பாடு, சமயயியல் இவற்றில் ஆரியத்தை, மனுதர்மத்தை புகுத்த நினைக்கும் சூழ்ச்சிக்கு எதிரானது என்றே பெரியார் சொன்னார்.

பெரியார் மறைந்த அடுத்த மாதமே, 1974 ஜனவரியில் திராவிடர் கழகத்தால் ஒரு பிரச்சார பயணம் தொடங்கப்பட்டது. அப்பொழுது மணியம்மையார் தலைவராக இருந்த காலம். "பெரியார் அவர்கள் விட்டுச் சென்ற பணிகளை, அவர் போட்டு தந்த பாதையில், எவ்வித சபலங்களுக்கும் ஆளாகாமல், செய்து முடிப்போம்" என்று சூளுரையை பொதுக் கூட்டத்தில் நாங்களெல்லாம் உறுதிமொழியாக எடுத்தோம். உறுதிமொழியை எங்களுக்கு சொன்ன மணியம்மையார் மறைந்தார். அவருக்கு பின்னால் சொல்லிக் கொண்டிருந்தவர் சூளுரையை மறந்து விட்டார். இப்பொழுது நாங்கள் சொல்ல வேண்டிய தேவை இருக்கிறது. பெரியார் என்ன சொல்லியிருக்கிறார் என்பதை முதலில் மக்களுக்கு தெரியப்படுத்தினால் தான், அதை பின்பற்றச் சொல்ல முடியும். பெரியாரின் நூல்களை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்த வீரமணி அவர்கள், நாங்கள் வெளியிட்ட பெரியாரின் நூல்களுக்கு, 'குடிஅரசு' தொகுப்பு வெளியீட்டுக்கு நீதிமன்றத்தில் தடை வாங்கினார். பெரியார் நீண்டகாலமாக திராவிடர் என்ற சொல்லை எவ்வளவு அழுத்தமாக பதிவு செய்திருக்கிறாரென்பது அந்த குடிஅரசு பக்கங்களை புரட்டும்போது தெரிகிறது. திராவிடர் என்ற சொல்லை இன விடுதலைக்கு, சமூக விடுதலைக்கு அவர் பயன்படுத்தினார். நம்மை அடிமையாக்கிய ஆரியத்திற்கு எதிரான சொல்லாக திராவிடத்தை பார்த்தார். அரசியல் விடுதலைக்கு தமிழ்நாடு தமிழருக்கே என்று பேசினார். சமூக விடுதலை என்று வருகிறபோது திராவிடர் என்ற சொல்லைப் பயன்படுத்தினார்.

1944 இல் தென்னிந்திய நல உரிமை சங்கம், திராவிடர் கழகம் என மாற்றப்படுவதற்கு முன்பே, சுயமரியாதை இயக்க

(2 ஆம் பக்கம்)

# எல்லைப் போராட்டத்தில் பெரியார் நிலைப்பாடு என்ன?

(முதல் பக்கத் தொடர்ச்சி)

தலைமையோடு, நீதிகட்சி தலைமையையும் பெரியார் ஏற்றுக் கொண்டிருந்த காலத்திலேயே, பல்வேறு பகுதிகளில் திராவிடர் கழகம் என்ற அமைப்பு தோற்றுவிக்கப்பட்டு விட்டன. **1942** ஆம் ஆண்டிலேயே திருச்சியில் உள்ள பொன்மலையில் திராவிடர் கழக ஆண்டு விழா கூட்டத்தில் பெரியார் கலந்து கொண்டு பேசுகிறார். **1943** ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கோவையில் திராவிடர் கழகம் என்ற அமைப்பை துவங்கி வைக்கிறார். **1944** ஆம் ஆண்டு ஜனவரி மாதம், சேலத்தில் உள்ள செவ்வாய்பேட்டையில் திராவிடர் கழகத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழா கூட்டத்தில் பேசுகிறார். திராவிடர் கழகம் என்ற பெயரில் தமிழ்நாடு முழுவதும் இயங்குகிறது என்றாலும், அதிகார பூர்வமாக பெயர் மாற்ற எப்பொழுது முடிவு செய்தார்கள் என்றால், சேலம் செவ்வாய்பேட்டை பகுதியிலுள்ள தேவாங்கர் பள்ளிக்கூடத்தில் நீதிக்கட்சியின் தலைமை நிர்வாகக் குழுக் கூட்டம் பெரியார் தலைமையில் நடை பெற்றிருக்கிறது. **1943** ஆம் ஆண்டு நவம்பர் மாத குடிஅரசில் **(26.11.1943)** அக்கூட்டத்தின் தீர்மானங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. தென்னிந்திய நல உரிமை சங்கம் என்பதை, தமிழில் திராவிடர் கழகம் என்றும், ஆங்கிலத்தில் சௌத் இந்தியன் திரவிடியன் பெடரேசன் (South Indian Dravidian Federation) என்று பெயர் மாற்றப்பட வேண்டும் என்றும், கடந்த திருவாரூர் மாநாட்டில் திட்டமிட்டபடி அடுத்த ஆண்டு சேலத்தில் நடைபெறவுள்ள மாநாட்டில் இதை அறிவிப்பது என்றும் முடிவு செய்யப்படுகிறது. ஆனால் இன்று தமிழ் தேசியவாதிகள், காலையில் முடிவு செய்து, மாலையில் பெரியார் மாற்றிக் கொண்டதாக, பொய்ப் பிரசச்ாரத்தை செய்து கொண்டிருக்கிறார்கள். காரணம் பெரியார் ஒரு பழுத்த மரம் என்பதுதான்.

பெரியார், திராவிட நாடு என்று சென்னை மாகாணத்தைதான் சொன்னார். நான்கு நாடுகளின் கூட்டு அரசே, திராவிட நாடு என்று அண்ணா தான் சொன்னார். அண்ணாகூட பிரிந்து செல்லும் உரிமையோடு கூடிய தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய நாடுகளின் கூட்டு அரசாகத் தான் திராவிட நாட்டை கூறினார். மொழி வழி பிரிந்தும், இன வழி கூடியும் உள்ள நாடாகத்தான் திராவிட நாட்டை கூறினார். முப்பது மாநிலங்கள் கொண்ட இந்தியாவில் இருந்து பிரிந்து செல்லும் உரிமையோடு நான்கு நாடுகள் கொண்ட அண்ணாவின் திராவிட நாட்டை ஏன் விமர்சிக்கிறார்களோ, நமக்கு புரியவில்லை.

அப்படித்தான் எல்லைப் போராட்டத்தில் பெரியார் அக்கறை காட்டவில்லை என்றும், இப்பொழுது ஒரு பிரச்சாரம் செய்து வருகிறார்கள். **1953** இல் ஆந்திரா பிரிந்தபோதுதான் இந்த சிக்கல் வந்தது. அப்போது நடந்த இரு நிகழ்ச்சிகளில் ஒன்று, திருத்தணியில் நடந்த ஒரு எல்லைப் போராட்டம், மற்றொன்று சென்னை நகரை ஆந்திராவுக்குக் கேட்டார்கள் என்பது. இதில் பெரியார் என்ன நிலைப்பாடு எடுத்தார் என்றால், **1956** ஆம் ஆண்டு, வேலூரில் ஒரு கூட்டத்தில் பெரியார் பேசுகிறார், எல்லைப் போராட்டத்தில் நீங்கள் கலந்து கொள்ளவில்லையே என்ற கேள்வி வருகிறது. அதற்கு அவர் விளக்கம் அளிக்கிறார். ‘‘முதல் கூட்டத்தில் ம.பொ.சி. உட்பட நாங்கள் எல்லோரும் கலந்து கொண்டோம். எல்லைப்போராட்டத்தைப் பற்றி பேசினோம். அப்போது நான் ஐந்து திட்டங்களை முன் வைத்தேன். எல்லைப் போராட்டத்தில் கலந்து கொள்ள தயார். இந்தப் போராட்டத்தோடு இந்தி எதிர்ப்பையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். படை, போக்குவரத்து, வெளியுறவு துறை தவிர அனைத்து அதிகாரங்களும் மாநிலத்திற்குதான் இருக்க வேண்டும். சென்னை ராஜ்யம் என்பதை தமிழ்நாடு என பெயர் மாற்றப்பட வேண்டும். காங்கிரஸ் கட்சி தட்சிண பிரதேசம் என்ற அமைப்பை உருவாக்க நினைக்கிறது அதை எதிர்க்க வேண்டும்’’ - என்று. இந்த ஐந்து கோரிக்கைகளில், தமிழ் தேசியத்திற்கு எதிராக எதுவும் இல்லை. ஆனால், தமிழ் தேசத்தின் தந்தையாக கருதப்படுகிற ம.பொ.சி. சொன்னார் - அவர், ‘‘நான் இந்தியன் என்பதால் இந்தி மொழியை ஏற்றுக் கொள்கிறேன். நான் இந்து என்பதால் என் சமய சடங்குகளில், சமஸ்கிருதத்தை ஏற்றுக் கொள்கிறேன்’’ என்றவர். இதை இரண்டையும் எதிர்த்த பெரியார் வைத்த அந்த கோரிக்கைகளுக்கு, ‘‘கம்யூனிஸ்டுகள் ஏற்றுக் கொள்ளவில்லை, எனவே வேண்டாம்’’ என ம.பொ.சி. சொன்னார். ம.பொ.சி. உயிரோடு இருந்த காலத்தில் பெரியார் இதை பதிவு செய்துள்ளார். தாராளமாக நீங்கள் போராடுங்கள், நாங்கள் உங்களோடு இணைந்து நிற்க முடியாது என்று பெரியார் தெரிவித்து விட்டார்.

அதன் பின்னால் சென்னையைப் பற்றி விவாதம் வந்தபோது தான், நான் விஸ்தீரணத்திற்கு போராடுபவன் அல்ல. விடுதலைக்கு போராடுபவன் என்று அழுத்தமாக பெரியார் சொன்னார். இருந்தாலும் இதில் ஏன் சம்பந்தப் பட்டிருக்கிறேன் என்றால், மொழிவாரி என்று பேசுகிறவர்கள், மொழிவாரியாக பிரிந்துவிட்டு, மொழி அல்லாத நாட்டிலும் ஆதிக்கம் செலுத்த பார்க்கிறார்களே என்ற கருத்துதானே அல்லாமல், மற்றபடி சென்னை நகரம் தமிழர்களுக்கோ, தமிழ்நாட்டிற்கோ பெரிய தொண்டு செய்திருக்கிறது. செய்து வருகிறது. அல்லது செய்ய முன்வரும் என்பதற்காக அல்ல என்று பேசியிருக்கிறார். இந்த இரண்டையும் சொன்ன பெரியாரின் கருத்துகளை, எங்கள் பழைய தலைவர் (வீரமணி) மக்களிடம் கொண்டு சேர்த்திருந்தால், இந்த தமிழ் தேசியவாதிகள் சொல்லும் புரட்டுகளை மக்கள் புரிந்திருப்பார்கள். பெரியாரின் கொள்கைகள் திடலுக்குள்ளேயே முடங்கி கிடக்கிறது. வெளியே கொண்டு வருபவர்களையும், தடுக்க பார்க்கிறார்கள். குடிஅரசு வழக்கில் பார்த்திருப்பீர்கள். உச்சநீதிமன்றத்தில் தொடுத்த மேல் முறையீட்டு மனுவை விசாரணைக்கே தகுதி அற்றது என்று தள்ளுபடி செய்த செய்தி, வீரமணி அவர்களுக்கு பிறந்த நாள் பரிசாக கிடைத்தது. கோரிக்கைளை மாற்றிக் கொள்கிறோம் என்ற மனுவை, இப்பொழுது உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்து பெரியார் நினைவு நாள் பரிசாக அவருக்கு கொடுத்திருக்கிறது.

பெரியார் கொள்கைகளை எடுத்துச் சொல்லுகிற, நடைமுறைபடுத்துகிற, பெரியாரின் வழியில் தொடர்ந்து போராடுகிற இயக்கமாக, பெரியார் திராவிடர் கழகம் இருக்கிறது. எங்களுக்குள்ள இயக்கமாக, பெரியார் திராவிடர் கழகம் இருக்கிறது. எங்களுக்குள்ள சக்தி குறைவாக இருந்தாலும், அதை முழுமையாக பயன்படுத்தி, செயல்படுத்த வேண்டும் என்று கருதுகிறோம். அதன் வெளிப்பாடாகத்தான், பல போராட்டங்களை நடத்துகிறோம். அண்மையில் ஆயுத பூஜை அன்று கூட ஒரு போராட்டம் நடந்தது. அரசியல் சட்டம் எழுதப்பட்ட போதே, இது மதசார்பற்ற நாடு என்று எழுதி விட்டார்கள். அரசு அலுவலகங்களை கோவிலாக்காதே, கடவுள் படங்கள் இருந்தால் அகற்றுங்கள் என அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது ஆணை பிறப்பித்தார். அதன் பின்னர், அடிக்கடி கலவரம் ஏற்பட காரணம் என்ன என்பதை கண்டறிய, **1994** ஆம் ஆண்டு பா.ஜ.க. ஆட்சி காலத்தில், உள்துறை மூலமாக ஒரு குழு அமைக்கப்பட்டது. அரசு அலுவலகங்களில் மதம் கலப்பதுதான் இதற்கு காரணம் என அந்த குழு அறிவுறுத்தியது. அரசு அலுவலகங்களில் கடவுள் படங்களை நீக்கவும் மத வழிபாடுகள் கூடாது என்றும், மத சுலோகங்கள் எழுதப்படக் கூடாது என்றும், மத வழிபாட்டிடங்களை கட்டக் கூடாது என்றும் இந்தியா முழுவதும் எல்லா மாநிலங்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்படுகிறது. தமிழ்நாட்டில் ஜெயலலிதா ஆட்சி நடக்கிறது. தலைமை செயலாளர் இப்போது இருப்பதை போலவே அப்போதும் ஒரு பார்ப்பனர்தான் (ஹரி பாஸ்கர்). அவர் அனைத்து அலுவலகங்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பியுள்ளார். மீண்டும் **2004** ஆம் ஆண்டு எ.டி.ஜி.பி.யாக இருந்த லத்திகாசரண் (இப்போது டி.ஜி.பி.), காவல் துறையின் அனைத்து பிரிவுகளுக்கும் அனுப்பிய சுற்றறிக்கையில் குறிப்பாக காவலர் குடியிருப்புகளில்கூட மதவழிபாடு நடத்தக் கூடாது என்று உள்ளது. இவ்வளவு இருந்தும் தொடர்ந்து காவல் நிலையங்களில் ஆயுதபூஜை நடைபெற்று வந்தது. இவ்வாறு இந்த ஆண்டும் நடக்குமேயானால், அதை தடுக்கும் நேரடி நடவடிக்கையில் இறங்குவோம் என, பெ.தி.க. தலைமை செயற்குழுவில் நிறைவேற்றிய தீர்மானத்தின்படி, பல இடங்களில் எங்கள் தோழர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். சென்னையிலும், மேட்டூரிலும் தடுத்து, வழக்குகளை சந்தித்தார்கள். பெரியார் வன்முறையை விரும்ப மாட்டார் என்று அப்போது பலர் சொன்னார்கள்.

ஆனால், பாரதிதாசன் பாடல்களை பாட நூல்களில் சேர்க்கப்பட வேண்டும் என்ற செய்திகளைக் குறிப்பிட்டு விட்டு, ‘‘எனக்கு பின்னால் இதை சொல்லவும் ஆள் இல்லை, தி.மு.க.வை தவிர இதை செய்யவும் கட்சியில்லை. அரசு அலுவலகங்களில் கடவுள் படங்களை அகற்றாவிட்டால், நானும் எனது தோழர்களும் உள்ளே நுழைந்து அகற்றுவோம்’’ என, **1968** ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் பெரியார் விடுதலை நாளேட்டில் ஒரு அறிக்கை விடுகிறார். அதை இன்று நாங்கள் செய்திருக்கிறோம். பெரியார் அவர்கள் விட்டுச் சென்ற பணிகளை, அவர் போட்டு தந்த பாதையில், எவ்வித சபலங்களுக்கும் ஆளாகாமல், செய்து முடித்திருக்கிறோம். இது தானே நாம் பெரியார் மறைந்தவுடன் எடுத்த உறுதிமொழி.

நாம் யாரை ஆதரிப்பது, எதிர்ப்பது என்பதில் பெரியாரின் நிலைபாடு என்ன என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். எப்பொழுதும் பெரியார் ஆளுங்கட்சியை ஆதரிப்பவர் என்று பார்ப்பனர்கள் சொல்லி கொண்டிருந்தார்கள். காங்கிரஸ் கட்சியை எதிர்த்த வண்ணம் இருந்த பெரியார், **1954** இல் காமராசர் வந்தவுடன் ஆதரித்தார். அடுத்து தி.மு.க.வை ஆதரித்தார் அவ்வளவுதான்.

காமராசர் ஆட்சியின்போதுகூட காங்கிரசை ஆதரிக்கிறேன் என்பது தவறு. காமராசரைத் தான் ஆதரிக்கிறேன் என்று பலமுறை தெளிவாக கூறியிருக்கிறார். காமராசருக்கு பின், ஆட்சிக்கு வந்த பக்தவத்சலத்தை எதிர்த்து, **1965**இல் பக்தவச்சலம் ஆட்சி கண்டன கூட்டம் நடத்தியவர் பெரியார். எப்பொழுதும் ஆளுங்கட்சியை ஆதரிப்பவர் என்று சொல்லப்பட்டபோது, ‘‘எனது கொள்கை ஆதரவு மாற்றத்திற்கான காரணம்’’ என்ற தலைப்பில் **19.9.1968** இல் ஒரு அறிக்கை எழுதினார். எனது ஆசையெல்லாம் மக்கள் பகுத்தறிவுவாதிகளாக (நாத்திகர்களாக) ஆக வேண்டும். சாதி ஒழிய வேண்டும். உலகில் பார்ப்பனர்கள் இருக்கக் கூடாது. பல கட்சிகளை ஆதரித்ததும் இதற்காகத்தான். இனி எந்த கட்சியை ஆதரிப்பேனோ, எதிர்ப்பேனோ, எனக்கே தெரியாது’’ என்று எழுதி விட்டு, கீழே குறிப்பு என்று ஒன்று எழுதுகிறார். அதில், ‘‘இந்த மூன்றுக்கும் தி.மு.க. எதிரியானால், என் நிலை இப்படியே இருக்கும் என்று சொல்ல முடியாது’’ என்று எழுதியுள்ளார். அண்ணா ஆட்சியில் இருக்கும்போதே இதை எழுதியுள்ளார். கல்வித் துறை உட்பட எந்த துறையில் பார்ப்பனர்கள் இருந்தாலும், பெரியார் உடனடியாக ‘‘விடுதலை’’ நாளேட்டில் பட்டியல் போட்டுவிடுவார். ஆட்சியாளர்கள் மாற்றிக் கொள்வார்கள். எனவே தவறு நடந்தால் பட்டியல் போட்டு சுட்டிக்காட்ட ஒருவர் வேண்டும்.

> இடிப்பாரை இல்லா ஏமரா மன்னன்
> கெடுப்பார் இலானும் கெடும்....
> என்கிறார் திருவள்ளுவர்.

ஒரு ஆட்சிக்கு ஜால்ரா அடிப்பதல்ல பெரியார் தொண்டனின் வேலை. **2001** முதல், இந்த நாட்டில் தொடர்ந்து யார் தலைமை செயலாளராக இருக்கிறார்கள் ? பாப்பாத்தி ஆட்சியைகூட விட்டுவிடுங்கள். ‘திராவிடர்கள்’ ஆட்சி வந்த பின்னால், திரிபாதி, ஸ்ரீபதி, மாலதி உட்பட எல்லோரும் பார்ப்பனர்கள். இந்த நாட்டின் தலைமை செயலாளராக தொடர்ந்து பார்ப்பனர்களே இருந்தால் நமக்கு என்ன நடக்கும் ? இதை சுட்டிகாட்ட வேண்டாமா ? சுட்டிக்காட்டாமல் இருப்பது தவறு என்றுதான், எங்கள் பங்காளி இயக்கத்திற்கு சொல்கிறோம். கல்லூரி முதல்வராக இருந்தபோது ஆய்வுக்கு வந்த அதிகாரிகளை சரிசெய்ய மாணவிகளை அனுப்பி வைத்ததாக இரண்டு முறை குற்றம்சாட்டப்பட்ட மீனா என்ற ஒரு பார்ப்பன அம்மையார், திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்திற்கு இப்போது துணைவேந்தராக வந்துள்ளார். உடனே இவ்வளவு காலம் இயங்கி வந்த ‘பெரியார் உயராய்வு மய்யம், பாரதிதாசன் உயராய்வு மய்யம்’ உடனடியாக மூடப்பட்டுவிட்டது. நாம் யாருமே போராடத் தான் இல்லை.

பெரியாரின் முதல் கொள்கையாக இருந்தது சாதி ஒழிப்பு. காங்கிரஸ்காரராக இருந்தபோதே, கோவிலை சுற்றியுள்ள வீதிகளில் நடக்க அனுமதி மறுக்கப்பட்டபோது, அது மலையாள நாடாக இருந்தபோதும், அங்கு சென்று போராடினார். அப்போது, தென்னாட்டில் நடந்த இரண்டு சம்பவங்கள் என் மனதை உலுக்கியது என்றும், அதில் ஒன்று வைக்கத்தில் இராமசாமி நாய்க்கர் நடத்திய போராட்டம் என்றும் புரட்சியாளர் அம்பேத்கர் தனது ஏட்டில் தலையங்கம் எழுதினார்.

**1922** ஆம் ஆண்டு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் பொதுச் செயலாளராக இருந்தபோது, தாழ்த்தப்பட்டவர்களையும், நாடார்களையும் கோவிலுக்குள் அனுமதிக்க வேண்டும் என்று, திருப்பூர் மாநாட்டில் தீர்மானம் கொண்டு வந்தார். பின்னாளில் கோவில் நுழைவு போராட்டம் நடத்தியதாக சொல்லப்பட்ட வைத்தியநாத அய்யர் இராமாயணத்தையும் மனுதர்மத்தையும் எடுத்துக் காட்டி, அப்போது கோயில் நுழைவை எதிர்த்துப் பேசினார். இராமாயணமும் மனுதர்மமும் என் மக்களை கோவிலில் நுழைய தடுக்குமேயானால், அதை எரிக்க வேண்டும் எனப் பேசினார் பெரியார். சுயமரியாதை இயக்கம் தொடங்கியவுடன், சாதி ஒழிப்பு வேலைகளைத் தான் செய்தது. **1926** முதல் பெண்ணுரிமையைப் பற்றிப் பேசினார். **1928** இல் இருந்து பொதுவுடமையைப் பற்றிப் பேசினார். **1938** இல் தனி தமிழ்நாட்டைப் பற்றி பேச தொடங்கினார். பெரியார் தொண்டர்கள் என்பவர்கள் இந்த நான்கு கொள்கைகளை முன்னெடுத்து செல்வோர் தான்.

அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும் உரிமை வேண்டும் என்ற பிரச்சினையைப் பற்றி உங்களுக்கு தெரியும். **1971** இல் கலைஞர் சட்டம் போட்டார். **234** சட்ட மன்ற உறுப்பினர்களும் ஒரு மனதாக ஏற்றுக் கொண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானம் அது. ஒட்டு மொத்த தமிழகமும் ஏற்றுக் கொண்டதை, பதினொரு பார்ப்பனர்கள், பதிமூன்று வழக்குகளை உச்சநீதிமன்றத்தில் தொடுத்தார்கள். அப்போது தமிழ்நாடு அரசின் சட்டம் செல்லும், அதே நேரத்தில் பார்ப்பனர் அல்லாதாரை நியமித்தால் என்னிடம் வா என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு சொன்னது. ‘ஆபரேசன் வெற்றி, நோயாளி மரணம்’ என பெரியார் சொன்னார். பி.வி.கானே என்ற ஒருவன் ஒரே ஒரு புத்தகம் எழுதினான் (சட்டபுத்தகம் அல்ல). இந்து சட்டங்கள் பற்றிய தொகுப்பு எழுதினான். அதை வைத்து தீர்ப்பு சொன்னார்கள். பெரியார் நூற்றாண்டு விழாவில் எம்.ஜி.ஆர். ஒரு குழு அமைத்தார். ஆய்வு செய்தார்கள். கலைஞர் ஆட்சிக்கு வந்து அர்ச்சகர் பயிற்சி கொடுத்தார். எல்லாம் முடிந்தது. மீண்டும் பார்ப்பனர்கள் தடை ஆணை வாங்கி

(4 ஆம் பக்கம்)

# இந்த “ஆபாசங்களை”யும் எதிர்த்து வழக்கு போடுவீர்களா?

**சிற்பி இராசன்**



சமீபத்தில் இந்து மதவாதிகள் சென்னை உயர்நீதி மன்றத்தில் ஒரு வழக்கு தொடர்ந்தனர். கமலகாசன் நடித்து வெளிவந்துள்ள ‘மன்மதன் அம்பு’ திரைப் படத்தில் பெண்கள் நோன்பு இருப்பதில் உள்ள மூடத்தனங்களை அம்பலப்படுத்தும் பாடல் ஒன்று அத்திரைப்படத்தில் இருக்கிறதாம் - அதை அகற்றக் கோரி வழக்கு. இப்போது கமலகாசனும் பாடலை எதிர்ப்புக்குப் பணிந்து நீக்கி விட்டார்.

மதவாதிகள் என்றாலே மக்களுக்கு தெளிவு வந்துவிடக் கூடாது என்ற விஷயத்தில் மிகவும் தெளிவாக இருப்பார்கள். அதிலும் இந்து மதத்திலுள்ள பார்ப்பன உயர்சாதிக்காரர் களும், மார்வாடிகளும், வியாபாரிகளும் அன்றாடம் உழைத்துச் சாப்பிடும் மக்களுக்கு உண்மை தெரிந்து விடக் கூடாது என்பதில் கவனமாக இருப்பார்கள் என்பதற்கு இந்த வழக்கும் கூட ஒரு உதாரணம்.

நோன்பு என்பது பக்தர்கள் கடவுளிடம் ஏதேனும் கோரிக்கை நிறைவேற்றக் கோரி தங்கள் வசதிக்கேற்ப உணவு முறையை மாற்றி உண்பதுதான். இதைக் கொச்சைப் படுத்தும் பாடலை அகற்றக் கோரும் பக்தர்கள், கடவுளையே கேவலப்படுத்தும் பாடல்கள் இன்றும் - வானொலி, தொலைக் காட்சி மற்றும் கோவில்களில் தினமும் வெளியாவதை ஏன் தடுக்கவில்லை? அந்தப் பாடல்களை எழுதியவர், இசை யமைத்தவர், பாடியவர், ஒளிபரப்பு கிறவர்கள் மீது ஏன் வழக்கு தொடர வில்லை?

கடவுள்களின் வேடமணிந்து தெருக் களில் பிச்சை யெடுத்து வரும் நபர்களைப் பற்றி ஏன் கவலைப்படவில்லை. கடவுள் வேடமணிந்து பிச்சையெடுப்பது பக்தர் களின் மனதை புண்படுத்தவில்லையா?

ஆண்டுதோறும் தந்தை பெரியார் இட்ட ஆணையை செயல்படுத்துவதுபோல் பிள்ளையாரை கடலிலும், குளத்தி லும் போட்டு உடைப்பது பக்தர்கள் செய்யக் கூடிய காரியமா?

இதோ சில பக்திப் பாடல்கள்....

*“தாயே யசோதா உந்தன் ஆயர்குலத் துதித்த*
*மாயன் கோபால கிருஷ்ணன் செய்யும்*
*ஜாலத்தைக் கேளடி - தாயே*
*பாலனென்று தாவி யணைத்தேன்....*
*மாலையிட்டவன் போல் வாயில் முத்தமிட்டான்*
*பாலனல்லடி உன்மகன் - ஜாலமாக செய்ததெல்லாம்*
*நாலு பேர்கள் கேட்கச் சொன்னால்*
*நாண மிக மாட்டுதடி - தாயே யசோதா?*

(இது ராமனாக அவதாரம் எடுத்த கிருஷ்ணனின் யோக்யதை!)

அடுத்து முருகனுக்கே கட்டளை யிடும் முட்டாள் தனமான கந்த சஷ்டி கவசம்...

*“பேசிய வாய் தனை பெருவேல் காக்க*
*செப்பிய நாவை செவ்வேல் காக்க*
*பிட்டம் (குண்டி) இரண்டும் பின்வேல் காக்க*
*வட்டக் குதத்தை வல்வேல் காக்க...”*

நல்லவேளை கீழே விழும் மலத்தை கீழ்வேல் காக்க என்று எழுத மறந்துவிட்டான் போலும்.

*“சேர் இள முலைமார் செவ்வேல் காக்க*
*ஆண் பெண் குறிகளை அயில்வேல் காக்க”*

முருகனிடம் என்னுடையதையும், என் மனைவியுடை யதையும் காத்துக் கொண்டிரு என்று வேண்டுகிறான்.

உண்மை நிலவரம் என்னவெனில், “கந்தன் வேல் தனை காவல்துறை காக்க” என்று காவல்துறை யினர் வேல் திருட்டுப் போகாமல் பார்த்துக் கொள்கின்றனர்.

உண்மையிலேயே முருகன் என்று ஒரு கடவுள் இருந்தால் பாடலை எழுதியவன், படிக்கிறவன்களை விட்டு வைப்பானா?

திருப்பாவை என்ற நூலில் ஆண்டாள் என்ற ஒரு பெண் எழுதியதாகச் சொல்லப்படும் பாடல்கள்:

*“கற்று கறவைகள் பல கறந்து*
*குற்றமென்றும் இல்லாத*
*கோவலர் தன் பொற்கொடியே!*
*புற்றவு அல்குல் புனமயிலே”*

காலையில் குளிக்கப் போகும்போது பெண்களை எழுப்பும் பாடல்... புற்றில் உள்ள பாம்பின் படம் எவ்வளவு பெரிதாக இருக்குமோ அந்த அளவு பெண்குறியை உடையவளே எழுந்து வா என்று பாடுகிறாள். ஒரு பெண்ணை வர்ணிப்பதற்கு வேறு உறுப்பு எதுவும் கிடைக்கவில்லையா? அதே திருப்பாவையில்

*குத்துவிளக்கெரிய கோட்டுக்கால் கட்டிலின்மேல்*
*மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறி*
*கொத்தலர் பூங்குழல் நப்பினை கொங்கைமேல்*
*வைத்துக் கிடந்த மலர்மார்பா வாய்திறவாய்”*

தன்னை வணங்க வந்த பக்தையின் கொங்கையின் மேல் வைத்துக் கிடந்தானாம்? எதை வைத்துக் கிடந்தான் என்று தெரியவில்லை. வாயைத் திறக்கணுமாம்! இதெல்லாம் பக்திப் பாட்டு....

*“ஆயர் பாடி மாளிகையில் தாய்மடியில்*
*கற்றினைப்போல் - மாயக்கண்ணன்*
*தூங்குகிறான் தாலேலோ -*
*பின்னலிட்டகோபியரின் கன்னத்திலே கன்னம்வைத்து*
*மன்மதன் போல் லீலை செய்தான் தாலேலோ”*

இது இன்றும் வானொலியில் போடப்படும் பக்திப் பாடல்.

*“தீராத விளையாட்டுப் பிள்ளை - கண்ணனால்*
*தெருவிலே*
*பெண்களுக்கு ஓயாத தொல்லை” - பாரதியார்*

வெண்ணையை திருடுவான், பெண்களை கேலி செய்வான், புடவையில் சேறை வாரி இறைப்பான், பின்னலை பின்னின்று இழுப்பான் இப்படி ஈவ்டீசிங் செய்யும் வேலைகளைத் தெளிவாக விளக்கும் பாடல்.

இதுபோல இன்னும் ஆயிரக்கணக்கான மோசமான கதைகளும், புராணங்களும், பாடல்களும் இந்த இந்து மதவாதிகளுக்கு ஏன் தென்படவில்லை?

சிறுதொண்டநாயனைப் போல தன் பிள்ளையை வெட்டி கறி சோறுபோடும் பக்தன் இல்லாமல் போனது எதனால்? இறைவனுக்கு தன் மனைவியை கூட்டிக் கொடுத்த இயற் பகை நாயனைப்போல் இன்று எவனாவது செய்வானா? சட்டமும் சமுதாயமும் அவனை ஏற்றுக் கொள்ளுமா?

கர்நாடகாவில் மதுபான விடுதிக்குச் சென்ற பெண்களை கலாச்சார சீரழிவு என்று அடித்த இந்துத்துவா வாதிகள், கோபுரங்களிலும், தேரிலும் உள்ள சிலைகளை கவனிக்கவில்லையா? இது இவர்களுடைய கலாச்சாரத் திற்கு இழிவாகத் தெரியவில்லையா?

உலகம் உருண்டை என்று சொன்ன கலிலியோவை சித்ரவதை செய்து கொன்ற மதவாதிகள்கூட இன்று உலகம் உருண்டையென்று “புதிய ஏற்பாடு” பைபிளில் திருத்தி யிருக்கிறார்கள். அதுபோல இந்துமதவாதிகளே நீங்களும் கோபுரங்களிலும், புராணங்களிலும், பாடல்களிலும் உள்ள உங்களின் சக்தியுள்ள கடவுளின் மேல் சொல்லப்பட் டிருக்கிற அயோக்கியத்தனங்களை எப்போது அகற்றப் போகிறீர்கள்? இது நோன்பு இருப்பதைவிட அதிலுள்ள மூடத்தனங்களைவிட கேவலமாகத் தெரியவில்லையா?

## இஸ்லாம் மதத்தில் நாத்திகவாதிகள்

இஸ்லாம் மதத்தில் நாத்திகவாதிகள் உண்டா? என்று கேட்டால் இருக்காது என்பது தான் பதிலாக இருக்கும். ஆனால், நாத்திகவாதம் அங்கேயும் தலையெடுத்திருக்கிறது என்பதுதான் லேட்டஸ்ட் தகவல். அதுவும் எங்கே? பாகிஸ்தானில்! மிகக் குறைந்த எண்ணிக்கையிலான பாகிஸ்தான் இஸ்லாமிய இளைஞர்கள் கடவுள் மறுப்புக் கொள்கையைத் தொடங்கியிருக்கிறார்கள்.

‘நாங்கள் இஸ்லாமைத் துறந்து நாத்திகர்களாவோம்’ என்று அறிவித்திருக்கிறார்கள். எண்ணிக்கையில் இவர்கள் குறைவாக இருந்தாலும் இஸ்லாமியத் தீவிரவாதிகளின் கட்டளைகளும் கட்டுப்பாடுகளும் அவர்களின் சிந்தனை மாற்றத்துக்குக் காரணம் என்று கருதப்படுகிறது. ஹஸ்ரத் நாகுதா என்னும் முன்னாள் பாகிஸ்தான் முஸ்லிம் இதைத் தொடங்கியிருக்கிறார். ‘ஏன் நாத்திகர் ஆனீர்கள்?’ என்னும் கேள்விக்கு ஹஸ்ரத்தின் பதில்:

“நான் சவுதியில் இருந்தேன். இரண்டு முறை ஹஜ் பயணம் மேற்கொண்டவன் நான். நாளொன்றுக்கு 5 முறை தொழுகை நடத்தியவன் நான். எனக்கு 18 வயதானபோது நான் முஸ்லிமாக இருப்பதற்குக் காரணம் என் பெற்றோர் முஸ்லிம்களாக இருந்ததன்றி வேறு காரணம் இல்லையென்பதை உணர்ந்தேன்.”

ஹஸ்ரத் லாகூரைச் சேர்ந்த கம்ப்யூட்டர்புரோகிராமர். ‘கடவுள் இருக்கிறார் என்பதை நான் உணர எந்த விதமான சான்றுகளும் கிடைக்கவில்லை. சான்று கிடைக்காத ஒன்றை நம்ப என் மனம் இடந்தர வில்லை’ என்கிறார் இன்னொருவர். இந்த வாதங்கள் வேகமாகப் பரவி இஸ்லாமிய சமுதாயத்தில் ஊடுருவி விடுமோ என்னும் அச்சம் கடுங்கோட்பாளர்களிடையே தொடங்கி இருக்கிறது. புதிய சிந்தனை யாளர்கள் மொத்தம் 100 பேர்தான் என்றாலும், அச்சம் அச்சம் தானே! ஆதாரம்: ‘தினமணி கதிர்’ 19.9.2010.

**தகவல்: தங்க சங்கரபாண்டியன்**

## அய்யப்ப பக்தர்களுக்கு சில கேள்விகள்

1. அய்யப்பன் பிறந்த கதை அறிவுக்குப் பொருந்துமா?
2. ஆணும் ஆணும் (அரியும்-அரனும்) சேர்ந்தால் பிள்ளை பிறக்குமா?
3. கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை எனப் பாடும் பக்தர்கள் சொகுசு வண் டியில் சபரிமலைக்கு செல்வது ஏன்?
4. சாமியே சரணம் என்று கூறும் பக்தர்களே! உங்கள் பேருந்துகளும் மற்ற வண்டிகளைப் போல கரணம் அடிப்பது ஏன்?
5. சக்தியுள்ள கடவுள் அய்யப்பன் என்றால் தமிழ்நாட்டுக் கடவுள்களுக் கெல்லாம் சக்தி இல்லாமல் போய் விட்டதா?
6. தமிழ்நாட்டுக் கடவுள்களை புறக் கணித்து விட்டு அய்யப்பனை வழி படும் பக்தர்களே! தமிழ்க் கடவுள் களின் தரிசனம் மீது சலிப்பு ஏற்பட்டு விட்டதா?
7. தமிழ்க் கடவுள் என்று முருகனைக் கொண்டாடும் பக்தர்களே! இந்த சீசனில் மட்டும் அய்யப்பன் புகழ் பாடுவது ஏன்? முருகன் வெளி நாட்டுக்குச் சென்று விட்டாரா?
8. 40 நாட்கள் மட்டும் விரதமிருக்கும் பக்தர்களே! வருடத்தில் மற்ற நாட்களில் எப்படி இருப்பீர்கள்?
9. முல்லைப் பெரியாறு தண்ணீரை தமிழ் நாட்டுக்குத் தரமறுக்கும் மலை யாளிக்கு, இரு முடி என்ற பெயரில் தமிழ்நாட்டுப் பொருள்களை கொண்டு போய் கொடுக்கிறீர்களே, இது நியாயமா?
10. அய்யப்பனை தரிசிக்க கேரளாவுக்கு படையெடுக்கும் பக்தர்களே! தமிழ் நாட்டுக் கடவுள்களை, கோயில்களை என்ன செய்யலாம்?

**- பெரியார் திராவிடர் கழகம் மடத்துக்குளம்**

## உச்சநீதிமன்றமே கூறுகிறது: ‘துரோணாச்சாரி’ கட்டைவிரல் கேட்டது — வெட்கக் கேடானது!

ஏகலைவன் கட்டை விரலை துரோணாச்சாரி குருதட்சணையாகக் கேட்டது வெட்கக்கேடான - அவமான கரமான செயல் என்றும், பழங்குடி மக்களுக்கு இந் நாட்டில் அநீதி இழைக்கப் பட்டிருக்கிறது என்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஜனவரி 5 ஆம் தேதி வழங்கிய தீர்ப்பில் சுட்டிக் காட்டியுள்ளனர். மகாராஷ்டிரா மாநிலத்தில் பழங்குடி வகுப்பைச் சார்ந்த நந்தாபாய் (25) என்ற பெண், உயர்சாதிக்காரர் ஒருவருடன் பால் உறவு தொடர்பு கொண்டிருந்தார் என்பதற்காக அந்தப் பெண்ணை நிர்வாணமாக வீதிகளில் ஊர்வலமாக வரச் செய்த 5 சாதி வெறியர்கள் மீது வழக்கு தொடரப்பட்டது. மேல் முறையீட்டில் மாவட்ட நீதிமன்றத்தின் தண்டனையை (பம்பாய் உயர்நீதிமன்றம் அவர்களை விடுதலை செய்தது) உறுதி செய்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள் மார்க்கண்டே கட்ஜ் மற்றும் பெண் நீதிபதி ஜியான் சுதா மிஸ்ரா, தங்களது விரிவான தீர்ப்பில் மானுடவியல் வரலாறு பற்றி விரிவாக எழுதியுள்ளனர். திராவிடர்களுக்கு முன்பே இங்கே பூர்வீகக் குடிகளாக இருந்தவர்கள், பழங்குடி மக்கள் தான் என்று கூறும் நீதிபதிகள், இந்தியா வில் பெரும்பான்மை மக்கள் குடியேறி யவர்களே என்றும், இந்தியா, பல்வேறு மொழி, கலாச்சாரம், பண்பாடுகளைக் கொண்ட நாடு என்பதை அங்கீகரிக்க வேண்டும் என்றும் கூறியுள்ளனர். இந்தியாவை ஒன்றுபடுத்திக் காப்பாற்ற வேண்டுமானால், அனைத்து சமூக, கலாச்சார இனங்களையும் சமமாக மதித்து சகிப்புத் தன்மை கடைபிடிப்பது மிகவும் அவசியமாகும்.

(It is absolutely essential if we wish to keep our country united to have tolerance and equal respect for all communities and sects) - என்று நீதிபதிகள் குறிப்பிட்டுள் ளனர். ‘சமத்துவம்’ என்பதை ஒப்புக்காக பேசிக் கொண்டிருப்பதால் உண்மையான சமத்துவத்தை வழங்கிட முடியாது. வரலாற்று ரீதியாக அநீதி இழைக்கப்பட்ட மக்களுக்கு சிறப்புப் பாதுகாப்புகளையும் உதவிகளையும் வழங்கியாக வேண்டும். இதற்காகத்தான் நமது அரசியல் சட்டத்தில் 15(4), 15(5), 16(4), 16(4A), 46 போன்ற சிறப்பு பிரிவுகள் (இவை கல்வி, வேலை வாய்ப்பில் இடஒதுக்கீடுகள் மற்றும் சமவாய்ப்பை வலியுறுத்தும் பிரிவுகள்) இடம் பெறச் செய்யப்பட்டுள்ளன என்றும் நீதிபதிகள் கூறியுள்ளனர்.

(However, giving formal equality to all groups or communities in India would not result in genuine equality. The historically disadvantaged groups must be given special protection and help so that they can be uplifted from their poverty and low social status. It is for this reason that special provisions have been made in our Constitution in Articles 15(5), 15(5), 16(4), 16(4A), 46, etc. for the uplift of these groups.)

பழங்குடி மக்களுக்கு அநீதி இழைக்கப் பட்டதற்கு உதாரணமாக மகாபாரதத்தில் ஏகலைவன் கட்டை விரலை துரோணாச் சாரி குருதட்சணையாக கேட்டதை நீதிபதிகள் எடுத்துக் காட்டியுள்ளனர்.

“துரோணாச்சாரியின் இந்த செயல் வெட்கக் கேடானது; அவமானகரமானது; ஏகலைவனுக்கு அவர் வில் வித்தையைக் கற்றுக் கூட தரவில்லை. எனவே, கட்டை விரலை குருதட்சணையாகக் கேட்க அவருக்கு என்ன உரிமை இருக்கிறது? அதுவும் வலது கை கட்டை விரலை!

இதன் மூலம், துரோணாச்சாரிக்கு வேண்டிய அவரது சீடனான அர்ஜுனனை விட, ஏகலைவன் திறமையாக வில் வீசும் திறன் பெற்றுவிடக்கூடாது என்பது தானே!

“This was a shameful act on the part of Dronacharya. He had not even taught Eklavya, so what right had he to demand guru dakshina, and that too of the right thumb of Eklavya so that the latter may not become a better archer than his favourite pupil Arjun?”

- உச்சநீதிமன்றமே பார்ப்பனீயத்தின் அக்கிரமத்தை, அநீதியை தீர்ப்பில் பதிவு செய்துள்ளது.

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# அரசுத் திட்டத்திலேயே ‘தீண்டாமை’யை பின்பற்றுவதா?

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விட்டார்கள். நீதிமன்றம் சொல்லிவிட்டது. நான் என்ன செய்வது என கலைஞர் இப்போது சொல்லிவிட்டார்.

ஆனால், சட்டமன்றத்திலோ, நாடாளுமன்றத்திலோ உறுப்பினராக இல்லாத பெரியார், தேர்தலில் போட்டியிடக் கூடாது என்ற கொள்கையோடு வைத்திருந்த இயக்கத் தோழர்களை கொண்டு பெரியார் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் முதல் திருத்தத்தை கொண்டு வந்தார். எனவே நாம் மக்களை திரட்டி போராடியிருக்க வேண்டும். கேரளாவில் ராகேஷ் என்ற தாழ்த்தப்பட்டவரை அர்ச்சகராக்கியதற்கு, ஆதித்யன் என்ற பார்ப்பான் வழக்கு தொடுத்தான். மாவட்ட நீதிமன்றமும், உயர்நீதிமன்றமும், மனுவை தள்ளுபடி செய்தது. உச்சநீதிமன்றத்தில் பராசரன் வாதாடினார். இந்தியாவில் அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்துவிட்ட பின்னால், சமவாய்ப்புகளை மறுக்கும் சாஸ்திரம் உட்பட எதுவும் செல்லாது என தீர்ப்பு சொல்லப்பட்டது. தீர்ப்பைச் சொன்னவர்கள், தமிழ்நாட்டை சார்ந்த துரைசாமி ராஜூ, கர்நாடகத்தில் பிறந்திருந்தாலும், தமிழ்நாட்டில் படித்து, பகுத்தறிவு பெற்ற ராஜேந்திரபாபு நீதிபதிகளாக இருந்தார்கள். தென்னாட்டைச் சார்ந்தவர்கள் சட்டம் தான் பெரிது என்றார்கள். ஆனால், நமக்கு எதிராக தீர்ப்பு சொன்ன வடநாட்டு பார்ப்பனர்கள், சாஸ்திரம் தான் பெரிது என்கிறார்கள்.

உங்களுக்கு சாஸ்திரம் பெரிது என்றால், எங்களுக்கு தமிழர்களுக்கு, குறைந்தபட்சம் இறை நம்பிக்கையுள்ள தமிழர்களுக்கு, திருமூலம் பெரிது. திருமூலர் சொல்கிறார்,

*“பேர்கொண்ட பார்ப்பான் பிரான்தன்னை அர்ச்சிக்கில்*
*போர்கொண்ட மன்னர்க்கு பொல்லா வியாதியாம்*
*பார்கொண்ட நாட்டுக்கு பஞ்சமுமாம் என்றே*
*சீர்கொண்ட நந்தி தெரிந்துரைத்தானே”*

பார்ப்பான் பூஜை செய்தால், நாட்டில் பஞ்சம், ஆட்சி செய்கிறவர்களுக்கு நோய் வரும் என்கிறார் திருமூலர்.

அதேபோல தொல்காப்பியம், பார்ப்பனர்களுக்கு என்ன வேலை என்பதை சொல்கிறது.

*காமநிலை உரைத்தலும், தேர்நிலை உரைத்தலும்,*
*கிழவோன் குறிப்பினை எடுத்தனர் மொழிதலும்,*
*ஆவொடு பட்ட நிமித்தங் கூறலும்,*
*செலவுறு கிளவியும் செலவழுங்கிளவியும்*
*அன்னவை பிறவும் பார்பார்க்கு உரிய.*

என்ன பொருள் ? ஒருவரின் காம உணர்வை அவன் விரும்பும் பெண்ணிடம் கூறுவது, பிரிந்து சென்ற தலைவன் வந்து கொண்டிருக்கிற தேர் வரும் நிலைகளைச் சொல்வது (அதோ உன் காதலர் வந்து விட்டார், கார் ஹார்ன் சத்தம் கேட்கிறது பார் என்பது போல), மாட்டை வைத்து நல்லது கெட்டது கூறுவது (தலையாட்டி விட்டது, சாணம் போட்டுவிட்டது, சிறுநீர் கழிக்கிறது - இது நல்லது கெட்டது என்று கூறுவது);, செலவுறு கிளவி - இப்போது செல்லலாம் - அப்பா வெளியூர் போயிருக்கிறார். அம்மா கோவிலுக்கு போயிருக்கிறார். அவள் தனியாகத்தான் இருக்கிறாள் என்பது போல - செலவழுங்கிளவி - செல்லக் கூடாது என்ற செய்தி கூறுதல் (அவன் அண்ணன் கல்லூரியில் இருந்து விடுமுறையில் வந்திருக்கிறான். இன்று அந்த பக்கம் போய்விடாதே - உதைத்தான் விழும் என்பது போல...) இவைகள் தானய்யா தொல்காப்பியர் பார்ப்பனருக்குரிய வேலைகள் எனக் கூறுகிறார். பூஜை செய்வதை அல்ல....

அவ்வையார் சொல்கிறார்

*“நூலெனிலோ கோல்சாயும் நுந்தமரேல் வெஞ்சமராம்,*
*கோலெனிலோ பாங்கே குடிசாயும் – நாலாவான்*
*மந்திரியுமாவான், வழிநடைக்குத் துணையும் ஆவான்,*
*அந்த அரசே அரசு”...*

என்று ! பார்ப்பான் ஆட்சி செய்தால் காட்டிக் கொடுத்து நாடு கெட்டுவிடும். சத்ரியன் ஆட்சி செய்தால், சண்டையாகவே இருக்கும். வைசியன் ஆட்சி செய்தால் வரி போட்டே ஒழித்து விடுவான். சூத்திரன் ஆள்வதுதான் நல்ல அரசு.

தமிழ்நாடு தனிநாடாக இருந்தால் இவைகளெல்லாம்தானே சட்டமாக இருந்திருக்கும். அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகும் உரிமைக்கு எந்த தடையும் வந்திருக்காதே !

பெரியார், காரைக்குடி காங்கிரஸ் மாநாட்டிற்கு தலைமை தாங்கி பேசுகிறபோது சொல்கிறார், “பறையன், சக்கலியன் என்பதைவிட சூத்திரன் (வேசிமகன்) என்பவன் தாழ்ந்தவன் என்பதுதான் எனது கொள்கை. குடிப்பதற்கு தண்ணீர் தராமல், அவன் குளிக்கவில்லை என்று சொல்வது உன் தவறா ? அவன் தவறா ? என்று கேட்டார். இப்படி வாழ்கிறபோது இருக்கிற சாதி கொடுமை, இறந்த பின்னால் சுடுகாட்டிலும் இருக்கிறது. இதை ஆதிக்க சாதிகள் மட்டும் அல்ல, அரசும் செய்கிறது. அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் கட்டப்படும் சுடுகாட்டில், தாழ்த்தப்பட்டவர் சுடுகாடு, இதரர் சுடுகாடு என பிரித்து வைத்திருக்கிறார்கள். தீண்டாமை வன்கொடுமை சட்டம் யார் மீது பாய வேண்டும் ? மாவட்ட ஆட்சி தலைவர், திட்ட அலுவலர், வட்டார அதிகாரிகள் மீதல்லவா பாய வேண்டும் ? தீண்டாமையை ஒழிக்கிறேன் என போலித்தனமாக பேசிக் கொண்டிருந்த, காந்தி பிறந்த நாளான அக்டோபர் இரண்டாம் நாள், போராட்டத்தை எடுத்தோம். அப்போது, குறைந்தபட்சம் அரசு திட்டங்களில் கட்டப்படும், இரட்டை சுடுகாடுகளையாவது அகற்றுங்கள் என்று பெரியாரின் சிந்தனைகளை ஆட்சியில் நடைமுறைபடுத்த வேண்டும் என்று சொன்ன அண்ணா அவர்களின் நினைவுநாள் வரை அரசுக்கு ஒரு கால அவகாசத்தை கொடுத்தோம். பெரியார் நினைவு நாளில், பெரியாரின் விரல் பிடித்து அரசியல் நடை பயின்ற, கலைஞரிடம் நாம் வைக்கிற வேண்டுகோள், உங்களை ஆளாக்கி, அமைச்சரவையில் உட்கார வைத்த அண்ணா நினைவு நாளுக்குள் குறைந்தபட்சம் அரசு திட்டத்தில் கட்டப்பட்ட சுடுகாடுகளில், இடுகாடுகளில் இருக்கும், இடைச் சுவரை அகற்ற வேண்டும். இல்லாவிட்டால், சட்டவிரோதமாக இருக்கும் இடைச் சுவரை, சட்டத்தை நடைமுறைபடுத்தும் நோக்கத்தோடு, பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் உள்ளே நுழைந்து சுவரை உடைப்பார்கள் என்பதை அறிவிக்கிறோம். தாழ்த்தப்பட்டோர் சுடுகாடு, இதரர் சுடுகாடு என்று இரட்டை சுடுகாடுகளை அரசே அமைக்கலாமா ? இது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்படி குற்றமல்லவா ? இரட்டைக் குவளை உடைப்புப் போராட்டத்தின்போது அரசு நம்மை கைது செய்தது. இப்போது என்ன செய்யப் போகிறது என்பதை பார்க்கலாம். பெரியார் நினைவு நாளிலும், வழக்கமாக நாங்கள் வைக்கும் கோரிக்கை இதுதான்.

சிந்திக்க முடியாத மூடன் - சிந்தித்து சரியெனப்பட்டதை செயல்படுத்த முன் வராத அறிவாளி, இருவருக்கும் என்ன வேறுபாடு ? எனவே நாங்கள் சொன்னதையெல்லாம் சிந்தித்து உங்களுக்கு சரியெனப்பட்டால் - எல்லாம் சரிதான்... இருந்தாலும்... என்றாலும்... என்று வீட்டை, ஊரை, உறவுகளை காட்டி பின்வாங்காமல் சரியெனப்பட்டதை நடைமுறை படுத்த அனைவரும் முன் வாருங்கள் எனக் கூறி விடைபெறுகிறேன்.

# தூத்துக்குடி மாவட்ட கழக கலந்துரையாடல் கூட்டம்

தூத்துக்குடி மாவட்ட கழக கலந்துரையாடல் கூட்டம் **2.1.2011** அன்று தூத்துக்குடி சோமா விடுதியில் காலை **10** மணிக்கு நடைபெற்றது. கலந்துரையாடல் கூட்டத்திற்கு தூத்துக்குடி மாவட்ட கழகத் துணைத் தலைவர் வே. பால்ராசு தலைமை வகித்தார். ஆழ்வை ஒன்றியத் தலைவர் நாத்திகம் முருகேசன் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் மாவட்டம் முழுமையும் இயக்கத்தை கொண்டு செல்வதற்கான வளர்ச்சிப் பணிகள், பெரியார் முழக்கத்திற்கு சந்தா சேர்ப்பது போன்ற வளர்ச்சிக்கான திட்டங்கள் குறித்து தலைமை செயற்குழு உறுப்பினர் பால். பிரபாகரன் விளக்கவுரையாற்றினார்.

கூட்டத்தில் மாவட்டத் தலைவர் பொறிஞர் அம்புரோசு, மாவட்ட செயலாளர் கோ.அ.குமார், தூத்துக்குடி மாநகர செயலாளர் பால்.அறிவழகன், மாவட்ட துணைச் செயலாளர் க. மதன், மாநகர இணைச் செயலாளர் இரவிசங்கர், மாவட்ட அமைப்பாளர் ச.கா.பாலசுப்பிரமணியன், தமிழ்நாடு மாணவர் கழக பொறுப்பாளர் வ. அகரன், ஆழ்வை ஒன்றிய செயலாளர் இரா. உதயக்குமார், நெல்லை சி.ஆ. காசிராசன், அ. அறிவுபித்தன், வீர பெருமாள், செ. செல்லத்துரை மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

**29.1.2011** இல் செய்துங்க நல்லூரில் பெரியாரியல் கொள்கை விளக்கப் பொதுக் கூட்டம், மந்திரமா ? தந்திரமா ? நிகழ்வுடன் நடத்துவது என்றும், தூத்துக்குடி, நெல்லை தோழர்களுக்கு **6.2.2011** அன்று தூத்துக்குடி, பதுக்கோட்டையில் வைத்து பயிற்சி முகாம் நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

**23.10.2010**-ல் நடைபெற்ற தென் திருப்பேரை கூட்டத்தின் வரவு செலவு **20.11.2010** இல் நடைபெற்ற சாதி தீண்டாமை இழிவு ஒழிப்புப் பரப்புரை பயணத்தின் வரவு செலவு அறிக்கைத் தாக்கல் செய்யப்பட்டு அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. க. மதன் நன்றி கூறினார்.

# காளிங்கராயன்பாளையத்தில் கழகக் கூட்டம்

ஈரோடு மாவட்டம், பவானி அருகிலுள்ள காளிங்கராயன்பாளையத்தில் தந்தை பெரியாரின் **13**வது பிறந்த நாள் விழா பொதுக் கூட்டம், ஈரோடு மாவட்ட தலைவர் நாத்திகசோதி தலைமையேற்கவும், மாவட்ட செயலாளர் இராம. இளங்கோவன் முன்னிலை வகிக்கவும் **18.12.2010** அன்று மாலை நடிகவேள் எம்.ஆர்.ராதா திடலில் நடைபெற்றது.

சிற்பி இராசன் ‘மந்திரமா தந்திரமா’ நிகழ்ச்சி, அனைவரையும் பெரு மகிழ்ச்சிக்கு உள்ளாக்கியது.

தனக்கே உரிய நகைச்சுவைப் பேச்சால் கா.சு.வேலுச்சாமி (தலைமைக் கழக பேச்சாளர்) பேசியது, கூடியிருந்த அனைவரையும் உள்ளம் கவரச் செய்தது, வயிறு குலுங்க சிரிக்கவும் வைத்தது.

பெண்களும் அதிக அளவில் கலந்து கொண்டனர் என்பது பெரும் சிறப்பாகும். நடந்த நமது கூட்டத்திற்கு ம.தி.மு.க. தோழர்கள் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் நிதியும் கொடுத்து உதவினர்.

கூட்டத்திற்கான ஏற்பாடுகளை பவானி நகர கழகத தலைவர் மு.ஈசுவர மூர்த்தி, நகர கழக செயலர் ஓவியர் பா.சி.பழநிச்சாமி, ந. வேணு, வினோத், குமாரபாளையம் தி.க. கைலாசம், சாமிநாதன் ஆகியோர் செய்தனர்.

மாலை **6.30** மணிக்கு துவங்கிய கூட்டம் இரவு **11** மணிக்கு முடிவடைந்தது. கடும் பனியிலும் மக்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டது அனைவரையும் ஆச்சரியப்பட வைத்தது.

ம.தி.மு.க. கவுன்சிலர் தோழர் கன்னையன் அனைவருக்கும் தேநீர் வழங்கினார்.

## புதிய வெளியீடுகள்

**பார்ப்பன அரசு – அருந்ததிராய்**

(சென்னையில் உள்நாட்டு எதிர்ப்பு கூட்டமைப்பு நடத்திய கூட்டத்தில் அருந்ததிராய் பங்கேற்று நிகழ்த்திய ஆங்கில உரையை, பெரியார் திராவிடர் கழகம் தமிழில் வெளியிட்டிருக்கிறது)

பக்கங்கள் : 30; விலை : ரூ.10

**கருந்திணை: ஒரு அறிமுகம்**

வெளியீடு: கருந்திணை, 1-810 முத்தமிழ் நகர், அடியனூத்து அஞ்சல், திண்டுக்கல் - 624 003.

பெரியார் கொள்கைக்காக உழைத்து உழைத்து இறுதிக் காலத்தில் அடையாளமிழந்து, வாழ்க்கையை முடித்துக் கொள்ளும் பெரியார் தொண்டர்கள் ஏராளம். அத்தகைய அவலங்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் முயற்சியே - “கருந்திணை”. கருந்திணையின் நோக்கத்தை விளக்குகிறது இந்த வெளியீடு.

## மதுரையில் பெரியார் சிலைக்கு மாலை


மாநகர் மாவட்டத்தின் சார்பாக வழக்கறிஞர் அ. பெரியசாமி தலைமையில் நீதிமன்றத்திலிருந்து ஊர்வலமாகச் சென்று மு. தமிழ்ப்பித்தன், ஸ்டாலின், அ.முருகேசன், விடுதலை சேகர், வெண்மணி, வாசுகி, நாசர், இளங்கோ, வழக்கறிஞர்கள் பகத்சிங், பெரியார் வேந்தன், மு.க. வையவன் மற்றும் முப்பது தோழர்கள் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தனர்.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 20th January 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



# புரட்சிப் பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | periyardk.org | திருவள்ளுவர் ஆண்டு 2042 | ஜனவரி 27, 2011 | புரட்சி 10 | முழக்கம் 2 | விலை: ரூ.2.50


# ‘மகர ஜோதி’ மோசடி அம்பலம்

அய்யப்பன் விரதம் இருந்து சபரிமலைக்கு லட்சக் கணக்கில் குவிகிறார்கள் பக்தர்கள். பயணத்தின்போது சாலையில் வாகன விபத்துகளில் பலர் உயிரிழக்கிறார்கள். இப்போது வாகன விபத்துகளோடு மகர ஜோதியை தரிசிக்கச் சென்ற பக்தர்கள் கூட்ட நெரிசலில் சிக்கி 102 பேர் உயிரிழந்துள்ளனர் என்ற துயரமான செய்தி வெளி வந்துள்ளது. உண்மையிலே இந்த பக்தர்களின் மரணத்துக்காக நாம் வேதனைப்படுகிறோம். அவர்களின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த வேதனையையும், துயரங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். அய்யப்பனுக்கோ, அல்லது அய்யப்பன் விரதத்துக்கோ, ஏதேனும் சக்தி இருந்திருந்தால், இப்படி மனித உயிர்கள் மடிவதை தடுத்திருக்க மாட்டானா, இவ்வளவுக்குப் பிறகும், அய்யப்பன் சக்தியை நம்பிக் கொண்டிருக்கலாமா ? என்று சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறோம். குடும்ப உறுப்பினர்கள் - குறிப்பாக பெண்கள், இத்தகைய ஆபத்துகளை விலைக்கு வாங்க வேண்டாம் என்று மாலை போடுகிற, குடும்ப ஆண்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டும்.


மிக மோசமான காட்டுப் பாதையில் பக்தர்கள் நடந்து செல்கிறார்கள். அவர்களுக்கு உரிய பாதுகாப்பு வசதிகள் இல்லை என்றெல்லாம் புகார்கள் வருகின்றன. ஆண்டவன் காப்பாற்றுவான் என்று நம்புவதில் அர்த்தமில்லை என்பதைத் தெளிவாக புரிந்து கொண்ட ஊடகங்கள், நீதிமன்றங்கள், அரசுதான் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து பக்தர்களைக் காப்பாற்ற வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றன. இது பக்தி உணர்வைப் புண்படுத்தும் நடவடிக்கை என்று எவரும் புகார் கூற முடியாது.

“அய்யோ, அய்யப்பா உன்னை நம்பித்தானே கடும் விரதமிருந்து எங்கள் அண்ணனும், தம்பிகளும், கணவர்களும், குடும்பத்தினரும் வந்தார்கள்; இப்படிக் கைவிடலாமா ?” என்று உறுப்பினர்களை இழந்து தவிக்கும் ஒவ்வொரு குடும்பத்தினரும் நிச்சயம் கதறியிருப்பார்கள் !

இந்த விபத்தால் பதறிப் போன கேரளாவின் உயர்நீதிமன்றமே தானாகவே முன் வந்து, இந்த வழக்கை விசாரணைக்கு ஏற்றுக் கொண்டது. விபத்து பற்றி விளக்கமளிக்குமாறு கேரள காவல்துறை, வனத்துறை, கோயிலை நிர்வகிக்கும் தேவஸ்வம்போர்டு ஆகிய வற்றுக்கு தாக்கீது அனுப்பியது. காவல்துறை தலைமை இயக்குனர் தாக்கல் செய்த அறிக்கையில் போதிய விளக்கு வசதி செய்யப்படவில்லை. கார், ஆட்டோ போன்ற வாகனங்களை நிறுத்துவதற்கு வனத்துறை, போதிய இடவசதி செய்து தரவில்லை என்று கூறிவிட்டார். கோயில் நிர்வாகக் குழு தாக்கல் செய்த அறிக்கையில், காவல் துறையையும், வனத்துறையையும் குற்றம் சாட்டியது. விபத்து நடந்த இடம், புலிகள் வாழும் பாதுகாப்புப் பகுதி என்பதால், தங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை என்றும், கோவிலுக்கு செல்லவும், திரும்பவும் உள்ள பாதை குறுகலானது என்பதால், வாகன நிறுத்தங்களுக்கு ஏற்பாடு செய்ய முடியவில்லை என்றும் சமாதானம் கூறியது.

இவ்வளவு ஆபத்துகள் நிறைந்த பகுதியில் ‘மகர ஜோதி’ என்ற ‘புனித நட்சத்திரம்’ அய்யப்பன் அருளால் தோன்றுகிறது என்ற ஒரு நம்பிக்கையைப் பரப்பி, பக்தர்களை நம்ப வைத்து, பெரும் கூட்டத்தை திரட்டுகிறார்கள். இதற்கு கேரள அரசும், கோயில் நிர்வாகமும் உடந்தையாக உள்ளது. திட்டமிட்டு பரப்பப்படுகிற, மூடநம்பிக்கைகளை கேள்விக்குள்ளாக்க வேண்டியது மனித நேயக் கடமை என்ற நிலைக்குத் தள்ளப்பட்ட உயர்நீதிமன்ற நீதிபதிகள், கோயில் நிர்வாகத்தின் சார்பில் வாதிட்ட வழக்கறிஞரிடம் நேரடியாகவே ஒரு கேள்வியை கேட்டுள்ளனர்.

இந்த மகரஜோதி, உண்மையிலேயே தோன்றும் புனித நட்சத்திரமா ? அல்லது மனிதர்களால் செயற்கையாக ஏற்றப்படும் ஒளியா என்று நீதிபதிகள் கேட்டுள்ளனர். இந்தக் கேள்வியை சற்றும் எதிர்பார்க்காத கோயில் நிர்வாகத்தின் வழக்கறிஞர், “தெய்வீக நட்சத்திரமாக பக்தர்கள் தான் நம்பு கிறார்கள். ஆனால் அதுபோல் கோயில் நிர்வாகம் விளம்பரம் செய்யவில்லை” என்று கூறி நழுவிக் கொண்டு விட்டார். ஆம், அது தெய்வீக நட்சத்திரம் என்று நீதிமன்றத்தில், வழக்கறிஞர் பொய் கூற முடியாது. ஆனால், உண்மை என்ன என்பதை பொது மக்களுக்கு தெரிவிக்க வேண்டும் என்று உயர்நீதி மன்ற நீதிபதிகள் கண்டிப்பாகக் கூறியுள்ளார்.



மகரஜோதி விளக்கை ஏற்ற - மலை உச்சியில் தேவஸ்வம் போர்டு மலை உச்சியில் ரகசியமாக அமைத்துள்ள சிமெண்ட் திண்ணை - படம் ‘இந்து’ ஏடு

கேரளாவில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த அச்சுதானந்தன் முதல்வர்; அவரது தலைமையில் கேரள இடது ஜனநாயக முன்னணி ஆட்சி நடக்கிறது.

நீதிமன்றமே, இப்படி நியாயமான அறிவார்ந்த கேள்விகளை கவலையுடன் முன் வைக்கும் போது மார்க்சிஸ்ட் கட்சி முதல்வரோ, “மக்களின் நம்பிக்கையில் நாங்கள் தலையிட மாட்டோம்; மகரஜோதியின் உண்மையைக் கண்டறிய சோதிடர்களிடமோ அல்லது வானியல் துறை விஞ்ஞானிகளிடமோ விசாரணையும் நடத்த மாட்டோம்; பொன்னம்பலமேடு பகுதி முழுதும் வானில் தெரியும் ‘மகர ஜோதியை’ புனித

## மார்க்சிஸ்ட் முதல்வர் மூடத்தனத்துக்கு துணைபோகும் அவலம்

நட்சத்திரம் என்றே பக்தர்கள் நம்புகிறார்கள். எனவே நாங்கள் தலையிட மாட்டோம்” என்று கூறிவிட்டார்.

இதேபோன்ற தீர்ப்பைத்தான் பாபர் மசூதி இடிப்பு வழக்கில் அலகாபாத் நீதிபதிகளும், பாபர் மசூதி உள்ள இடம்தான் ராமன் பிறந்த இடம் என்று பக்தர்கள் நம்பு கிறார்கள் என்று கூறினர். அலகாபாத் தீர்ப்பை கடுமையாக எதிர்க்கும் மார்க்சிஸ்ட் கட்சிதான், இப்போது அதே கருத்தை - மகரஜோதி மோசடியை மறைப்பதற்கும் முன் வைக்கிறது என்றால், இந்த அவலத்தை எங்கே போய் அழுது தொலைப்பது ? குஜராத் மோடியின் குரலை கேரளாவில் அச்சுதானந்தன் அப்படியே எதிரொலிப்பது தான் மதச்சார்பின்மையா ? வகுப்புவாத எதிர்ப்பா ? என்று கேட்கிறோம்.

இந்த நிலையில், பார்ப்பன ஏடான ‘இந்து’ (ஜன.22) மகர ஜோதியின் தெய்வீக மோசடியை ஆதாரத்துடன் அம்பலப் படுத்தியிருக்கிறது. திருவாங்கூர் தேவஸ்வம் போர்டு தலைவர் இராஜகோபால நாயர், மகர ஜோதி, மனிதர்களால் ஏற்றப்படும் விளக்குதான் என்று ஒப்புக் கொண்டுள்ளார். இதில் தேவஸ்வம் போர்டுக்கு எந்தப் பங்கும் இல்லை என்று கூறி விட்டார்.

“ஒரு காலத்தில் பொன்னம்பலமேடு பகுதியில் மலைகளில் வாழ்ந்த மலைவாசிகள் ஆண்டுதோறும் மகரவிளக்கு ஏற்றி, விழா நடத்துவார்கள். பிற்காலங்களில் அவர்கள் மலைப் பகுதியிலிருந்து வெளியேறி விட்டனர்” என்று கூறியுள்ளார்.

அய்யப்பன் கோயிலோடு பாரம்பர்யமாக நெருக்கமான உறவு கொண்டவர்கள், பாண்டலம் அரண்மனையும், அதில் வாழ்ந்த மன்னர்களின் வாரிசுகளும். அந்த அரண்மனையின் நிர்வாகக் குழு தலைவரான பி. இராமவர்ம ராஜாவும், மூத்த அர்ச்சகரான (தாந்திரி) கண்டரேரு மகேசுவரரு என்பவரும் மகரஜோதி மனிதர்களால் ஏற்றப்படும் விளக்குதான் என்று ஒப்புக் கெண்டுள்ளனர். கடந்த காலங்களில் மலை உச்சியில் வாழ்ந்த பழங்குடி மக்களின் ‘மகர விளக்கு’ விழா கொண்டாட்டத்தின் தொடர்ச்சியே இது என்பதை அவர்களும் உறுதிப்படுத்தினர்.

“மகர ஜோதி சம்பவத்தில் பாண்டலம் அரண்மனை வாரிசுகள் எப்போதுமே விலகியே நிற்கிறார்கள். மனிதர்களால் ஏற்றப்படும் இந்த ஒளி சில சுயநல சக்திகளால், திட்டமிட்டு உருவாக்கப்பட்டதாகும். பாண்டலம் அரண்மனையிலிருந்து புனித நகைகளைக் கொண்டு வந்து, அய்யப்பனை அலங்கரித்து, “தீப ஆராதனை” நடப்பது வழக்கம். இந்த தீப ஆராதனையின் சிறப்பைக் குலைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, பாண்டலம் அரண்மனை வாரிசுகளின் முக்கியத்துவத்தைக் குலைக்க, சில சுயநல சக்திகள் ‘மகர ஜோதி’யை உருவாக்கினார்கள்” என்று அவர்கள் இருவரும் கூறியுள்ளனர்.

அய்யப்ப சேவா சங்க தேசிய துணைத் தலைவராக உள்ள டி. விஜயகுமார் என்பவரும், “இது மனிதர்களால் ஏற்றப்படுவதுதான். அதற்காக, மக்களின் நம்பிக்கையில் நீதிமன்றங்கள் குறுக்கீடுவதை ஏற்க முடியாது” என்று கூறியுள்ளார்.

நாயர் சேவைக் கழக செயலாளர் ஜி. சுகுமாறன் நாயர் கூறுகையில், “மலை உச்சியில் வாழ்ந்த பழங்குடி மக்கள் ஆண்டுதோறும் நடத்திய விழாவின் தொடர்ச்சிதான் இது. அவர்கள் தான் விளக்கு ஏற்றி கொண்டாடி வந்தார்கள். பொன்னம்பலமேடு பகுதியில் தான் முதலில் ‘அய்யப்பன்’ கோயில் இருந்தது. பிறகு இடமாற்றம் செய்யப்பட்டது” என்று கூறினார்.

(4 ஆம் பக்கம்)

## கழகத் தோழர்களுக்கு முக்கிய வேண்டுகோள்!

அரசு திட்டங்களின் கீழ் கட்டப்பட்டுள்ள தீண்டாமைக்கான இரட்டைச் சுடுகாடுகள் பற்றிய முழுமையான விவரங்களைத் தயாரித்து, கழகத் தலைவர் கொளத்தூர் மணி மற்றும் ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ ஏட்டுக்கு உடன் அனுப்பிடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

– தலைமைக் கழகம்

# அரசு பொது மருத்துவமனைக்கு ராஜீவ் காந்தி பெயரா?

சென்னை பொது மருத்துவமனைக்கு ராஜீவ் காந்தி பெயரை சூட்டுவதாக தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி கூட்டணி கட்சியான காங்கிரசை திருப்திப்படுத்துவதற்காக அறிவித்துள்ளார். பெயர் சூட்டுவது, விருதுகள் வழங்குவது எல்லாம் தகுதிகளுக்கான மதிப்புகளை இழந்து விட்டன. அரசியல் கூட்டணிகளை திருப்திப்படுத்தவும் துதி பாடிகளை மகிழ்விக்கவும் முதலமைச்சர் வாரி வழங்கும் பரிசுகளாகி விட்டன. தி.மு.க.வுக்கு எதிராக போர்க்கொடி உயர்த்தி வரும் காங்கிரஸ்காரர்களில் ஒருவரான ஈ.வெ.கி.எஸ். இளங்கோவன், சென்னை பொது மருத்துவமனைக்கு ராஜீவ் காந்தி பெயரை சூட்டக் கோரி, சில மாதங்களுக்கு முன் வலியுறுத்தினார். உடனே கி.வீரமணி அறிக்கை ஒன்றை வெளியிட்டார். சென்னை பொது மருத்துவமனைக்கு தந்தை பெரியார் பெயரை சூட்ட வேண்டும் என்று அந்த அறிக்கை கூறியது. அப்போது தி.மு.க. காங்கிரஸ் கூட்டணிக்குள் 'விரிசல்' வெடித்திருந்த காலம். இப்போது கூட்டணி பேரங்கள் முடிந்த நிலையில் சட்டசபையில் காங்கிரஸ் உறுப்பினர் பீட்டர் அல்போன்சு கோரிக்கை வைத்தவுடன், உடனே கலைஞர் கருணாநிதி ஏற்றுக் கொண்டு மருத்துவ மனைக்கு ராஜீவ்காந்தி பெயரை சூட்டி விட்டார். ஈ.வெ.கி.எஸ். இளங்கோவன் வலியுறுத்தியபோது அதை மறுத்து, பெரியார் பெயரை சூட்ட வேண்டும் என்று அறிக்கை விடுத்த கி.வீரமணி, இப்போது வழக்கம் போல வாயை மூடிக் கொண்டு விட்டார்.

ஏற்கனவே சென்னை நகரத்தின் முக்கிய சாலைகளில் ஒன்றான பழைய மகாபலிபுரம் சாலைக்கு ராஜீவ்காந்தி பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. இப்போது சென்னை பொது மருத்துவமனைக்கு பெயர் சூட்ட தமிழ்நாட்டில் தகுதியான தலைவர்கள் இல்லையா ? உ.பி.யிலே, பீகாரிலே, ராஜஸ்தானிலோ, அங்கே உள்ள அரசு நிறுவனங்களுக்கு தமிழகத் தலைவர்கள் பெயர்களை சூட்டுகிறார்களா ?

தமிழ்நாட்டின் பெயரைக்கூட ராஜீவ்காந்தி நாடு என்று மாற்ற வேண்டும் என்று எவராவது ஒரு காங்கிரசார் கோரிக்கை வைத்தால், அதைச் செய்வதற்குக்கூட கலைஞர் கருணாநிதி தயாராகிவிடுவார் போலிருக்கிறது.

மாவட்டங்களுக்கும், போக்குவரத்துக் கழகங்களுக்கும் சூட்டப்பட்டிருந்த தலைவர்களின் பெயர்களையெல்லாம் நீக்கியது, இதே கலைஞர் கருணாநிதிதான். அப்போது கூட்டணியில் இருந்த தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் மூப்பனார், அனைத்துக் கட்சிக் கூட்டம் ஒன்றில் இந்தக் கோரிக்கையை வைத்தார். உடனே கலைஞர் கருணாநிதி ஏற்றுக் கொண்டார். இப்போதும் காங்கிரஸ் கூட்டணிக்காக பொது மருத்துவமனைக்கு ராஜீவ் காந்தி பெயர் சூட்டப்பட்டுவிட்டது.

அன்று தன் பங்குக்கு இந்திய ராணுவத்தை ஈழத்துக்கு அனுப்பி, பல்லாயிரக்கணக்கான தமிழர்களை ராணுவம் பிணமாக்கியதற்கு காரணமாக இருந்தவர் ராஜீவ் காந்தி.

இன்று - இந்திய ராணுவ உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்கி, ஈழத்தில் பல்லாயிரக்கணக்கான தமிழர்களைப் படுகொலை செய்யக் காரணமாக இருந்தவர் அவரது மனைவி சோனியா காந்தி.

தமிழர்களைக் கொன்று குவித்த குடும்பத்துக்கு, தமிழ்நாட்டில் பெருமை செய்து மகிழ்ச்சிக் கூத்தாடுகிறார் - கலைஞர் கருணாநிதி.

அந்தோ, தமிழா, உனது தாழ்நிலையைப் பார்த்தாயா ?

## நன்கொடை

கல்லக்குறிச்சி வட்டம், கருங்குழியைச் சார்ந்த தோழர் ச.ந. வெற்றிவேல் கயல்விழி கழக ஏட்டுக்கு கழகத் தலைவரிடம் ரூ.500/- நன்கொடை வழங்கினார். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆ 99416 13535

### திருமங்கலக்குடி கோவிந்தராசனின் மகத்தான தொண்டு

# பெரியார் இயக்கத்தின் மெழுகுவர்த்திகள்

*பெரியார் இயக்கத்துக்காக உழைத்து உள்ளூர் மட்டத்தில் போராடி சாதனைகள் புரிந்த எத்தனையோ சுயமரியாதை வீரர்கள் அடையாளமின்றி புதைந்து போய்விட்டார்கள். அவர்களின் இறுதிக்கால வாழ்க்கை இரத்தக் கண்ணீர் வரவழைக்கிறது. மாற்றுப் பண்பாட்டை நோக்கி பயணித்து எதிர் நீச்சலில் வாழும் சோகமான இறுதிக் காலங்கள் நிகழ்ந்து விடாமல் அவர்களின் சமுகப் பாதுகாப்பை உறுதி செய்யும் உன்னத முயற்சி தான் "கருந்திணை". அந்த அமைப்பு பற்றி வெளிவந்த வெளியீட்டில் திருமங்கலக்குடி கோவிந்தராசன் என்ற கறுப்பு 'மெழுகுவர்த்தி'யின் தொண்டுகள் விவரிக்கப்பட்டுள்ளன. அந்தப் பகுதியை வாசகர்களுடன் கனத்த இதயத்துடன் 'புரட்சிப் பெரியார் முழக்கம்' பகிர்ந்து கொள்கிறது.*

சுயமரியாதை இயக்கக் காலத்தில் பெரியாருக்குக் கிடைத்த பெரும் போராளி; மாயவரம் நடராசன், பாவலர் பாலசுந்தரம், முத்துப்பேட்டை தருமலிங்கம், தோழர்கள் குடந்தை ஜோசப், நாகை பாட்சா, சேக்தாவூத், நவநீத கிருஷ்ணன் போன்ற களப் போராளிகளின் உற்ற தோழர்; இலட்சக்கணக்கான தாழ்த்தப்பட்ட விவசாயத் தொழிலாளர்கள் மனிதர்களாக நடத்தப்பட்டதற்கு முக்கியக் காரணியாகத் திகழ்ந்த திராவிடர் விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் தஞ்சை மாவட்ட அமைப்பாளர், கும்பகோணம் ஒன்றிய திராவிடர் கழகச் செயலாளர் ஆகிய பொறுப்புகளுக்குப் பெருமை தேடித் தந்தவர் **திருமங்கலக்குடி கோவிந்தராசன்.**

1957 ஆம் ஆண்டு சாதியை ஒழிக்க அரசியல் சட்டத்தை எரித்து கடுங்காவல் தண்டனை பெற்றவர்கள் குறித்த தகவல்களை சேகரிக்க, பட்டியலைத் தயாரிக்க பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் நாடெங்கும் சுற்றியலைந்த போது அந்தக் கரு நெருப்பைக் கண்டுபிடித்து 2007 தஞ்சை சாதி ஒழிப்பு மாநாட்டில் பங்கேற்க வைத்தனர். அவரைப் போல்ஆசிட் தியாகராசன், நாகை பாட்சா முதலிய போராளிகளும் பெரியார் திராவிடர் கழகம் நடத்திய அந்த சாதி ஒழிப்பு மாநாட்டில் தமது வீரஞ்செறிந்த போராட்டங்களைப் பதிவு செய்தனர். ஆரவாரமில்லாத அடுக்குமொழியில் இல்லாத அமைதியான அழுத்தமான அவர்களது உரையால் ஈர்க்கப்பட்டு அவர்களை நேரில் சந்தித்து விரிவாக அவர்களது அனுபவங்களைக் கேட்க வேண்டும் என்ற எண்ணத்தில் பெ.தி.க. தலைவர்களும் தோழர்களும் சிலரைச் சந்தித்தோம். 2008 ஆம் ஆண்டு ஜனவரியில் கும்பகோணம் அருகிலுள்ள திருமங்கலக்குடியில் இற்றுப் போன கிடுகுகளைத் தாங்கி நிற்கும் விரிசல் சுவர்களைக் கொண்ட நூறு சதுர அடி பரப்பே உள்ள ஒரு வீட்டில் கம்பீரமாக வாழும் தோழர் கோவிந்தராசன் அவர்களைச் சந்தித்தோம். அவருக்கு வயது 90.

பல முக்கியச் செய்திகளை, மறைக்கப்பட்ட வரலாறுகளை முதன்முறையாக அவரிடம் கேட்டறிந்தோம். தற்செயலாக கிடைத்த கையடக்க வீடியோவிலும் அவற்றைப் பதிவு செய்தோம். கோவிந்தராசன் அவர்கள் கூறிய பல வரலாறுகள் திராவிடர் இயக்கத்தின் சாதனைகள் எங்களுக்கு மிகப் பெரும் ஆச்சரியத்தையும், இன்னும் நிறைய தகவல்களைத் தேடிப் பிடிக்க வேண்டும் என்ற வேகத்தையும் உண்டாக்கின. திராவிடர் கழகத்தில் பல ஆண்டுகள் பணியாற்றியபோதும் இந்தத் தகவல்கள் புத்தகங்கள் வாயிலாகவோ, பயிற்சி வகுப்புகள் வாயிலாகவோ எங்களுக்குக் கிடைக்கவில்லை. மறைக்கப்பட்ட அந்த தகவல்களில் ஒரு சிலவற்றை கோடிட்டுக் காட்டுகிறோம்.

1930களில் 'குடிஅரசு' இதழ்களில் **சித்தர்காடு இராமையா** என்ற தோழர் "பரிதாபத்துக்குரிய பஞ்சமர்கள்" என்ற தலைப்பில் ஒரு தொடர் கட்டுரை எழுதி அது நூலாகவும் அப்போது வெளிவந்துள்ளது. சூரிய உதயத்தில் வயலில் கால் வைத்து சூரியன் மறையும் வரை சேற்றில் வெயிலில் மழையில் மாட்டோடு மாடாக உழைத்த தோழர்களின் துயரங்களையும், ஒன்னுக்குப் போக ஒதுங்கும்போதோ குழந்தைக்கு பாலூட்டும் போதோ கூட நேரம் அதிகமானதற்காக சவுக்கடி வாங்கிய பெண்களின் வேதனைகளையும், நடவு வயலில் குனிந்த தலை நிமிர்ந்தால் சவுக்கடி ! ஏன் அடித்தாய் என்று கேட்டால் சாணிப் பால் ! என்ற தண்டனைக் கொடுமைகளையும் விரிவாகப் பதிவு செய்தது அந்த நூல். அந் நூலில் வாயிலாக வெளிக் கொணரப்பட்ட கொடுமைகளை ஒழிக்கத்தான் பெரியாரால் திராவிடர் விவசாயத் தொழிலாளர் சங்கம் தொடங்கப் பட்டது. அந்த அமைப்பில் தஞ்சை மாவட்ட அமைப்பாளரான தோழர் கோவிந்தராசன் கடமையாற்றிய காலத்தில்.

### பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம்

நிலங்களில் பண்ணையாளாக உழைக்கும் தாழ்த்தப் பட்ட மக்கள் தமது திருமணத்திற்காக பவுன் 20 ரூபாயாக விற்ற காலத்தில் வெறும் 20 ரூபாயை மிராசுதார்களிடம் கடன் வாங்குவார்கள். அந்தக் கடனுக்காக தன்னையே அடமானமாக வைத்து பத்திரமாக எழுதி பண்ணையாரிடம் கொடுத்து கடன் வாங்குவார்கள். திருமணத்தின்போது வாங்கும் அந்தக் கடன் அவர்களது வாரிசுகளின் திருமணம் வரைகூட அடைபடாமல் பரம்பரை பரம்பரையாக நில உடமையாளர்களிடம் கொத்தடிமையாக, சோற்றை மட்டும் வலியாகப் பெற்று காலங்காலமாக உழைப்பார்கள். அந்த முறையை மாற்றி உழைப்புக்கு கூலி நிர்ணயம் செய்து கூலியையும் பெற்றுக் கொடுத்து அவர்களை அடிமை வாழ்விலிருந்து மீட்கப் போராடி வென்றது தி.க.வி.தொ. சங்கம். அப்படி எண்ணற்ற குடும்பங்களை மீட்டவர் தோழர் கோவிந்தராசன்.

### தஞ்சை குத்தகைதாரர் சட்டம்

நில உடமையாளர்களிடம் உழைக்கும் தோழர்கள் குத்தகைக்கு நிலத்தை வாங்கி பயிரிட்டு வரும் வருமானத்தில் 60 சதவீதத்தை நில உடமையாளர்களிடம் கொடுத்து விட்டு 40 சதவீதத்தை தாம் பெற்று வந்தனர். எந்த உழைப்பும் நடப்பு முதலீடும் இல்லாத பண்ணையார் ஒருவனுக்கு வருமானத்தில் 60 சதம் ஏன் கொடுக்க வேண்டும். வெறும் 20 சதவீதம் கொடுத்தால் போதுமானது என அன்று பெரியார் போராட்டம் நடத்தச் சொல்லியிருக்கிறார். அதை ஏற்று பல போராட்டங்களை நடத்தி 25 சதம் பண்ணையாருக்கும் 75 சதம் உழைக்கும் குத்தகைதாரருக்கும் என மாபெரும் தலைகீழ் மாற்றத்தை உருவாக்கி வெற்றியை பெற்றுக் கொடுத்த போராளிகளில் முக்கியமானவர் தோழர் கோவிந்தராசன்.

அதேபோல பண்ணையார் முப்போகத்தில் (ஆண்டுக்கு 3 முறை விளைச்சல்) குருவை பட்டத்தை ஒருவருக்கு குத்தகை விட்டிருப்பார். அடுத்த போகத்தை சம்பாவை, தாளடியை வேறொருவருக்கு குத்தகைக்கு விட்டுவிடுவார். விவசாயத்தில் 3 மாதம் 4 மாதத்திலெல்லாம் எந்த வருமானமும் பார்க்க முடியாது. எந்த குத்தகையையும் எழுத்தில் பதிவு செய்யும் வழக்கமும் கிடையாது என்பதால் யாரும் நீதிமன்றத்துக்கும் போக முடியாது. அவ்வளவு வசதியும் விவசாயிக்கு இருக்காது. எனவே நில உடமை யாளர்கள் வைத்ததுதான் சட்டம். குத்தகை விவசாயிகள் அனைவருக்கும் ஒரு நிலையற்ற பாதுகாப்பற்ற பொருளாதார சூழலும், சுயமரியாதையற்ற மானமற்ற சமூக நிலையும் தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கும். அந்த மரபுகளை உடைக்க தஞ்சை குத்தகைதாரர் சட்டம் என்ற ஒரு சட்டத்தைக் கொண்டுவரப் போராடி வென்றது பெரியார் இயக்கம். மேலும் குத்தகைக்கான பரப்பு மொத்தமாக 50 ஏக்கர் 100 ஏக்கர் என குத்தகை எடுக்கக் கூடாது. மொத்தக் குத்தகை கூடாது. 20 ஏக்கருக்கு மேல் குத்தகை எடுத்தால் அவனும் நிலஉடமையாளர்கள் செய்யும் அனைத்துக் கொடுமைகளையும் செய்ய வேண்டியவனாகி விடுகிறான். எனவே குத்தகை மூன்று ஏக்கருக்கு மேல் இருக்கக் கூடாது என அதற்கும் ஒரு போராட்டம் நடத்தினார் பெரியார்.

இந்தச் சட்டத்தின்படி ஒரு குத்தகைக்காலம் என்பது குறைந்தது 3 ஆண்டுகள் இருக்க வேண்டும். அந்த மூன்று ஆண்டுகளுக்கு உள்ள குத்தகை உரிமை வருவாய்த்துறை அலுவலகங்களில் அவசியம் பதிவு செய்யப்பட வேண்டும். இந்தக் குறிப்பிட்ட குத்தகை காலத்துக்குள் நில உரிமையாளர்களுக்கும் குத்தகை எடுத்த விவசாயிகளுக்கும் இடையே நிலத் தகராறு மற்றும் குத்தகை தொடர்பான எந்தச் சிக்கலானாலும் அவர்கள் அதற்கென நீதிமன்றங்களுக்குப்போக வேண்டியதில்லை. வழக்கறிஞர்களுக்கு பணம் செலவழிக்க வேண்டியதில்லை. சமரச நீதிமன்றங்கள் என்ற ஒரு அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. அதில் வழக்கறிஞர்களுக்குப் பதிலாக சம்பந்தப்பட்ட விவசாயியே வாதாடலாம். அல்லது அவரது சம்மதத்துடன் விவசாயத் தொழிற்சங்கப் பொறுப்பாளர்கள் வாதாடலாம் என்ற புரட்சிகர மாற்றம் உருவானது. அனைத்து குத்தகைகளும் பதிவு செய்யப்பட்டது. குத்தகை தொடர்பாக அப்போது உண்டான ஆயிரக்கணக்கான வழக்குகளில் விவசாயத் தோழர்களுக்காக வாதாடி வழக்குகளை வென்று கொடுத்தவர் தோழர். கோவிந்தராசன்.

இச்சட்டத்தில் உள்ள பெரிய தீண்டாமை என்னவென்றால் இச்சட்டம் கீழத் தஞ்சை மாவட்டங்களில் மட்டும் தான் செல்லும். தருமபுரம் ஆதின மடம், திருப்பனந்தாள் மடம், சங்கரமடம், சூரியனார் கோவில் ஆகியவற்றுக்குச் சொந்தமான கோவில் நிலங்களில், பார்ப்பன நில உடமையாளர்கள் நிறைந்த மேலத் தஞ்சை பகுதி நிலங்களில் இச் சட்டம் நடைமுறைக்கு முதலில் வரவில்லை. அதற்கும் போராட்டம்.

கரும்பு, வாழை, தென்னை முதலிய பணப் பயிர்களை பயிரிடும் நிலங்களிலும் இச்சட்டம் செல்லாது என்ற நிலையை எதிர்த்து ஒரு போராட்டம்.

சாமியார்களை சாமிகளை பல்லக்கில் வைத்து தூக்கிச் சுமந்து செல்லும் முறையை எதிர்த்துப் போராட்டம்.

கள்ளுக்கடைகளில் இரட்டைக் குவளை முறையை எதிர்த்து குவளைகளை உடைத்துப் போராட்டம் என போராட்டமே வாழ்க்கையாகக் கொண்டவர் தோழர் கோவிந்தராசன். **(அடுத்த இதழில் முடியும்)**

## தமிழர் வீடுகளில் ராஜபக்சே படத்தை திணிக்கும் மத்திய அரசு

# உடுமலையில் ராஜபக்சே நாட்காட்டி எரிந்தது!





*இந்திய மத்திய அரசின் பாதுகாப்புத் துறையின் கீழ் இயங்கி வரும் சைனிக் பள்ளியில் வழங்கப்பட்ட ராஜபக்சே பட காலண்டர் எரிப்புப் போராட்டம் 19.1.2011 புதன் காலை 11 மணிக்கு திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை பேருந்து நிலையம் முன்பு பல்வேறு இயக்கங்களுடன் இணைந்து கழகத்தின் சார்பில் நடத்தப்பட்டது.*

மத்திய அரசின் பாதுகாப்புத் துறையின் கீழ் இந்தியாவில் 23 சைனிக் பள்ளிகள் இயங்கி வருகின்றன. அதில் தமிழ்நாட்டில் திருப்பூர் மாவட்டம் உடுமலைப் பேட்டைக்கு அருகிலுள்ள அமராவதி நகரிலுள்ள சைனிக் பள்ளியும் ஒன்று. தமிழ்நாட்டிலுள்ள ஒரே ஒரு சைனிக் பள்ளி இதுதான். இந்தப் பள்ளியில் பயிலும் 650 மாணவர்களுக்கு அமராவதி சைனிக் பள்ளியின் சார்பாக அச்சிட்ட மாத காலண்டரும், ஒட்டு மொத்த சைனிக் பள்ளிகளின் சொசைட்டியால் இராணுவ அமைச்சகத்தின் மூலம் அச்சிட்ட மாதக் காலண்டரும் வழங்கப்பட்டு இருக்கிறது. அமராவதி பள்ளியில் அச்சிட்ட காலண்டரில் அந்தப் பள்ளியில் கடந்த ஆண்டு நடைபெற்ற நிகழ்வுகளுடன் கூடிய புகைப்படங்கள் இடம் பெற்றிருந்தது. ஆனால், இந்திய இராணுவ அமைச்சகத்தின் சார்பாக வழங்கப்பட்ட நாட்காட்டி யில் ஒவ்வொரு மாதத்திற்கும் இரண்டு பள்ளிகள் வீதம் 12 மாதங்களுக்கு 24 பள்ளிகளில் கடந்த ஆண்டு நடந்த முக்கிய நிகழ்ச்சிகளின் புகைப்படங்கள் இடம் பெற்றிருக்கிறது.

அதில் ஏப்ரல் மாதத்தில் அசாம் மாநிலத்தில்ராஜ்பாரா அருகிலுள்ள கோல்பாரா பள்ளியின் சிறப்பாக, அப் பள்ளியின் மாணவர் ஒருவன் இனவெறியன் ராஜபக்சேவுடன் கை குலுக்குவதுபோன்ற படத்தை அச்சிட்டு உள்ளனர். மேலும் Everything is possible (எல்லாம் சாத்தியம்) என்று அப் பள்ளிக்கான சொற்றொடரை அச்சிட்டு உள்ளனர். எல்லாம் சாத்தியம் என்பது அப்பள்ளிக்கான குறிச் சொல்லாக இருந்தாலும், தமிழர்களை இலட்சக்கணக்கில் கொன்று குவித்த சர்வதேச போர்க் குற்றவாளியான ராஜபக்சேவே அந்த வாக்கியத்திற்கு உதாரணமாக காட்டி இருந்த விதம் தமிழர்களை கொல்வது சாத்தியம். தமிழர்களை அழிப்பது வீரச் செயல். தமிழர்களின் அழிவு உதாரணத்திற்கு உரியது என்பதைக் காட்டுவதாக இருந்தது. மீண்டும் மீண்டும் கொலைகாரன் ராஜபக்சேவை இந்திய காங்கிரஸ் அரசு அங்கீகரித்துக் கொண்டே இருக்கிறது - சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்றுக் கொண்டே இருக்கிறது என்பதை உலகுக்கு அம்பலப்படுத்தும் வகையில் கடந்த 13.01.2011 அன்று கழகப் பொதுச் செயலாளர் கோவை இராம கிருட்டிணன் பத்திரிகையாளர்களைச் சந்தித்தார்.

அதில், “தமிழர்களை கொன்று குவித்ததை இந்தியா அங்கீகரித்து பாராட்டி மகிழ்வதையே இது காட்டுகிறது. இலங்கையில் தமிழ் இனம் அழிக்கப்பட்ட சோக நிகழ்விலிருந்து உலகத் தமிழர்கள் மீள முடியாத நிலையில் ராஜபக்சே படத்தைப் போட்டு தமிழக மாணவர்களின் வீடுகளில் வைக்கச் சொல்வது வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவது போல உள்ளது. தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் படத்தை வைத்து இருந்தால் கைது செய்கிறார்கள். ஆனால், உலக நாடுகளால் சர்வதேசப் போர் குற்றவாளி என ஒதுக்கப்பட்ட ராஜபக்சே படத்தை இந்திய இராணுவமே அச்சிட்டு வழங்குவது எந்த வகையில் நியாயம்? “சைனிக் பள்ளி மாணவர்களுக்கு கொடுத்த காலண்டரை திரும்பப் பெற வேண்டும். இல்லையென்றால் ராஜபக்சே படத்துடன் கூடிய காலண்டர்களை 19.1.2011 அன்று உடுமலைபேட்டையில் பெரியார் திராவிடர் கழகம் எரிக்கும்” என்று கழகப் பொதுச்செயலாளர் கு. இராம கிருட்டிணன் அறிவித்தார்.

கழகத்தின் போராட்ட அறிவிப்பைத் தொடர்ந்து உடுமலைப்பேட்டை அமராவதி நகர் சைனிக் பள்ளிக்கு பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு, பகுதியே காவல்துறையினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது அவர்களுடைய கடுமையான சோதனையைக் கடந்தே எந்த வாகனங்களும் செல்லும் நிலை ஏற்பட்டது.

மத்திய காங்கிரஸ் அரசின் - சோனியா அரசின் தமிழின விரோதப் போக்கை வெளிப்படுத்த கழகம் போராட்டத்திற்கு தயாரானது. ஆதரவு சக்திகளை அணி திரட்டியது.


அறிவித்தபடி, 19.1.2011 புதன் கிழமை காலை 11 மணிக்கு போராட்டம் தொடங்கியது. காலை முதலே உடுமலைப்பேட்டை பேருந்து நிலையம் முன்பு காவல் துறையினர் பெருமளவு குவிக்கப்பட்டிருந்தனர். திருப்பூர், கோவை மாவட்ட கழகத் தோழர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

போராட்டத்திற்கு கழகப் பொதுச்செயலாளர் கு. இராம கிருட்டிணன் தலைமை வகித்தார். ம.தி.மு.க. மாவட்ட செயலாளர் ஆர்.டி. மாரியப்பன், பா.ம.க. நகரச் செயலாளர் காந்தி செல்வன், விடுதலை சிறுத்தைகள் கட்சி ஒன்றியச் செயலாளர் முருகன், நாம் தமிழர் ஒருங்கிணைப்பாளர் பாபு இராசேந்திர பிரசாத், ஆதித் தமிழர் பேரவை ஒன்றியச் செயலாளர் ஈழவேந்தன், புரட்சிப் புலிகள் மாவட்டச் செயலாளர் ப. முருகானந்தம், கழக மாவட்டத் தலைவர் சு. துரைசாமி ஆகியோர் முன்னிலையில் தொடங்கிய போராட்டத்தில் கழகப் பொதுச் செயலாளர் கு. இராமகிருட்டிணன், ம.தி.மு.க. மாவட்ட செயலாளர் ஆர்.டி. மாரியப்பன் ஆகியோர் பேசினர். 300-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு உணர்ச்சிப்பூர்வமாக முழக்கமிட்டு இந்திய அரசின் தமிழின விரோத போக்கை அம்பலப்படுத்தினர்.

போராட்டத்தில் கழகப் பொதுச் செயலாளர் கு. இராம கிருட்டிணன் பேசும் போது:

“இந்திய இராணுவம் நடத்துகின்ற சைனிக் பள்ளியில் இலட்சக்கணக்கான ஈழத் தமிழர்களை கொன்று குவித்த சர்வதேசப் போர்க் குற்றவாளி ராஜபக்சேவின் படத்தைப் போட்டு மாத நாட்காட்டியை வெளியிட்டு இருக்கின்றார்கள். தமிழ் மாணவர்களின் வீட்டிலே வைக்கச் சொல்லி இருக்கின்றார்கள்.

எனவே, பெரியார் திராவிடர் கழகம், ஒத்த அமைப்புகளுடன் இணைந்து இந்தப் போராட்டத்தை நடத்துகிறோம். பல்வேறு கட்சிகளின் சார்பாக உடுமலைப்பேட்டையில் அந்தக் காலண்டரை எரிக்கும் போராட்டத்தை நடத்துகின்றோம். அந்தக் காலண்டரை திரும்பப் பெறாவிட்டால் அடுத்தகட்டமாக இந்தப் போராட்டத்தை தமிழகம் முழுவதும் நடத்துவோம்! தலைநகர் டெல்லியிலும் நடத்துவோம்!” என்று கூறினார். பிறகு சைனிக் பள்ளியின் காலண்டரை தீ வைத்து உயரமாக தூக்கிப் பிடித்துக் கொண்டார். அதைப் பறிக்க காவல் துறையினர் முயன்று கொண்டிருந்தனர்.



பாதுகாப்புத் துறை வெளியிட்ட காலண்டர்

அப்போது கழகத் தோழர்கள் நாட்காட்டி நகல்களுக்கு தீ வைத்தனர். அதனைத் தடுக்க காவல் துறையினர் தோழர்களிடம் இருந்து காலண்டர் நகலைப் பறிக்க முயன்ற போது காவல்துறைக்கும் கழகத் தோழர்களுக்குமிடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டு அந்தப் பகுதியே பரபரப்பாக இருந்தது. காவல்துறை கழகத் தோழர் ஒருவரிடமிருந்து தீ வைத்த காலண்டரை பறிப்பதற்குள் வேறொரு தோழர் காலண்டர் நகலை பற்ற வைத்து விடுவார். இப்படியாக 15 நிமிடங்களுக்கு மேலாக சைனிக் பள்ளியின் ராஜபக்சே காலண்டர் ஆங்காங்கே எரிந்து கொண்டே இருந்தது.

இறுதியில் கழகத் தோழர்களையும் மற்ற கட்சிகளைச் சேர்ந்த தோழர்களையும் கைது செய்தனர். 192 தோழர்கள் கைதாகி திருமண மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்தனர். மண்டபத்தில் மதிய உணவிற்குப் பின் திருப்பூர் தியாகராசன் பாடல்கள் பாடினார். அனைத்து கட்சிகளைச் சார்ந்த தோழர்களும் பேசினர். காவல் துறையினரின் ஏற்பாட்டிலேயே பொதுக் கூட்டம் ஒன்று நடந்து முடிந்தது. போராட்டத்தில் கலந்து கொண்ட தோழர்களை வாழ்த்தி, அனைத்திந்திய விவசாயிகள் சங்க துணைச் செயலாளரும், கள் இயக்கத்தின் தலைவருமான நல்லுசாமி பேசினார். முன்னிரவு 7 மணிக்கு அனைத்துத் தோழர்களும் விடுவிக்கப்பட்டனர். கலந்து கொண்ட கழகத் தோழர்களுக்கும் மற்ற இயக்க தோழர்களுக்கும் திருப்பூர் மாவட்ட கழகச் செயலாளர் கா. கருமலையப்பன் நன்றி கூறினார்.

போராட்டத்தில் பங்கு கொண்ட தோழர்கள்: ம.தி.மு.க. சார்பில் உடுமலை நகரச் செயலாளர் லோகநாதன், உடுமலை ஒன்றிய செயலாளர் வி. இராஜசேகரன், விடுதலை சிறுத்தைகள் கட்சி நகர தொழிற்சங்க செயலாளர் திருவாரூர் தியாகராசன், மடத்துக்குளம் ஒன்றிய செயலாளர் ஈஸ்வரன், ஆதித் தமிழர் சனநாயகப் பேரவை மாநில அமைப்பாளர் பவுத்தன்.

கழகத்தின் சார்பில் தலைமை செயற்குழு உறுப்பினர் பொள்ளாச்சி இரா. மனோகரன், மாநில தகவல் தொடர்பாளர் ந. பிரகாசு, கோவை தெற்கு மாவட்டத் தலைவர் கலங்கல் வேலு, மாவட்ட செயலாளர் கா.சு. நாகராசன், மாவட்ட பொருளாளர் சூலூர் குமரவேல், கோவை வடக்கு மாவட்டத் தலைவர் இராமசாமி, மாவட்ட செயலாளர் வெள்ளமடை நாகராசு, கோவை மாநகரத் தலைவர் கோபால், படிப்பகப் பொறுப்பாளர் சா. கதிரவன், திருப்பூர் மாநகரத் தலைவர் முகில்ராசு, பல்லடம் ஒன்றியச் செயலாளர் விஜயன், பல்லடம் நகர அமைப்பாளர் ஜெகதீசு, நகரச் செயலாளர் சூரி. ஆறுமுகம், உடுமலை நகரத் தலைவர் யாழ். நடராசன், ஒன்றியச் செயலாளர் கோ. விசுவநாதன், மடத்துக்குளம் ஒன்றியத் தலைவர் நா. கதிரவன், ஒன்றியச் செயலாளர் சு. சிவானந்தம், ஒன்றிய துணைச் செயலாளர் மா. மோகன், உடுமலை நகர துணைச் செயலாளர் சிவசங்கர், பொள்ளாச்சி நகரச் செயலாளர் வே. வெள்ளிங்கிரி ஆனைமலை ஒன்றியச் செயலாளர் சம்பத், ஆனைமலை நகரச் செயலாளர் அரிதாசு, அவினாசி சோமு, அன்னூர் ஜோதிராம், அவினாசி ஒன்றிய அமைப்பாளர் சேவூர் செந்தில் குமார் உள்ளிட்ட பல தோழர்கள் கலந்து கொண்டனர்.

போராட்டத்திற்கான ஏற்பாடுகளை உடுமலை நகரச் செயலாளர் இரா.பாக்கியநாதன், நகரத் தலைவர் யாழ். நடராசன், ஒன்றியச் செயலாளர் கோ. விசுவநாதன், நகர துணைச் செயலாளர் சிவசங்கர், மடத்துக்குளம் ஒன்றியத் தலைவர் நா. கதிரவன், ஒன்றியச் செயலாளர் சு. சிவானந்தம், துணைச் செயலாளர் மா.மோகன், காரத்தொழுவு மயில்சாமி ஆகியோர் சிறப்பாகச் செய்திருந்தனர். ●

# மடத்துக்குளம் ஒன்றியத்தில் தெரு முனைக் கூட்டங்கள்

24.12.2010 அன்று தந்தை பெரியாரின் நினைவு நாளையொட்டி திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம் ஒன்றியத்தில் கழகத்தின் சார்பில் மூட நம்பிக்கை ஒழிப்பு தெருமுனைப் பிரச்சாரம் மற்றும் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

24.12.2010 அன்று மாலை 5 மணிக்கு காரத்தொழுவு, உடையார் பாளையம் பகுதியில் காரத்தொழுவு கிளை அமைப்பாளர் மயில்சாமி தலைமையில் தெருமுனைப் பிரச்சாரம் தொடங்கியது. உடுமலை நகரத் துணைச் செயலாளர் சிவசங்கர் 'ஜாதகம் வாஸ்து' குறித்து உரையாற்றத் தொடங்கியதுமே மக்கள் கூட்டம் கூடத் தொடங்கியது. அவரது பேச்சு மக்களை சிந்திக்கத் தூண்டும் வகையில் அமைந்தது. பிறகு தோழர் சிற்பி இராசன் நடத்திய 'மந்திரமா தந்திரமா' நிகழ்ச்சி கூடியிருந்த மக்களை ஆர்வத்துடன் கவனிக்க வைத்தது.

தொடர்ந்து உரையாற்றிய பொள்ளாச்சி மனோகரன், சமுதாயத்தில் நிலவும் மூட நம்பிக்கைகள் அவற்றை ஒழிக்க பெரியார் செய்த தொண்டுகள் குறித்த உரையை மக்கள் ஆர்வத்துடன் கேட்டனர். பிறகு ஒன்றிய துணைச் செயலாளர் மா.மோகன் நன்றி கூற நிகழ்ச்சி நிறைவடைந்தது. நிகழ்ச்சியை முடித்தவுடன் மக்கள் "இன்னும் சிறிது நேரம் நிகழ்ச்சியை நடத்தியிருக்கலாம்" என்று கூறினர். ஒன்றிய செயலாளர் சு. சிவானந்தம், கிளை அமைப் பாளர் மயில்சாமி ஆகியோர் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மிகச் சிறப்பாக செய்திருந்தனர்.

**கடத்தூர்**

அடுத்து இரவு 7 மணிக்கு கடத்தூரில் கிளை செயலாளர் வே. அய்யப்பன் தலைமையில் பொதுக் கூட்டம் துவங்கியது. ஒன்றிய துணை செயலாளர் மா.மோகன் தொடக்க உரையாற்ற, சிவசங்கர் சமுதாயத்தில் நிலவும் மூடநம்பிக்கைகளை விரிவாக மக்களிடத்தில் எடுத்துரைத்தார். அவரைத் தொடர்ந்து கழக தலைமை செயற்குழு உறுப்பினர் பொள்ளாச்சி இரா. மனோகரன், சமுதாயத்தில் நிலவிய மூட நம்பிக்கைகளை ஒழிக்க பெரியார் நடத்திய போராட்டங்கள், இன்றைய சூழலில் பெரியார் இயக்கத்தின் தேவைகள் குறித்து நீண்ட உரையை நிகழ்த்தினார். அவரின் பேச்சு மக்களிடத்தில் நிலவும் மூட நம்பிக்கைகள், சாதீயம் போன்றவற்றை உடைத்தெறியும் வகையில் அமைந்தது. கூடியிருந்த இளைஞர்களிடத்தில் எழுச்சியை ஏற்படுத்தியது.

அவருக்குப் பின் தோழர் சிற்பி இராசன் 'மந்திரமா தந்திரமா' நிகழ்ச்சியை தொடங் கினார். அவர் நிகழ்த்திய தந்திரக் காட்சிகளையும், அதற்கு அவர் அளித்த விளக்கங் களையும் மக்கள் கரவொலி எழுப்பி, வரவேற்று விழிப்புணர்வடைந்தனர்.

பிறகு மடத்துக்குளம் ஒன்றிய தலைவர் நா. கதிரவன் நன்றி கூற நிகழ்ச்சி முடிவடைந்தது. கடும் பனி பொழிவிற்கு இடையே இரவு 10மணி வரை மக்கள் நிகழ்ச்சியை உன்னிப்பாக கவனித்தனர். பொதுக் கூட்டத்திற்கான ஏற்பாடுகளை கதிரவன், அய்யப்பன், சரவணன், மணி கண்டன், கார்த்திக், பழனிச்சாமி, இராமச்சந்திரன் ஆகியோர் சிறப்பாக செய் திருந்தனர்.

நிகழ்ச்சியில் பொள்ளாச்சி பிரகாசு, திருப்பூர் மாவட்ட செயலாளர் கா. கரு மலையப்பன், உடுமலை நகரத் தலைவர் யாழ். நடராசன், உடுமலை ஒன்றியச் செயலாளர் கோ. விசுவநாதன், உடுமலை நகரப் பொருளாளர் வேல் முருகன், இரமேசு, அரிதாசு மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

# கழக கொள்கைப் பயணம்: டிசம்பர் மாத பதிவுகள்

2010 ஆம் ஆண்டு கழகத்தின் கொள்கைப் பயணத்தின் தொகுப்பு ஏற்கனவே நவம்பர் மாதம் வரை 'புரட்சிப் பெரியார் முழக்க'த்தில் வெளியிடப்பட்டது. டிசம்பர் மாதத்தில் 'புரட்சிப் பெரியார் முழக்க'த்தில் பதிவான சில முக்கிய கழக நிகழ்வுகள்:

விடுதலைப் புலிகள் பயிற்சிப் பெற்ற களமாகிய கொளத்தூர் அருகே உள்ள புலியூர் பிரிவில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னணி தளபதி மாவீரர் பொன்னம்மாள் நினைவு நிழற்கூடப் பகுதியில் மாவீரர் நாள் வீர வணக்க நிகழ்வு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடந்தது. (நவம்பர் 27) புதுவை கழகத் தலைவர் லோகு அய்யப்பன், தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து, திருச்சியில் கழக ஆர்ப்பாட்டம் (நவம்பர் 26) தூத்துக்குடி மாவட்டக் கழகம், ஒரு நாள் முழுதும் சாதி தீண்டாமை இழிவு ஒழிப்புப் பரப்புரை நடத்தியது (நவம்பர் 20). லண்டனில் டிசம்பர் 2 ஆம் தேதி போர்க் குற்றவாளி ராஜபக்சே பங்கேற்கவிருந்த நிகழ்ச்சி, தமிழர்களின் கடும் எதிர்ப்பால் நிறுத்தப்பட்டது. அடுத்த நாளே சென்னையில் கழக முன்னணி அமைப்பான தமிழ்நாடு மாணவர் கழகம், தோழமை அமைப்புகளுடன் இணைந்து ராஜபக்சேவை கைது செய்யக் கோரி தடையை மீறி ஆர்ப்பாட்டம் நடத்தி, 200 தோழர்கள் கைதானார்கள். (டிச. 3)

கோவை நிகழ்ச்சியில் பங்கேற்க வந்த இலங்கை ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரை எதிர்த்து கழகம் முற்றுகைப் போராட்டம் நடத்தியதால், நிகழ்ச்சியில் பங்கேற்காமல், நாடாளுமன்ற உறுப்பினர் ஓட்டம் பிடித்தார். திருப்பூரில் மாவீரர் நாள் நிகழ்வை தோழர்கள் நடத்தினர். (நவ.27)

லோகு. அய்யப்பனை விடுதலை செய்யக் கோரி புதுவையில் கழகம் எழுச்சி ஆர்ப்பாட்டம் நடத்தியது. (டிச.3)

(முதல் பக்கத் தொடர்ச்சி)

எஸ்.என்.டி.பி. என்ற நாராயண குரு நிறுவிய சிறீ நாராயணன் தர்ம பரிபாலன யோகம் என்ற அமைப்பின் செயலாளர் வெள்ளப் பள்ளி நடேசன், "ஜோதியை மனிதர்கள் ஏற்றுகிறார்களா அல்லது ஆன்மிக நட்சத்திரமா என்ற விவாதமே தேவையற்றது; அரசின் பாதுகாப்பு குறைபாடுகளை திசை திருப்பும் நடவடிக்கை" என்று கூறி நழுவி விட்டார்.

1990 ஆம் ஆண்டு கோயில் நிர்வாகம் 'மகரஜோதி' ஏணியை உருவாக்க மலை உச்சியில் ரகசியமாக 'சிமெண்ட் திண்ணை' ஒன்றை கட்டியது. மலை உச்சியில் ஏறிப் போய் அதிகாரிகள் அனுமதி பெற்று, 2006 ஆம் ஆண்டு, இந்த 'சிமெண்ட் திண்ணை' படம் எடுக்கப்பட்டது. அந்தப் பகுதியில் எவரும் அனுமதிக்கப்படுவது இல்லை. அந்த சிமெண்ட் திண்ணைப் படத்தையும், 'இந்து' நாளேடு வெளியிட்டுள்ளது.

# தமிழீழ அரசுக்கு விடுதலை பெற்ற தெற்கு சூடான் அங்கீகாரம்

ஆப்பிரிக்காவில் உள்ளது சூடான் நாடு. இது ஆப்பிரிக்காவின் எண்ணெய் வளமிக்க நாடாகும். இங்கு ராணுவ புரட்சி நடத்தி 1989 ஆம் ஆண்டு ஆட்சியை பிடித்த ஓமர் அல் பசுீர் இஸ்லாமிய சட்டத்தை நாடு முழுவதும் அமல்படுத்த நடவடிக்கை எடுத்தார். இதற்கு தென்பகுதியில் கடும் எதிர்ப்பு எழுந்தது. இனக் கலவரம் வெடித்தது. வடக்கில் அரபு முஸ்லிம்களும், தெற்கில் பழங்குடி இன மக்களும், கிறிஸ்துவர்களும் பெரும்பான்மையாக வசித்து வருகிறார்கள். வடக்கு தங்களை புறக்கணிப்பதாக தெற்குவாசிகள் கருதினர்.

தெற்கில் ஏற்பட்ட இனக்கலவரத்தை தொடர்ந்து உருவான சூடான் மக்கள் விடுதலை இயக்கம் தெற்கு சூடானை தனியாக பிரித்து தனி நாடாக அறிவிக்க வேண்டும் என்று கூறி போராடி வந்தது. இந்த இயக்கம் ஆயுத போராட்டத்தை கையில் எடுத்தது.

2005 ஆம் ஆண்டு அரசுக்கும், இந்த இயக்கத்துக்கும் இடையில் அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி 2011 ஆம் ஆண்டு பொது வாக்கெடுப்பு நடத்தி நாட்டை பிரிப்பது என்று முடிவானது.

வாக்கெடுப்பில் தெற்கு சூடான் தனியாக பிரிவதற்கு பெரும்பாலான ஆதரவு கிடைத்துள்ளது.

தென் சூடான் விடுதலை நிகழ்வில் பங்கேற்க நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது. தனி நாட்டிற்கான வாக்கெடுப்பு அடுத்த வாரம் முழுமையடை கிறது. முடிவடைந்தவுடன் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதியை தென் சூடானுக்கு வருமாறு சூடான் மக்கள் விடுதலை இயக்கம் எஸ்.பி.எல்.எம். அழைத்துள்ளது. நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் விசுவநாதன் உருத்திரகுமாரன் வெளியிட்ட அறிக்கையில், 'இது அரசாங்கத்திற்கான அங்கீகாரம் மட்டுமின்றி ஈழ விடுதலைப் போராட்டத்திற்கான அங்கீகாரமும் ஆகும் என்று கூறியுள்ளார். விடுதலை பெற்ற தென் சூடான் மக்களின் மகிழ்ச்சியை ஈழத் தமிழர்கள் தெளிவாக புரிந்து கொள்வதுடன் அதில் இணைந்து கொள்கிறார்கள் என்றார்.

இந்த உறவு புதிதல்ல. மே 2009 இல் பில்டல்பியா நகரில் நடந்த நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் நிகழ்வில் சூடான் மக்கள் விடுதலை இயக்க பிரதிநிதி கலந்து கொண்டு, தென் சூடானின் விடுதலை போராட்டத்திற்கும், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் உள்ள ஒற்றுமை பற்றியும், விடுதலை போராட்டங்கள் சந்திக்கும் சவால்கள் பற்றியும் பேசினார். நாடு கடந்த தமிழீழ அரசை தெற்கு சூடான் அங்கிகரித்திருப்பது ஈழ விடுதலைக்கு சர்வதேச அரங்கில் கிடைத்துள்ள முதல் அங்கீகாரமாகும்.

# என் மகனைக் கண்டீர்களா?

(சிறைக் கொட்டடியில் தூக்குத் தண்டனை கைதியாக 20 ஆண்டுகளாக சிறைபட் டுள்ள பேரறிவாளனுக்காக அவரது தந்தை குயில்தாசன் - தமிழர் புத்தாண்டு வேண்டுதலாக எழுதியது)



*அய்யா!*
*என் மகனைக் கண்டீர்களா?*
*அம்மா!*
*நீங்கள் கண்டீர்களா?*
*பத்தொன்பது வயது சிறுவன்*
*இருபதாண்டுகளாகக்*
*காணவில்லை.*
*தேடித் தேடிச் சோர்ந்து போனேன்.*
*முதுமையால் இயலவில்லை*
*நீங்கள் உதவி செய்வீரா?*
*கண்கள் பஞ்சடைந்து போயின.*
*உங்களை எனக்குத் தெரியவில்லை.*
*நீங்கள் மனிதர்தானே?*
*நான் அனைவரையும் வேண்டுகிறேன்.*

*உங்கள் பிள்ளைகளெல்லாம்*
*மகிழ்ந்து விளையாடு மிடத்தில்*
*உடன் விளையாடுகிறானா?*
*சிறிதே பார்த்துச் சொல்லுங்கள்.*

*குடும்பத்தோடு நீங்கள்*
*கொண்டாடும்போது*
*பிள்ளைகளின் இலையில்*
*பலகாரங்களை*
*அள்ளிவைக்கும்போது*
*என் மகனையும்*
*நினைவு வந்தால்*
*சற்றுத் தேடுவீரா?*

*இரண்டகத்தாரும்,*
*இனப்பகைவரும்*
*எம்மகனை*
*இருட்டில் மறைத்தாரோ!*

*எப்போதும்*
*புன்னகையுடன் இருப்பான்*
*அழுதாலும்*
*நகைப்பதுபோல் தோன்றும்.*
*பிறர் துயர் உணர்ந்து*
*பிழியும் கண்கள்*
*முடிந்ததை உதவ முனைவான்.*
*பழகிய எவரும்*
*பிரிய நேர்ந்தால்*
*தமிழை விடுத்து*
*இசை தனித்தல்போல்*
*கலங்குவர்.*

*ஆண்ட பரம்பரையின்*
*அடலேறின் தோற்றம்*
*காலை பிறக்கும் கதிரின் வண்ணம்*
*செவ்வரி விழிகள்*
*சொல்லும் கொள்கைகள்.*
*திருக்குறள் தந்த*
*நல்லற உரைகள்.*
*தொலைநோக்குக் கணக்கில்*
*பெரியாரின் தீர்ப்பு.*
*இவை அவனின் அடையாளங்கள்.*
*அவன் பெயர் பேரறிவாளன்.*

*மானுட இனத்தோரே!*
*காலம் எம்மைத் தேய்ப்பதால்*
*கரைந்துவரும்*
*எம் உயிரைக் காப்பாற்ற*
*மீட்டுத்தர இரைஞ்சுகின்றேன்.*

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 27th January 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.